இதழ் - 15

ஆகஸ்ட் - 2026

# கேலக்ஸியின் விண்மீன் மின்னிதழ்

தாய்த் திருநாட்டின் சுதந்திரத்திற்காக உயிர்நீத்த தியாகிகளைப் போற்றுவோம்.
அனைவருக்கும் சுதந்திர தின வாழ்த்துகள்!



## "விமர்சனங்களே எழுத்துக்கு உரம்"

– எழுத்தாளர்
கண்ணன் விஸ்வகாந்தி

## நிஸ்வாவின் நிழலில்

– இளங்கோ ராமசாமி









ISBN 978-81-686259-4-5

9 788168 625945

www.vinmeenbooks.com

GALAXY BOOK SELLERS & PUBLISHERS

விண்மீன்
மின்னிதழ்

கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல
தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே
நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து.
- நாலடியார்

ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான்செயல் அரிது
- ஔவையார்

**பதிப்பாளர்**
பாலாஜி பாஸ்கரன்

**ஆசிரியர்**
பரிவை சே குமார்

**இணை ஆசிரியர்**
தேவதர்சினி நடராஜன்
இலக்கியா தவதுரைநாதன்

**வடிவமைப்பு**
சென் பாலன்
ஹரிபிரசாத்

**Vinmeen Books**
www.vinmeenbooks.com
+91 9597238858

GALAXY BOOK
SELLERS & PUBLISHERS

ISBN 978-81-686259-4-5

# தாய்மொழி

'தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே' அப்படிங்கிற பழமொழி ஒன்னு இருக்கு. இதைக் கிராமத்தில் பிறந்தவர்கள் அதிகம் கேட்டு வளர்ந்திருப்பார்கள். இந்தப் பழமொழியை இப்போது தமிழ் படும் பாட்டைப் பார்த்து 'தாயைப் பழித்தாலும் தமிழைப் பழிக்காதே' என்று மாற்றிக் கொள்ள வேண்டும் போல. ஆம் இன்று தமிழ் படும் பாட்டைப் பார்த்து மனசு வலிக்கிறது.

தமிழில் பேச வேண்டும், அதுவும் பெரியவர்களிடம் மரியாதையுடன் பேச வேண்டும் என்று வளர்க்கப்பட்ட தலைமுறை, அதற்கு அடுத்த தலைமுறையிடம் தமிழ் பாடுபடுவதைவிட, தமிழே தெரியாமல் ஒரு தலைமுறை உருவாகிக் கொண்டிருப்பதைப் பார்த்து வருத்தப்படத்தான் முடிகிறது. இங்கே ஊழலையும் ஊழல் செய்தவர்களையும் கட்டிக் காக்க அவர்கள் சார்ந்த அரசியல் கட்சிகள் மட்டுமின்றி, அதில் இருக்கும் கடைநிலைத் தொண்டன் வரை பாடுபட்டுக் கொண்டிருக்கும் போது தமிழை கொஞ்சம் கொஞ்சமாக அழித்துக் கொண்டிருக்கும் வந்தேறிகளையும், வாழ்ந்து கொண்டிருப்போர்களையும் கேள்வி கேட்க ஆட்கள் இல்லாமல் இருப்பது கேவலத்தின் உச்சம். இன்று ஊழல், போதை, கொலை எல்லாம் மக்களால் குறிப்பாக தான் சார்ந்த கட்சிக்கு முட்டுக் கொடுக்கும் மக்களால் இயல்பாக எடுத்துக் கொள்ளப்பட்டுவிட்டது. அப்படித்தான் தமிழின் அழிவுக்கான விதைகூட இயல்பாகிக் கொண்டிருக்கிறது.

இன்றைய தலைமுறைக்கு தமிழ் தெரியாது என்று சொல்வதுதான் மரியாதையாகத் தெரிகிறது. அதுவும் அவர்களைப் பெற்றவர்கள் தனது பிள்ளைகளுக்குத் தமிழ் தெரியாது என்று சொல்லும் போது ரொம்பவே மகிழ்வடைகிறார்கள். இன்று நமது கல்வியில் தமிழே படிக்காமல் ஆரம்பப் பள்ளி முதல் கடைசி வரைக்கும் படித்து முடித்துவிட முடியும். எந்த மாநிலத்திலும் தங்களது மொழியை விருப்பப்பாடமாக வைத்திருக்கவில்லை என்று நினைக்கிறேன்; அவர்களுக்கு அது கட்டாயப்பாடம், நமக்கோ அது விருப்பப்பாடம் என்றாலும் அது விரும்பாத பாடம் ஆகிவிட்டது. கல் தோன்றா என நாம் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டியதுதான், மெல்ல மெல்ல தமிழைச் சாகடித்து கொண்டிருக்கிறார்கள், நாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறோம். நமது வேடிக்கையால்தான் என் மதம் எனக்கு தமிழை விட அதிகம் கற்றுக் கொடுத்திருக்கிறது என ஒரு மக்கள் பிரதிநிதியால் பேச முடிகிறது.

இன்னைக்கு நாம் பேசும் தமிழுக்குள் 'and', 'so', 'like', 'ya', 'well' என்ற வார்த்தைகள் இல்லாமல் யாராலும் பேசமுடிவதில்லை என்பது வருத்தமான விசயம். அப்படிப் பேசுவதுதான் மரியாதை என்ற எண்ணமும் விழுந்துவிட்டது. சமீபத்தில் ஒரு சிறுகதையை தெரிந்த நண்பர் சிறப்பான சிறுகதை எனப் பகிர்ந்திருந்தார். இரண்டு பத்திக்கு மேல் வாசிக்க முடியவில்லை, பெரும்பாலான வார்த்தைகள் அப்படியே தமிழாக்கப்பட்ட ஆங்கில வார்த்தைகள், வாசிக்கும் போது வேப்பெண்ணையைக் குடித்தது போல் இருந்தது. பிலிப்பைனிகளின் மொழிக்கு எழுத்து வடிவம் இல்லை என்பார்கள், போகும் போக்கைப் பார்த்தால் நம் மொழிக்கு பேச்சு வடிவம் இல்லாமல் போய்விடும் போல.
தமிழைக் காப்போம்...

பரிவை சே குமார்

# இதழில்....


**சிறுகதைகள்:**

நான் என்பது... - அப்புசிவா

நம்பிக்கை - பாலமுருகன்.லோ

கண் காட்டும் நுதலானும் - க இரமேஷ்பாபு

**நேர்காணல்:**

'விமர்சனங்களே எழுத்துக்கு உரம்' – எழுத்தாளர் கண்ணன் விஸ்வகாந்தி

**வரலாற்றுத் தொடர்:**

சிலேடையில் சிக்கிய சோழம் (பகுதி 2) - கங்கா

**தொடர்கதை:**

இந்தியர் வீதி (அத்தியாயம் – 1) - கண்ணன் விஸ்வகாந்தி

**கட்டுரை:**

பெரிதினும் பெரிது கேள் - தமிழ்க்காதலன்

**கட்டுரைத் தொடர்:**

நிஸ்வாவின் நிழலில் (பகுதி-13) - இளங்கோ ராமசாமி



விண்மீன் மின்னிதழ்



**புத்தகப்பார்வை:**

மாதரசி - இராஜாராம்

**திரைப்பார்வை:**

சின்ன சின்ன ஆசை (மலையாளம்) - பரிவை சே.குமார்

**கவிதை:**

கலை - இரா.தங்கப்பாண்டியன்

# நான் என்பது...

### அப்புசிவா



கண்ணாடியில் மறுபடி தன்னைப் பார்த்தான் செல்வகுமார். 'மீசையும் தாடியும் மற்றவர்களைவிட அதிகமாக உனக்கு வருகிறது' என்று தன் அப்பா சொன்னது உண்மைதான் என்பதை உணர்ந்தான். ரகுராமனுக்கு இன்னமும் அரும்பு மீசைகூட வரவில்லை என்பதையும் யோசித்தான். சீப்பால் மீசையை சீவிவிட்டான். மெல்லிய அந்த மீசை, முறுக்க ஏதுவாக எலிவால் போல நீண்டு இருந்தது. கன்னத்தில் படந்த மெல்லிய தாடியில் சீப்பு விளையாடி கோடுகள் போட்டது.

"இன்னுமாடா தலை சீவற? நேரமாவல?" என்று அவன் அம்மா கத்தியதும் சீப்பை போட்டுவிட்டு பவுடரை லேசாக தீட்டிக்கொண்டு, பவுடரைத் தொட்டு நெற்றியில் நீறு போல வைத்துக்கொண்டு வெளியே வந்தான் செல்வகுமார். செல்வகுமாரின் அம்மா சுமதி, திண்ணையில் தட்டு வைத்து நான்கு இட்லிகள் போட்டிருந்தார். அவரின் சாம்பாருக்கும் இட்லிக்கும் தெருவே அடிமை. ஆனால் எவ்வளவு வியாபாரம் ஆனாலும் ஒன்பது மணிக்கு வாசலில் போட்டிருந்த இட்லிகடையை ஓரங்கட்டிவிடுவார்.

அவன் அப்பா ரங்கராஜ், மேஸ்திரி வேலைக்கு அதிகாலையிலேயே போய்விடுவார். அவருக்கு ஏற்கனவே ஒரு தடவை நெஞ்சுவலி வந்ததில் இருந்து அதிக பாரம் தூக்கக்கூடாது என்று ஹாஸ்பிடலில் சொல்லியிருந்தார்கள். சுமதி ஒன்பது மணிக்கு ரங்கராஜ் வேலை செய்யும் இடத்துக்கு ஓடிவிடுவார். செங்கல் எடுத்துக்கொடுப்பது, சிமெண்ட் தட்டு தூக்கித்தருவது என சித்தாள் வேலை. கூலி குறைவு என்றாலும் கணவரின் கூடவே இருந்து அவரை பார்த்துக்கொள்வது சுமதியின் மனதில் எழுதப்பட்ட கடமை.

"என்னாடா உனக்கு மட்டும் நீறு இவ்வளவு வெள்ளையா இருக்கு?" என்றார் பக்கத்து வீட்டு சரசு. அவர் காலையில் வந்து உட்கார்ந்தால் சுமதியின் இட்லிகடைக்கு கூடமாட உதவுவார். பதிலுக்கு போகும்போது காலை உணவு இங்கேயே அவருக்கு முடிந்துவிடும். சுமதியின் ஒரே ஒரு உற்ற சினேகிதி.

"அது வந்து..." என்று இழுத்தான் செல்வகுமார். அது நீறு இல்லை, முகப்பவுடர் என்று தெரிந்தால் சுமதியின் முகம் கோபத்தில் சிவந்துவிடும். நீறு வைப்பது சாமி கும்பிடுவது எல்லாம் செல்வகுமாருக்கு எப்போதும் ஆகாது. கொஞ்சம் அப்பா ரங்கராஜ் படிப்பதற்காக வைத்திருக்கும் புத்தகங்களை படித்ததால் வந்த கைங்கர்யம் அது.

"அவன் நல்லா கலருல்ல, அதான் பளிச்சுன்னு இருக்கு. நீ வேற கண்ணு வைக்கறியா?" என்றார் சுமதி.

"அச்சோ, இனிமே உன் பையன் மேல கண்ணு வச்சு எனக்கு என்னா ஆகப்போகுது. சும்மா கேட்டேன் ஆயா, விடு" என்று சிரித்துக்கொண்டே சொன்னார் சரசு. சாப்பிட்ட தட்டை கழுவ எடுத்துப்போனான் செல்வகுமார். அவனைத் தடுத்து தட்டை வாங்கிக்கொண்டார் சுமதி. அவருக்கு ஆண்பிள்ளை தட்டு கழுவக்கூடாது. வாங்கியவர் அவனையே உறுத்துப் பார்த்தார்.

"என்னம்மா அப்படி பாக்கற? நிஜமா இது நீறுதான்" என்றான் செல்வகுமார்.

"அது இல்லடா, உங்க அப்பாதான் சொல்றாரில்ல, அந்த தாடிமீசையை வழிச்சாதான் என்ன? முகமே கருப்படிக்குதுல்ல, ஸ்கூல் போற பையனாட்டமா இருக்க நீ?" என்றார் சுமதி.

"அட போம்மா, அவர்தான் சொல்றாருன்னா நீ வேற. ப்ளஸ்டூ படிக்கற பையன் இப்பவே முகத்தில் பிளேடு பட்டா அப்புறம் இன்னும் கருகருன்னு வந்திடுமாம். எங்க க்ளாஸ்லயே யாரும் பண்றது இல்ல" என்று சொல்லிவிட்டு படபடவென கிளம்ப ஆரம்பித்தான் செல்வகுமார்.

செல்வகுமார் கடைசிப்பையன். பெரிய அக்கா அவரது மூன்று வயதிலேயே இறந்துவிட்டதாக அம்மா சுமதி அவ்வப்போது சொல்லி அழுவார். இரண்டாவது அக்காவை திருச்சியில் கட்டிக்கொடுத்தார்கள். கடைசி அக்கா கல்லூரி படிக்கும்போது கூட படித்த நபரை காதலித்து திருமணம் செய்து கோவையில் செட்டில் ஆகிவிட்டார். அப்போது செல்வகுமார் ஆறாம் வகுப்புதான் படித்துக்கொண்டிருந்தான். பெண்கள் இருவருக்கும் இருக்கும் வீட்டை விற்று குறைவில்லாமல் சீர் செய்திருந்தார் செல்வராஜ். கடைசியாக தவமிருந்து பெற்ற மகன் செல்வகுமார்.

"எல்லாத்தையும் இப்படி பொண்ணுங்களுக்கே குடுத்துட்டா பெத்த ஒரே பையனுக்கு என்ன செய்வீங்க?" என்பார் சுமதி.

"அவனை நல்லா படிக்க வைக்கிறேண்டி, பெரிய படிப்பு படிப்பான். எல்லாம் அவன் சம்பாதிப்பான். ஆம்பளடீ அவன்" என்று சுமதியின் வாயை அடைத்துவிடுவார் செல்வராஜ்.

இரண்டு கிலோமீட்டர் சைக்கிளில் சென்றால் ஸ்கூல். இன்னமும் தனியார் பள்ளிகள் அங்கே வரவில்லை. இருப்பது ஒரே அரசுப்பள்ளிதான். செல்வகுமாரின் பள்ளியில் மேத்ஸ் குரூப்பில் ஆட்களும் குறைவு. செல்வகுமார் முதல் அல்லது இரண்டாம் ரேங்க்தான் எப்போதும் எடுப்பான். கணிதப்புலி என்று அவனை கணித ஆசிரியர் கூப்பிடுவார். ஊரில் பெரும்பாலும் பாதியில் படிப்பை நிறுத்திவிடுவார்கள் அல்லது ஆர்ட்ஸ் குரூப் எடுத்துக்கொள்வார்கள். எளிதாக காப்பியடிக்கலாம். செல்வகுமார் சைக்கிளை எடுத்துக்கொண்டு ஊரின் கடைசியில் இருக்கும் அய்யனார் கோவிலுக்கு சென்றான். சாலையில் இருந்து உள்ளே தள்ளி இருக்கும் கோயில் அது. சைக்கிளை கோயில் சுவரின் மறைவில் நிறுத்தினான். பெரிய பெரிய அய்யனார் சிலைகள் கையில் வீச்சரிவாளுடன் இருக்க, அருகே பிருமாண்டமான குதிரைச்சிலைகள் இருந்தன.

சின்ன அய்யனார் கருப்பாக, சின்ன கோயிலின் கருவறையில் இருந்தார். சாலையின் பார்வையில் இருந்து பார்த்தால் கோயிலின் பின்புறம்தான் தெரியும். வாசல் தெரியாது. அங்கே அமர்ந்தான் செல்வகுமார். பையில் மறைத்து வைத்திருந்த சின்னக் கண்ணாடியை எடுத்துப்பார்த்தான். தாடியையும் மீசையையும் எடுத்துவிட்டால் தான் இன்னமும் எவ்வளவு அழகாக இருப்போம் என்று முகத்தை திருப்பித்திருப்பி பார்த்தான். கண்ணாடியில் ஒட்டி வைத்திருந்த அம்மாவின் ஸ்டிக்கர் பொட்டை எடுத்து நெற்றியில் வைத்துப்பார்த்தான். மீசையை மறைத்து கண்களும் பொட்டும் மட்டும் கண்ணாடியில் தெரிவதை ரசித்துப்பார்த்தான். தான் எவ்வளவு அழகு என்பதை தனக்குள் சொல்லிக்கொண்டான்.

கால்களை கைகளால் அணைகொடுத்து அம்மா உட்கார்ந்திருப்பதைப்போல உட்கார்ந்தான். அவன் முகம் கவிழ்ந்திருந்தது. மெல்ல முதுகு குலுங்க அழ ஆரம்பித்தான்.

சென்ற ஆண்டில்கூட இப்படியெல்லாம் அவனுக்கு தோன்றியது இல்லை. இத்தனைக்கும் அப்போதெல்லாம் இன்னமும் பால்வடியும் முகம். அவ்வப்போது கூட படிக்கும் நண்பர்கள்தான் எப்போதாவது கிண்டல் செய்வார்கள். அவன் பெண்போல பேசுவதாக. இந்த ஆண்டு ஆரம்பத்திலேயே கொஞ்சம் சுதாரித்துக்கொண்டான். முடிந்தவரை தன்னை கட்டுப்படுத்தி பேச ஆரம்பித்தான். முடிந்தவரை மற்றவரிடம் பேசுவதை குறைத்தான். அவனுடன் முதல்வகுப்பில் இருந்து ஒன்றாகப்படிக்கும் ரகுராமனிடம் மட்டும் பேசுவான். அவன் எப்போதும் செல்வகுமாரை வேறாக நினைப்பதே இல்லை. ஆசிரியர்களிடம் பேசும்போது வலுக்கட்டாயமாக ஒரு மிலிட்டரி ஆள் போல நிற்கவும் பழகியிருந்தான் செல்வகுமார். மீசையும் தாடியும் எடுக்கவேகூடாது, அதுவே தனது கவசம் என்றும் மனதிற்குள் சொல்லிக்கொள்வான். முகத்தில் ஏதோ வேண்டாத ஒன்று ஒட்டியிருப்பதைப் போன்ற உணர்வு மட்டும் அடிக்கடி வரும்.

இதெல்லாம் இன்னும் எத்தனை நாட்களுக்கு என்று அவனுக்குள் சமீபமாக பயம் வர ஆரம்பித்திருந்தது. படிப்பில் கவனம் குறைவதையும் உணர்ந்தே இருந்தான் அவன். இப்படி வகுப்புக்கு போகாமல் இந்த கோயிலில் வந்து உட்கார்ந்துகொள்வது இந்த மாதத்திலேயே மூன்றாவது தடவை. உடல் நிலை சரியில்லை என்று மறுநாட்களில் லட்டர் கொடுத்துவிடுவான். சில மாதம் முன்பு ரகுராமன்தான் அவனுடைய பிறந்தநாளின்போது இந்த இடத்தை காட்டியிருந்தான். சில நேரம்

வகுப்பை கட் அடித்துவிட்டு இங்கே ஒதுங்கிவிடுவானாம். அன்று பியர் வாங்கி வந்திருந்தான். அதன் சுவை செல்வகுமாருக்கு குமட்டியது. அதை முடித்து சிகரெட் ஒன்றை பற்ற வைத்து இழுத்தான் ரகுராமன். அதையெல்லாம் பார்க்கப்பார்க்க பயம் வந்து உடனே கிளம்ப எத்தனித்தான் செல்வகுமார். நல்லவேளையாக சிகரெட் ரகுராமனுக்கும் சேரவில்லை. சற்று நேரத்தில் வாந்தியெடுத்துவிட்டான்.

“களவும் கற்று மறக்கணும்டா செல்வா” என்பான் அவன்.

“களவு என்னன்னு தெரிஞ்சா போதும், தவிர்க்க” பதிலுக்கு சொல்வான் செல்வகுமார்.

அவனிடம் பேசினால் ஆறுதலாக இருக்கும் என்று தோன்றியது. என்ன பேசுவது என்பதை நினைக்க நினைக்க தலைவலிப்பதாக தோன்றியது. தலைமேல் ஏதோ பாறையை தூக்கிவைத்தது போலவும் இருந்தது. அப்படியே கண் அயர்ந்தான். அவன் கனவில் ரகுராமன் வந்தான். ஆதரவாக அவன் கையைப்பற்றினான். ‘நான் இருக்கேண்டா உன்கூட... உன் உயிர் நண்பன்’ என்றான். ஒரு சிகரெட்டை பற்றவைத்து அவன் முகத்தில் ஊதினான். அவனை அடிப்பதற்காக கையை ஓங்கினான் செல்வகுமார். அவன் கையைப்பற்றி முதுகுபக்கம் வளைத்துப்பிடித்தான் ரகுராமன். ‘நீ பொண்ணுடா, என்னோட சண்டைபோட உனக்கு வலு பத்தாது’ என்று சிரித்தான் அவன். அவன் அப்படிச்சொன்னதும் கோபம் வர படாரென கையை உருவிக்கொண்டு அவனை ஓங்கி உதைத்தான் செல்வகுமார்.

“அய்யோ...” என்று கத்தியபடி கீழே விழுந்தான் அவன். சத்தம் கேட்டு தூக்கம் கலைந்து எழுந்து திருதிருவென விழித்தான் செல்வகுமார்.

“அடேய், என்னடா இப்படி உதைக்கிற?”

“அது வந்து... நீ எங்க இங்க? எப்ப வந்த?”

“அதுசரி, ஃபர்ஸ்ட் பீரியட் நீ காணம், லீவுன்னு இருந்தேன். அடுத்து மேத்ஸ் எமன் வந்துடும். நீ இருந்தா பதில் சொல்லி எல்லாத்தையும் காப்பாத்துவ. இல்லைன்னா எங்களை நல்லா கேள்வி கேட்டு போட்டு எடுக்கும். அதான் எஸ்கேப் ஆகலாம்னு வந்தேன். இங்க வந்து பாத்தா நீ என்னை விட செம்ம எஸ்கேப் பார்ட்டின்னு தெரிஞ்சது. அதெப்படிடா ஸ்கூல் கட் அடிச்சுட்டு இப்படி தூங்க முடியுது உன்னால?” என்றான் அவன்.

“வந்து, எனக்கு... ஆமாண்டா எனக்கு காய்ச்சல். லீவு போட்டா வீட்ல கேள்வி கேட்பாங்க. அதான் இங்க வந்து அப்படியே அசந்துட்டேன்”

“நிஜமாவா?” என்று சொல்லிவிட்டு சட்டென செல்வகுமாரின் நெற்றியிலும் கழுத்திலும் கை வைத்துப்பார்த்தான் ரகுராமன். அவன் கை பட்டதும் இயல்பான கூச்சமாக அதை தவிர்த்தான் செல்வகுமார். ரகுராமனின் கையை பற்றி நகர்த்தினான்.

“ஆமாண்டா, காய்ச்சல் போலதான் இருக்கு, அதுக்கேன் என் கையை தள்ளிவிடுற... பொண்ணாட்டம். ஆனா பாவமா தூங்கறயேன்னு நான் என் செல்லை பார்த்துட்டு இருந்தேண்டா, இடுப்பிலயே விட்டே பாரு ஒரு உதை... ஆத்தீ... கழுதை கெட்டுது போ” என்று சிரித்தான் ரகுராமன். அவனின் இயல்பான உரையாடல் செல்வகுமாரையும் பற்றிக்கொண்டது.

“நான் கழுதைன்னா நீ எருமை” சொல்லிவிட்டு அப்போதுதான் அவன் நெற்றியை பார்த்தான் ரகுராமன்.

“அடேய், என்னாடா இது... ஸ்டிக்கர் பொட்டு எல்லாம் வச்சுருக்க... அய்ய, நிஜமாவே மீசைக்கும் பொட்டுக்கும் குட்டி அய்யனார் போல இருக்கடா நீ” என்றான் ரகுராமன்.

“அப்போ மீசை தாடியை எடுத்துட்டா? எப்படி இருக்கும்?”

“அப்போ...” சொல்லிவிட்டு அவனை கேமராவில் போகஸ் செய்வது போல கையை வைத்து பார்த்தான்.

“என்னாடா பண்ற?” என்றவனுக்கு அவனின் இயக்குநர் சேட்டைகள் ரசிக்கும் வகையில் இருந்தது.

“மனசில் உன் மீசையை எடிட் பண்ணி பார்த்தேண்டா, அப்படியே சினிமா கதாநாயகி போல இருப்ப நீ”

“நிஜமாவா?”

“சொன்னா நம்ப மாட்டல்ல? இரு வரேன்” என்று சொல்லிவிட்டு தன் செல்லில் செல்வகுமாரை படம்பிடித்தான் அவன். அது அவன் அப்பா வாங்கிக் கொடுத்ததாம். ஸ்கூலில் செல் வைத்திருக்க தடை உண்டு. ஆனாலும் மறைத்து மறைத்து பார்ப்பார்கள் பலர்.

எடுத்த படத்தை மடியில் வைத்து ஏதோ எடிட் செய்தான் அவன். ஐந்து நிமிடத்தில் செல்வகுமாரிடம் காட்டினான். அதில், செல்வகுமார் இருந்தான். மீசை தாடி இல்லாமல் இருந்தான். பொட்டு, தோடு எல்லாம் இருந்தது. சேலை கட்டியிருந்தான். மிகவும் அழகாக இருந்தான். அப்படியே வைத்த கண் மாறாமல் அதையே பார்த்துக்கொண்டிருந்தான் செல்வகுமார்.

அவன் தலையை பிடித்து ஆட்டிய ரகுராமன், “அடேய் பயலே, என்னாடா… உன்னை நீயே சைட் அடிச்சுட்டு இருக்க?” என்று சிரித்தான். தன் தலையை பற்றிய ரகுராமனின் கையை பற்றி கீழே வைத்த செல்வகுமார் சொன்னான்.

“இதான் நிஜமா நான்”

ஒரு நிமிடம் அவன் சொன்னதன் அர்த்தம் புரியாமல் விழித்தான் ரகுராமன். அவன் முகத்தில் இருந்த சிரிப்பு அப்படியே உறைந்து இருந்தது. அவன் செல்வகுமாரையே உறுத்துப்பார்த்தான். அவன் கரத்துடன் பற்றியிருந்த செல்வகுமாரின் கையில் தன் தாயின் ஸ்பரிசம், அவன் அக்காவின் தலைகோதிய கையின் மென்மை, சிறு வயதில் கூட விளையாடிய பக்கத்து வீட்டு பெண்ணின் கைகள், எல்லாவற்றையும் ஒரு நொடியில் உணர்ந்தார்போல இருந்தது அவனுக்கு. கையை விலக்கிக்கொள்ள நினைத்தான். ஆனால் அவன் செல்வகுமார் என்பதை உறைக்க, கையை விலக்காமல் அவனையே பார்த்தான்.

“என்னாடா சொல்ற?”

தலைகுனிந்து இருந்தான் செல்வகுமார். குனிந்தபடியே மெல்ல பேசினான்.

“ஆமாடா, நிஜமா நான்தான் அந்த படம். இங்க இருக்கற நான் வெறும் முகமூடி”

“டேய் செல்வா, ஸ்கூல்ல எல்லாம் கிண்டல் பண்றது வச்சு அப்படி சொல்றயா?”

“அதுவும்தான்” சிரித்தான் ரகுராமன்.

“அடப்பாவி, அது எல்லா டீன்ஏஜ் பசங்களுக்கும் இருக்கும்டா, ஒரு பெண்மைத்தனமான அழகு. அது ஒரு சிலருக்கு அதிகமா இருக்கும். உங்க வீட்ல எல்லோரும் பொண்ணுங்க. அதான் உன்னையும் அப்படியே வளர்த்திருப்பாங்க. ஆனா மீசை தாடியெல்லாம் வந்திருச்சே பாக்கலையா நீ? மனசு போட்டு குழப்பிக்காதே” என்றான் ரகுராமன்.

“அது இல்ல ரகு, நீ புரிஞ்சுக்கோ. என் மனசு சொல்லுது. என் உடல் சொல்லுது எனக்கு. நானும் எல்லாம் படிச்சிருக்கேன். ஆனா நான் நிஜமாவே வேற. எனக்கு உணர முடியுது. சொல்லத்தெரியலை” என்றான் செல்வகுமார்.

அதிர்ச்சியாக அவனையே பார்த்த ரகுராமன் சட்டென தன் செல்லை எடுத்து ஏதோ தட்டினான். அதை செல்வகுமாரிடம் காட்டினான்.

“தோ பாரு செல்வா, இது போல சைக்லாஜிக்கல் ப்ராப்ளம்தான் இது. இதுக்கு கன்சல்டிங் கூட இருக்கு. பயப்படாம ஜாலியா இருடா, ஒரு நல்ல டாக்டரைப்பார்த்து…”

“அய்யோ ரகு, உனக்கு புரியலையா… இந்த சயின்ஸ், டாக்டர், சைக்கலாஜிக்கல் எல்லாம் விடு, நான் நிஜமாவே பொண்ணுடா… எனக்கு முழுசா புரிஞ்சு ஒரு மாசம் ஆச்சு. நான் வேற உடலில் இருக்கேண்டா” என்று அழ ஆரம்பித்தான் செல்வகுமார். அவன் அழுவதையே அதிர்ந்துபோய் பார்த்தான் ரகுராமன். அவனுக்கு என்ன சொல்வது என்றே குழப்பமாகவும் பயமாகவும் இருந்தது. இருந்தாலும் உயிர் நண்பன் கண்முன்னே அழுவதைக்கண்டதும் அவனுக்கும் கண் கலங்கியது.

“சரி விடு செல்வா, நான் உன்னை நம்பறேன். இப்போ என்ன பண்ண?”

“எனக்கு தெரியலை”

“அதாண்டா, உங்க வீட்ல சொன்னியா?”

“லூசா நீ, இதை எப்படி சொல்லமுடியும்?”

“அப்புறம் சொல்லாம எப்படி காலம் தள்றது. எப்படி இருந்தாலும் அவங்களுக்கு தெரிஞ்சுதானே ஆகணும். தெரிஞ்சா உன்னை வீட்டை விட்டு துரத்திடுவாங்கன்னு இருக்கியா? அப்படி துரத்தினா எங்க போறது என்ன பண்றதுன்னு குழம்பறியா? இதுக்குன்னு அமைப்பு எல்லாம் இருக்குடா”

“அய்யோ ரகு, நீ ரொம்ப யோசிக்கற… இப்படி ஆனா வீட்டை விட்டு போயே ஆகணுமா? ஏண்டா? நானும் உன்னைப்போலதானே. நானும் எங்க அம்மா அப்பாவுக்கு பிள்ளைதானே, இவ்வளவு உயிர்கள் வாழும் பூமியில் வாழ நானும் உரிமையுள்ள ஜீவன்தானே”

அழுகையுடன் செல்வகுமார் பேசிக்கொண்டே போக, அவன் மூடை மாற்றும் கட்டாயம் இருப்பதாக ரகுராமன் தனக்குள் தீர்மானித்தான்.

"அலோ செல்வா, க்ளாஸ்ல அந்த மேத்ஸ் எமன் கேள்வியா கேட்கும்னுதான் நானே ஓடி வந்தேன். இங்க வந்தா இந்த மேத்ஸ் புலி என்னை கேள்வியா கேட்டு கொல்லுதே" என்று புலம்புவது போல முகத்தை வைத்துக்கொண்டு கேட்டான் அவன். அவனை நிமிர்ந்து பார்த்த செல்வகுமார் கேட்டான்.
"இது பதில் இல்லாத கேள்விகள் ரகு"

"அய்ய, பெரிய தத்துவ ஞானி நீ"

"இல்லதான், ஆனா வாழ ஆசைப்படும் சாதாரண ஜீவனோட அடிப்படை கேள்விகள்தான் இதெல்லாம். இதெல்லாம் ஞானிகள்கூட உணரமுடியா உணர்வுகள்டா"

"சரிவிடு… என்ன பண்ணலாம்?" என்றான் ரகுராமன்.

"நீ சொல்லு. நான் கேட்கிறேன்"

"என்ன குழப்பம் இப்போ உனக்கு?"

"நான் ஆணா, பெண்ணா… எப்படி இந்த உலகில் காட்டிக்கிறது? என் நிஜ உருவமா, இல்லை இந்த போலி உடலையா?" கேட்டான் செல்வகுமார்.

"இப்போ என்ன தேவை இருக்கு அதுக்கு?"

"புரியலை"

"ஒன்னு புரிஞ்சுக்கோ, இந்த காலத்தில் யாருமே உண்மையானவங்க இல்லை. எல்லோருமே ஒரு முகமூடியோடதான் அலையறாங்க. நம்ம சார்ங்க, ஃப்ரெண்ட்ஸ்ங்க, வழியில் பாக்கும் எல்லாருமே தன் நிஜத்தோட இல்லை. காலம் அப்படி இருக்கு. நீ மட்டும்… நாம் மட்டும் ஏன் உண்மையை சொல்லியே ஆகணும்?"

"அதுக்கு?"

"செல்வா, இப்போதைக்கு நீ செல்வகுமார்தான். படி. நல்லா படி. உங்க அப்பா, அம்மாவுக்காக படி. உலகில் நம்மகிட்ட உண்மையா இருக்கும் சொந்தம் அது ஒன்னுதான். நீ நல்லா படிக்கிற… எதிர்காலத்தில் ஏஐ படிக்கணும்னுகூட சொல்வ. பாரேன்… உன் ஃபோட்டோவை நான் ஒரு சில நிமிடத்தில் மாத்தி காட்டிட்டேன். பலபேர் இதை பண்ணிட்டு ஏஐ விற்பன்னர்ன்னு கதை விடுவாங்க. இது கன்ஸ்யூம் பண்றது. இதை உருவாக்கும் அடிப்படையையே படிக்கப்போற நீ. எதிர்காலம் நல்லா இருக்கும். பெரிய ஆள் ஆகிடுவ நீ. அப்புறம் மத்தது எல்லாம் பேசிக்கலாம். இப்போதைக்கு செல்வகுமார் முகமூடி ஒன்னும் தப்பு இல்லை"

"அவங்களை ஏமாத்திடறேனே… தப்பில்லையா?"

"அச்சோ, இல்லடா… அவங்களுக்கு அந்த அதிர்ச்சியை இப்போதைக்கு தாங்கமுடியுமா பாரு? எதிர்காலத்தில் எல்லாம் மாறும். அப்போ சொல்வது எளிதா இருக்கும். நீ நல்லா பெரிய ஆளா ஆகணும்டா… எங்க வீட்ல வசதி இருக்கு. படிக்கலைனாலும் சமாளிப்போம். நீ படிக்கணும்டா… என் ஃப்ரெண்டு பெரிய ஆளாவணும்டா" இதை சொல்லும்போதே ரகுவும் அழ ஆரம்பித்தான்.

"அடப்பாவி, என்னாடா நீ அழற?" ரகுராமனை தேற்றினான் செல்வகுமார்.

"நீயும்தான் அழுத"

"அது வேறடா"

விண்மீன் மின்னிதழ்

"ஆனாலும் அழுகை நிஜம்தானே"

"சரிவிடு, இனிமே நாம அழவே கூடாது"

"அப்போ சிரி நீ…"

"ஆனா நான் உண்மையாவே இருக்க முடியாதுல்ல?" ஏமாற்றமாக கேட்டான் செல்வகுமார்.

"உன் ஃப்ரெண்டு நான் இருக்கேனே… என் கேர்ள் ப்ரெண்டு நீ… போதுமா"

"நட்புன்னா நட்புதாண்டா, இதிலென்ன ஆண், பெண்"

"நீ கேட்டியேன்னு சொன்னேண்டா லூசு."

"இது நல்லாயில்லை" என்றாள் அவள்.

யோசித்து சொன்னான் ரகுராமன்.

"நீ கேட்டியேன்னு சொன்னேண்டீ லூசு. இனிமே எனக்கு மட்டும் நீ செல்வி" சொல்லி சிரித்தான் ரகுராமன்.

# பெரிதினும் பெரிது கேள்

**தமிழ்க்காதலன்**

**வாழ்க எங்கோ மன்னவர் பெருந்தகை**
**ஊழிதொ றூழிதொ றுலகங் காக்க**
**அடியிற் றன்னள வரசர்க் குணர்த்தி**
**வடிவேல் எறிந்த வான்பகை பொறாது**
**பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்**
**குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள**
**வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு,**
**தென்திசை ஆண்ட தென்னவன் வாழி**
**– சிலப்பதிகாரம், காடுகாண் காதை:15-22**



உலக உருண்டையின் காலவெள்ளத்திலும் கடல் வெள்ளத்திலும் மூழ்கி மூச்சடைத்து நீந்தி கறையேறி உலகின் நிலபரப்பெங்கும் கால்தடம் பதித்து ஒவ்வொரு காலகட்டத்திலும் தனக்கான தொப்புள்கொடியின் வேர்களின் அடையாளங்களை பதியவிட்டு, விழுதுகளாய் வளர்ந்து செழித்து வாழும் காலத்தில், இடம், பொருள், தொழில் முறையால் மொழிகள் மாற்றம் கண்ட உலக தமிழனின் வாழ்வியலை புரட்டிப் பார்க்கிறேன். என்னோடு நீங்களும் வருகை தந்தால், இனம்புரியா இடர்கள் கலைந்து தொலைந்தவைகளில் தொலைந்து, தொலைத்தவற்றை தெரிந்து, கலந்தவை கலைந்து, மறந்தவை நினைந்து, மாற்றம் நிகழ்த்தவோ, மாற்றம் நிகழவோ, காரணமாகலாம் அல்லது கருவியாகலாம்.

நெடுங்கடல் சூழுலகில் நிலப்பிரிவு நிகழும் காலத்தில் தோன்றிய உயிர்களின் கடைநிலை உயிர்தான் மனிதன். தன் இயல்பில் வாழ்வதற்கு இயற்கை உயிர்களுக்கு எப்பொழுதும் தன் ஒத்துழைப்பை நல்கியே வந்திருக்கிறது. இயல்பில் திரிதல் இயற்கையில் இல்லை. திரிந்தால் அது இயற்கையாய் இல்லை. இயற்கை சீறி சீற்றமெடுத்த எல்லா காலத்திலும் மனித இனம் நாற்றமெடுத்திருக்கிறது. மீன்களோடு போட்டியிட்டு நீந்தி மீள்கரைத்தேடி கரையேறி தப்பிதப்பிப் பிழைத்த மாபெரும் இயற்கை நிகழ்வுகள் தமிழ் இனத்துக்கு மட்டுமே உலகில் நிகழ்ந்திருக்கிறது. அங்கு கிடைத்த அனுபவத்தை தனது அறிவாக்கிக் கொண்டு, நிலத்தையும், நீரையும் தன்பிடியில் வைத்துக்கொள்ள கற்றான். பட்டுப்பட்டு பட்டதன் பலனாய் பட்டறிவை பெற்று, அறிவை வளர்த்து,

ஆகச்சிறந்த மொழியை வளர்த்து, மொழிக்குள் உலகப்பொருள் வைத்து, பெயரிட்டு, செம்மாந்த கூட்டமாய் செம்மாந்து இருந்தவன் பிள்ளைகள், பிளவுற்று பிளவுற்று தமக்குள் பிணக்குற்று முட்டிமோதிக்கொண்ட வாழ்வியலே பின்வரும் தலைமுறைக்கு வரலாறாக மாறிப்போனது.

நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும் காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும் குடமலைப் பிறந்த ஆரமும்
அகிலும் தென்கடல் முத்தும் குணகடல்துகிரும் கங்கை வாரியும்
காவிரிப்பயனும் ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும் அரியவும்
பெரியவும் நெரிய ஈண்டி வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகு"
-பட்டினப்பாலை வரிகள் 185-193

உயிர் ஓம்புதல் கற்று, உணர்வு விழிப்புற்று, மொழியாலும், பண்பாலும் தன்னை உயர்த்திக்கொண்டு, சமூக வாழ்வியலின் உச்சம் தொட்ட தமிழன் உலகமெங்கும் பரவிப்பரவி, புரவி முதல் புல்லின வித்துகள் வரை வணிகம் செய்து, ஆடைகள், கருவிகள் கொடுத்தும் பெற்றும் தெற்காசியாவின் தலைமகனாய், உலகின் உற்ற நண்பனாய் விளங்கி வாழ்ந்த செழுமைமிகு இனம் இன்று காலவோட்டத்தாலும், கலப்பாலும் தன்முகம் அழிந்து, அடையாளம் இழந்து, மாறுவேடமிட்டு மறுகிக் குறுகும் மானுடப்பிழை காணப்பொறுக்கவில்லை. கலைகள் வளர்த்து கலைவழி தன்னை மறுபடிமறுபடி புனரமைத்துக்கொண்டு, தலைமுறைகள் தடம் மாறாதிருக்க வழிகண்ட மரபின் வார்ப்புகள், அறிவுத்துருப்பிடித்து அலையும் நிலையில் எது சரியான வாழ்வியல் என்பதை மறுபடியும் முன்னிறுத்த வேண்டிய கட்டாயம் நமக்கு கடமையாகிறது.



உலகின் பேரினங்களில் எஞ்சி இருப்பது தமிழரும், சீனருமே. மற்றவை காலத்தில் காணாமல் போய்விட்டது. நம்முடைய வாழ்வியல் வரலாறு மறைக்கப்பட்டதும் மறுக்கப்பட்டதுமே அதிகம். வெளிப்பட்டதும் ஏற்கபட்டதும் குறைவே. அந்த குறைந்த காலப்பதிவேடுகளில் கிடைக்கும் ஆதாரங்களே உலகை வாய்பிளக்க வைக்கிறது. சொல்லிக் கொண்டிருப்பதல்ல வரலாறு, சொல்லாமல் விட்டதே வரலாறு என்ற வரலாறு படைக்கும் பெருமைக்கு தமிழினம் உரிமையாகிறது.

"மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வெளவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
புலியொடு வில் நீக்கிப், புகழ் பொறித்த கிளர்கெண்டை,
வலியினால் வணக்கிய, வாடாச்சீர்த் தென்னவன்"
– கலித்தொகை 104

தனக்கொரு எதிரி இல்லாதவாறு வாழ்ந்தவர்கள், எதிரியாக எவரும் வரிந்துக்கட்டி வந்தால், எல்லையிலே தடுத்து புறமுதுகிட வைத்து, இனம் காத்த வீரமும் மானமும் குருதிக்கொடையாய் தலைமுறைக்கு கொடுக்கப்பட்டது. மன்னர்கள் முதல் மக்கள் யாவரும் மாண்புமிக்க ஒழுங்கியலை வாழ்வியலாக வகுத்துக்கொண்டு, அறத்தின் வழியில் மறத்தை முன்னிறுத்தி மரபியல் தொடர்ச்சியை மண்ணுக்கு தந்தவர் மிச்சமும் சொச்சமுமாய் இன்று நாம் நிற்கிறோம். பதினான்காம் நூற்றாண்டுக்கு பிறகு நிகழ்ந்த பல்வேறு குழப்பக் கலப்புகளில் குழம்ப தொடங்கி, தெளிவற்ற நிலையிலேயே தொடர்கிறோம். இதுவொரு வழிமாறிய பயணம் என்பது புரியாமலே வளர்த்து விடுகிறோம் அடுத்தடுத்த தலைமுறைகளை. இரண்டாம் உலகப்போருக்கு பின் வந்த பேரரசுகள், அரசுகள் யாவையும் தனது ஆளுமையிலும், அதிகாரத்திலும் போக்கை மாற்றிக்கொண்டன. அதன்படி அனைத்து நாடுகளும் அதிகார மையங்களாக திகழ வலியுறுத்தப்பட்டு, அரசாட்சி முறை முழுமையாய் மாறிப்போனது.

நெடுநுகத்துப் பகல்போல நடுவுநின்ற நல்நெஞ்சினோர்
வடுஅஞ்சி வாய்மொழிந்து தமவும் பிறவும் ஒப்ப நாடி
கொள்வதூம் மிகைகொளா கொடுப்பதூம் குறைகொடாது
............. மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்துஇனி துறையும்
-பட்டினப்பாலை (வரிகள்: 206-217)

ஆட்சியாளர்கள் மெல்லமெல்ல உலக பெரும்வணிகர்களின் கைப்பாவையாக மாற்றப்பட்டார்கள். இதற்கு தனித்த தத்துவங்களை முன்வைத்து அரசாள்பவர்கள் உடன்படாமல் விலகி நின்றார்கள். ஆனால், மக்களாட்சி முறையை ஏற்றுக்கொண்ட நாடுகளில் உலக வல்லாதிக்கம் எளிதாக தனது அதிகார இரும்புக்கரத்தை நீட்டி, அவர்களை தங்களின் கைப்பாவைகளாக மாற்றிக்கொள்ள முடிந்தது. வணிகத்தை முன்னிறுத்தி, அரசியலை பின்னுக்குத் தள்ளி, கொள்கைகள் யாவும் வர்த்தகத்தை முன்னிலைபடுத்தியே வகுக்கப்பட்டு அதற்கேற்ப அரசாங்கங்கள் அமைக்கபட்டன. ஏற்காத நாடுகளுக்கு இட்டுக்கட்டி கதை சொல்லி தலைவர்களை அழிப்பது அல்லது மாற்றுவது. அதற்கு ஜனநாயகம் என்று அவர்களே பெயர்வைத்து பறைசாற்றிக்கொள்வது வல்லாதிக்க சக்திகளின் வரலாறாக மாறி இருக்கிறது. வர்த்தகம் என்பதும் இப்பொழுது நிலத்தையும், வளத்தையும் தனக்கு பயன்படும்படியாய் ஒப்பந்தம் போட்டு கொள்ளை அடிப்பதாக மாறி நிற்கிறது. இப்படி உலகின் வல்லரசு வல்லாதிக்கங்கள் பொருளாதாரத்தை முன்னிறுத்தும் போர்முறைக்கு மாறிவிட்ட உலக சமுதாயத்தில் தமிழர்களின் நிலை எப்படி இருக்கிறது என்று பார்ப்போம் வாருங்கள்.

படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசரு ளேறு.
-குறள் 381

பதினான்காம் நூற்றாண்டுக்கு பிறகு தமிழர்களின் நிலவுடமைகள் வலுக்கட்டாயமாக கைமாற்றப்பட்டன. இங்கிருந்து தொடங்குகிறது தமிழர்களின் வீழ்ச்சி. தமிழர்கள் அரசியலிலும், அதிகாரத்திலும், வர்த்தகம் மற்றும் வணிகத்திலிருந்து ஓரங்கட்டப்பட்டார்கள். மறுபடியும் அவர்கள் இவற்றில் நுழைந்து தலையெடுத்து விடாமல் தடுக்கப்பட்டார்கள். தொடர்ந்து நான்காம்தர குடிமக்களாய் வாழவைக்கப்பட்டார்கள். உரிமையும் உடைமையும் இல்லாதவர்களாக தொடர்ந்து பார்த்துக்கொள்ளப்பட்டார்கள். அடிப்படை வாழ்வியலை அடிப்படை வேலைகளை மட்டுமே அவர்களின் தொடர்ச்சியான தொழிலாக மாற்றிவிடப்பட்டார்கள். அவர்களுடைய அறிவுடமைகள் யாவையும் பார்த்துப்பார்த்து திருடப்பட்டும், கைப்பற்றப்பட்டும், பிறமொழியில் பிரதி எடுத்துக்கொண்டு பின்பு தீயிலிட்டு அழிக்கப்பட்டன. மருத்துவமும் அவ்வண்ணமே பெயர் மாற்றம் பெற்றது. கலையை பேசும் நூல்கள் தூள்தூளாக்கப்பட்டன. நூலகங்கள் எரியூட்டப்பட்டன. இலக்கியங்கள் அழிக்கப்பட்டன. கலைகளின் மூலங்களாக விளங்கிய கட்டிடங்கள் அழிக்கப்பட்டன. வரலாறுகள் சிதைக்கப்பட்டன. எஞ்சி மிஞ்சிய இலக்கியங்களிலும் முடிந்தவரை இடைச்செருகள்கள் செருகப்பட்டன. உண்மை பொருள் மறைக்கப்பட்டு பொய்யான விளக்கங்கள் விளக்கவுரைகளாக கூறப்பட்டன. பின்வரும் தலைமுறைகளுக்கு அதையே பாடமாக்கி படிக்க வைத்தனர்.

இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.
-குறள் - 385

இன்றைய தலைமுறைகளும் உலகமெங்கும் தமிழர் குடிகளாய் பரவி வாழ்ந்தாலும், அவர்கள் தங்கள் வாழ்வியல் சார்ந்தும், பொருளாதாரம் சார்ந்தும் வாழும் சூழலிலேயே வைக்கப்படுகிறார்கள். பெரும்பாலும் கூலிகளாக மட்டுமே தமிழர்கள் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். பெருமுதலாளிகள் என்கிற இடத்திற்கோ, வலிமை மிக்க அதிகாரம் உடையவர்களாகவோ தமிழர்கள் எங்கும் இல்லை. சொந்த மண்ணிலும் சரி, சென்ற மண்ணிலும் சரி தமிழர்கள் அதிகாரமற்ற ஏதிலிகளாகவும், பொருளாதாரமற்ற கூலிகளாகவும் தான் இருக்கிறார்கள். கற்றுத்தரும் இடத்தில் இருந்தாலும் பெற்றுக்கொள்ளும் இடத்தில் வைக்கப்படுகிறார்களே தவிர, தலைமை இடத்தை தக்கவைக்க முடியவில்லை. சொல்லும் வேலையை செய்யும் பணியாளர்கள் என்ற அளவில்தான் உயர்ந்த பொறுப்பில் இருப்பவர்களின் நிலையும் இருக்கிறது. தலைமை பண்பை இழக்கவில்லை என்றாலும், தலைமை தாங்கும் இடத்தை அடையமுடியாமல் அல்லாடுவதுதான் உண்மை நிலையாக இருக்கிறது. தமிழகம் என்ற பெயர் தாங்கும் நிலப்பரப்பில் இன்னும் நிலைமை மோசமாக இருக்கிறது. மொத்த வணிகத்திலும் சரி, சில்லரை வணிகத்திலும் சரி தமிழர்கள் துடைத்தெறியப்பட்டுவிட்டார்கள். எல்லா வணிகமும் தமிழர் அல்லாதவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டது.

பெருமைமிக்கதாக அல்லது அதிக வருமானம் வரும்படியான கலைத்துறைகளிலும் தமிழர்கள் இல்லை. தமிழர்களுக்கென்று தங்கம், வெள்ளி போன்ற வணிக நிறுவனங்கள் கிடையாது. இப்படி எதை எடுத்துப்பார்த்தாலும் தமிழர்களின் நிலை மிகவும் பின்தங்கியே இருக்கிறது. ஆனால், தமிழ்நாடு சிறந்த பொருளாதார மையமாக விளங்குகிறது. அது யாருக்கான பொருளாதாரம் என்பதே கேள்வியாகிறது.

அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்.
-குறள்-421

தமிழ்நாட்டின் தலைநகராக இருக்கும் இடம் தமிழர்களுக்கான தலைநகராக இருக்கிறதா..? என்றால் இல்லை என்பதே பதில். பல்வேறு மாநிலங்களில் இருந்து வந்து தங்கியவர்கள் ஆளுமை மிக்கவர்களாகவும், அதிகாரமிக்கவர்களாவும், அரசியல் பலம் பெற்றவர்களாகவும் இருக்கிறார்கள். தமிழ்நாட்டின் 10 மாநகராட்சிகளில் முழுக்க முழுக்க பிறமாநிலத்தவர்கள் ஆக்கிரமிப்பில்தான் இருக்கிறது. மொத்த பொருளாதாரத்தின் கட்டுப்பாடும் அவர்கள் கைகளில் இருக்கிறது. உடனே சிலர் கேட்கக்கூடும், தமிழர்கள் மட்டும் வெளிமாநிலங்களில் வாழவில்லையா..? வெளிநாடுகளில் இல்லையா..? இது என்ன பிரிவினை வாதம் போல் இருக்கிறதே என்று வினவக்கூடும். கேள்வியில் தவறில்லை. புரிதலில்தான் இருக்கிறது. உதாரணமாக கர்நாடகாவில் சுமார் 36 இலட்சம் (அதிகாரப்பூர்வமாக 21 இலட்சம்) தமிழர்கள் வாழ்கிறார்கள். ஆனால், அவர்களின் நிலை எப்படி இருக்கிறது..? சட்டப்பாதுகாப்பு கிடைக்கிறதா..? பாதுகாப்பு கேட்க முடிகிறதா..? உரிமைகள் என்று எதையும் பேசிவிட முடியுமா..? தேர்தலில் நிற்க தடை. சின்ன சின்ன பதவிகளுக்கு நின்று வென்றாலும் அவர்களை உள்ளே அனுமதிப்பதில்லை. பேச அனுமதிப்பதில்லை. எவ்வித எதிர்ப்பும், உரிமைக்கோரலும் இல்லாமல் தங்கள் தமிழ் அடையாளங்களை மறைத்துக்கொண்டு, கன்னடம் கட்டாயமாக பேசிக்கொண்டு வாழவேண்டிய சூழல்தான் நிலவுகிறது.

இப்படிதான் மகாராஷ்டிரா, மற்றும் இன்னபிற மாநிலங்களிலும். வெளிநாடுகளிலும் இதே நிலைதான். கூலியாக உலகமெங்கும் தமிழர்கள் வரவேற்கப்படுகிறார்கள். ஆனால் அவர்கள் ஆளுமைகளாகவோ, அதிகாரமிக்கவர்களாகவோ முன்னிலை பெறுவதை உலகம் விரும்பவில்லை. நிறைய தடைகள், குறுக்கீடுகள், தண்டனைகள். குற்றசாட்டுகள் என பல்வேறு இன்னல்களை அனுபவமாக்கிக் கொள்வதை யதார்த்த வாழ்வில் கண்டுணர முடியும். உண்மைகளை பேசாமல் தவிர்ப்பதனாலோ, கண்டும் காணாதது போல் விலகி நிற்பதாலோ அந்த உண்மை இல்லை என்றோ, அது உண்மை இல்லை என்றோ ஆகிவிடாது. பூனை வேண்டுமானால் கண்ணை மூடிக்கொள்ளலாம். அதற்காக பூலோகமே இருண்டு விடாது. பக்கத்தில் இருக்கும் பங்களாதேஷ் முதற்கொண்டு தொலைவில் இருக்கும் ஜப்பான் வரையிலும் தமிழர்கள் உழைப்பவர்களாக இருக்கிறார்கள். ஆளுமைகளாக அதிகாரமிக்கவர்களாக இல்லை என்பதே யதார்த்தம்.

வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினை
ஐந்துடன் மாண்ட தமைச்சு.
-குறள்-632

தமிழர்களுக்கென்று நிலமில்லை, இருக்கும் நிலத்தில் உரிமை இல்லை. அதிகாரமற்ற ஏதிலிகளாக, அரசாங்கத்தை அண்டிப்பிழைக்கும் அடிமைகளாக, உழைப்பிலிருந்தும், உரிமையிலிருந்தும், ஒதுக்கப்பட்ட, வாக்களிக்க மட்டுமே அடை காக்கப்படும் நாமக்கல் கோழிகளாக மக்கள் மாற்றப்பட்டு வெகுகாலமாகிவிட்டது. உழைப்போடு சம்மந்தப்பட்ட வேலைகள் எல்லாம் கீழ்த்தரமானவை என்று மிக ஆழமான கடவுள் நம்பிக்கை விதைக்கப்பட்டு விட்டது. அலுவலக வேலைகள், அரசாங்க வேலைகள், இதுதவிர இலட்சத்தில் காசு புரளும் சில தொழில்கள்தான் கௌரமான தொழில்கள் என்று ஆழமாக விதைக்கப்படுகிறது. பொழுதை வெட்டியாக போக்கும், சீட்டுக்கட்டும் சிகரெட்டும், கஞ்சாவும் போதை புட்டியும் போதைக்கு போதுமானதாக வாழ்க்கையை வகுத்துக்கொண்ட இளையோர்களை உருவாக்கிவிட்டாச்சு. ஆலமரம், அரசமரம், ஏரிக்கரை, சவுக்குத்தோப்பு, மாந்தோப்பு, ஆற்றங்கரை எங்கும் வீசியெறியப்பட்ட போதைப்புட்டிகள் இவர்களின் வாழ்வியலின் சாட்சியங்களாக சிரிக்கின்றன. இன்று வேலைக்கு ஆள் கிடைக்கவில்லை. அதிலும் வேளாண் வேலை என்றால் நிலைமை படுமோசம்தான். வெளிமாநில கூலிகள் வைத்து வேளாண்மையில் ஈடுபட வேண்டியிருக்கிறது.

குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்.
-குறள்-549

தன்மானமிழந்தவனாகத்தான் தமிழன் இன்று உலகில் உலவிக் கொண்டிருக்கிறான். உலகில் வெகுவாக அழிந்து கொண்டிருக்கும் உயிரினங்களில் தமிழினமும் முக்கிய இடத்தில் இருக்கிறது. இருக்கும் தமிழர்களிடம் தமிழ் இல்லை. கொஞ்சம்நஞ்சம் ஒட்டிக்கொண்டிருக்கும் தமிழும் தவறாக பொருள் கொள்ளப்படுகிறது. நடைமுறை வாழ்வியலில் இருந்தும், பள்ளிக்கல்வியிலிருந்தும், தொழிலிலும், அலுவலகத்திலிருந்தும் வெளியேற்றப்பட்ட மொழியாக தமிழ் இருக்கிறது. அரசாங்க ஆதரவும் தமிழுக்கோ, தமிழருக்கோ

இல்லை என்கிற யதார்த்தை விடமுண்ட கண்டனை போல விழுங்கவும் முடியாமல், துப்பவும் முடியாமல் திக்கித்திணறி சொல்ல வேண்டியிருக்கிறது. தமிழர்களுக்கு தமிழறிவும், இலக்கிய அறிவும் துடைத்தெறியப்பட்டுவிட்டது. தமிழில் பேசினால் புரியவில்லை என்கிற குரல்கள் இப்போதெல்லாம் எங்கும் ஒலிக்கிறது. வெளிமாநிலம் அல்லது வெளிநாடு வாழ் தமிழர்கள் ஒருதலைமுறை தங்கள் அடையாளத்தை மறைத்து வாழ்கிறார்கள். அடுத்த தலைமுறையை அந்த வாழிடத்து பிள்ளையாக மாற்றி விடுகிறார்கள். இது இப்படியே போனால் தமிழர்கள் இவ்வுலகில் மரபியல் ஆய்வுகளில் மட்டும் இவர்கள் தமிழர்கள் என்ற அடையாளத்தை தாங்கி நிற்பார்கள். மற்றபடி எவ்விதத்திலும் தமிழர்களாக இருக்கமாட்டார்கள்.

அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொரு
துட்பகை உற்ற குடி.
-குறள்-888

நாகரிகம் என்றும், நவீனம் என்றும், வளர்ச்சி என்றும் விதவிதமான காரணங்களை கூறிக்கொண்டு, தங்களின் உருமாற்றத்தை நியாயப்படுத்துவார்களே தவிர, உண்மையை உணரவோ ஒத்துக்கொள்ளவோ அவர்களின் மனம் ஒப்பாது. உருமாறி நிற்பவர்கள் எப்படி உண்மையை அடுத்த தலைமுறைக்கு கடத்தமுடியும்..? ஆங்கில, சமஸ்கிருத மோகமும், ஐரோப்பிய வாழ்வியல் ஈர்ப்பிலும் திளைக்கும் ஒருவருக்கு இனமோ, மொழியோ, பண்பாடோ தேவையே படாது. பணம் போதும் என்கிற மனப்பான்மைக்கு வந்துவிட்ட ஒருவருக்கு, வாழ்வியல் ஒழுக்கம் பற்றிய எவ்வித அக்கரையும் இருக்காது. நிலைமாறி திரிபுற்று அலைவதே வளர்ச்சி பெற்ற நவீனமாக கொள்ளப்படும். பிறகென்ன "உன் பிள்ளையும் என் பிள்ளையும் நம் பிள்ளைகளோடு விளையாடிகொண்டிருக்கும் நாகரிகம் நமதென்றாகும். விலை பேசப்படும் விவாகரத்துகளால் (மணமுறிவு) மலினமான விபச்சாரம் சரியென்று ஏற்கபடும். ஆத்தாளுக்கும் மகளுக்கும் அடையாளமற்ற ஒருலகம் உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆணும் ஆணும், பெண்ணும் பெண்ணும் சேர்ந்து வாழும் நாடுகள் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இவ்விதமாக உண்மையான பண்பாட்டில் இருந்தும், பழக்கவழக்கங்களில் இருந்தும், மனிதனின் அடையாளத்தை அழித்துவிட்டு பின்னொரு நாளில் மனித இனத்தையே அழித்து விடுவார்கள். அந்த நிலைக்கு ஆட்படும் முன்பு தமிழர்கள் விழிப்படைய வேண்டும்.

ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று.
-குறள்-967

பொதுவாகவே எந்தவொரு இனமும் தனது தனித்தன்மையை தாங்கி வாழ்வதை, வளர்வதை, தன் அடையாளம் இழக்காத தன்மையை உலக அரசாங்கங்கள் விரும்பவில்லை. இங்கு எல்லோருக்குமே அரசாங்கம் ஒரு முகமூடியை மாட்டிவிட நினைக்கிறது. ஒரே தன்மை, ஒரே மாதிரி மனிதர்கள் உருவாக்கப்பட விருப்பபடுகிறது. சுருங்கச்சொன்னால் அரசாங்கங்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் உயிருள்ள "ரோபோவாக" (இயந்திரமனிதன்) மக்களை இருக்க வைக்கும் பயிற்சியும், முயற்சியும் ஏற்கனவே எடுக்கப்பட்டு விட்டது. அரசாங்கங்களுக்கு தெரியாமல் ஒரு குழந்தை பிறந்துவிட முடியாது, ஒரு மனிதன் அசைந்துவிட முடியாது என்கிற பேராபத்தை நோக்கி மனித இனம் வேகமாக சென்று கொண்டிருக்கிறது. இந்த நிலையில் நாம் விழித்துக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. மருத்துவ உதவி இல்லாமல் மகப்பேறு இல்லை என்ற நிலைக்கு பின்னிருக்கும் சதிகளை எண்ணிப்பாருங்கள். உங்கள் நிலை எதுவென்பது புரியும். இங்கே வாக்காளர்கள் தேவைப்படுகிறார்கள். சொல்வதை கேட்கும் பணியாட்கள் தேவைப்படுகிறார்கள். எதிர்த்துப்பேசாத அடிமைகள் தேவைப்படுகிறார்கள். கேள்வியே கேட்காத அறிவாளிகள் தேவைப்படுகிறார்கள். சொல்லும் போது பிள்ளை பெறும் பெண்கள் தேவை. ஆசைக்கும் காசுக்கும் இணங்க ஆர்வமுள்ளவர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். முக்கியமாக சிந்தனையற்ற மனிதர்கள் தேவைப்படுகிறார்கள். இதற்கு எதிராக நிற்பவர்கள் தீவிரவாதிகள், சமூக விரோதிகள், தேசத்துரோகிகள் என்று பல்வேறு பட்டங்களுக்கு சொந்தக்காரர்கள் ஆவார்கள்.

தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை.
-குறள்-964

தமிழா..?! எப்போது விழிப்பாய்..?! எப்போது இனம் காப்பாய்..?! என்கிற ஏக்கமுடன் உன்னிடம் ஒன்று சொல்ல வேண்டியிருக்கிறது. நான் சொல்வது புரியவில்லை என்றாலோ..?! அல்லது நம்பிக்கை இல்லை என்றாலோ பின்வரும் நடப்பு நிகழ்வுகளில் இருந்து பாடம் கற்றுக்கொள்.

உதாரணமாக, இஸ்ரவேலர்கள் மற்றும் ஈரானியர்களை பார்த்து தெரிந்துகொள். என்ன நடந்துக்கொண்டிருக்கிறது என்பதை உற்றுக்கவனி. ஈராக்கின் சதாம் உசேன் என்ன காரணம் சொல்லி படுகொலை செய்யப்பட்டார்..? சொல்லப்பட்டது நிருபிக்கப்பட்டதா..? கவனி. ஆனால் கொல்லப்பட்டது உலகறியும். பாலஸ்தீன மக்களுக்கு ஏன் இந்த நிலை..?? அவர்களின் இன்றைய நிலைக்கு யார்யார் காரணம் என்பதை அறி. இஸ்ரவேலர்கள் நாடற்றவர்களாக இருந்தபோது அவர்களை தங்கள் நாட்டில் தங்கிக்கொள்ள அனுமதித்த நாடு பாலஸ்தீனம். ஒண்ட வந்த பிடாரி இன்று ஊர் பிடாரியை விரட்டுவதை கண்முன்னே காண். இதைவிட கொடுமை பாலஸ்தீனம் என்ற ஒரு நாடே இதற்குமுன் இருந்ததில்லை என்கிறது சில வல்லரசுகள். இஸ்ரவேலர்கள் எப்படி செயல்படுகிறார்கள் என்பதை கவனி. அவர்களின் நரித்தனம், நயவஞ்சகம், மாண்பற்ற மரபற்ற அரசியல் கவனி. ஆக்டோபஸ் போல அவர்கள் அமெரிக்காவை தன் பிடியில் வைத்து, விருப்பம் போல் ஆட்டுவிக்கும் மயக்குவித்தை கவனி. தனக்காக ஒரு வல்லரசு போரிடவும், அவர்களின் இராணுவ பலத்தையும், பொருளாதார பலத்தையும் தன்னுடைய தேவைக்கும், ஆசைக்கும், பாதுகாப்புக்கும் பயன்படுத்திக்கொண்டு தனது எதிரிகளை அழிக்கும் ஈனச்செயலை கவனி. எப்படி அந்த வல்லரசு இதற்கு ஊமையாக உடன்படுகிறது என்கிற சூட்சுமம் புரி. உலக அரசியல் ஓரளவாவது புரிந்துவிடும். பாலஸ்தீன மக்களின் நிலையில்தான் இன்று தமிழர்கள் இருக்கிறார்கள். தண்ணீருக்கும், சோற்றுக்கும் கர்நாடகம், கேரளம், ஆந்திரம் என அண்டை மாநிலங்களிடம் அண்டிப்பிழைக்கும் நிலை இன்னும் எத்தனை நாளுக்கு உதவும் என்று நினைக்கிறாய். ஒரு நாள் மொத்தமாய் முடித்துவிடுவார்கள். அதற்குள் விழித்தால் பிழைக்க முயற்சி செய்யலாம்.

பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்.
-குறள்-975

ஈரானை உற்றுக்கவனி. அவர்களின் இராணுவ நகர்வுகள், அரசியல் அசைவுகள் கவனி. இனம் காக்க, தன் ஆளுமையை நிலைநிறுத்த, தன் அரசியல் தன்னிடமே இருக்குமாறு பார்த்துக்கொள்ள, தன் பண்பாட்டின் மீது மற்றொருவன் பெட்ரோல் ஊற்றுவதை தடுக்க, தன் மக்களின் வாழ்வியலை வழிநடத்த அவர்களின் முயற்சியை பார்த்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும். எதிரி எத்தனை வலிமையானவன் என்பதை விட, அவனை எதிர்கொள்வது எப்படி என்கிற யோசனை, அறிவு, பயிற்சி, ஆயுதம், அத்தனையும் கற்க வேண்டிய பாடமாக உலக மனித இனத்துக்கே விளங்குகிறது. கம்சனை வீழ்த்திய கண்ணனாக, கோலியாத்தை வீழ்த்திய ஈசாக்கை போல ஈரானின் வீரமும் செயல்பாடும் தமிழினத்தின் அவசியத்தேவை என்பதை எப்போது புரிந்துக்கொள்வாய்..?? ஒற்றுமையும் தெளிந்த அறிவும், செயல்படும் வீரமும் மட்டுமே நம்மை பாதுகாக்கும்.

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்.
-குறள்-388

இறுதியாக ஒன்றை சொல்லி முடிக்கிறேன். இந்த உலகில் மற்ற எல்லாமும் அழிந்து போனாலும் திருக்குறளும், கம்பராமாயணமும் அழியாமல் பாதுகாத்துவிட்டால், மனித இனத்தையும், நாகரிகத்தையும் காப்பாற்றிவிடலாம் என்று சொன்னவன் கூற்றை நினைவூட்டி சொல்கிறேன் கேள். இதன் பொருள் என்ன..?? தமிழினம் அழியாமல் இருந்துவிட்டால் உலக மனித நாகரிகம் பண்பாடு அழியாமல் மீட்டெடுக்க முடியும் என்கிற வாக்குமூலத்தை தவிர வேறென்ன..?? எப்படிப்பட்ட நாகர்கள் இனத்தின் நீட்சியாக நாம் இருக்கிறோம் என்பதையும், நாகரிகத்தின் உச்சமாகவும் இருக்கிறோம் என்பதை இப்போதேனும் புரிந்து உணர்ந்து இனம் காப்பாய். மானம் காப்பாய். அழியாத தமிழர் தம் வீரம் காப்பாய் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கையுடன்....

நமக்கான எதிர்காலம் நோக்கி......



# ‘விமர்சனங்களே எழுத்துக்கு உரம்’ – எழுத்தாளர் கண்ணன் விஸ்வகாந்தி

**பரிவை சே. குமார்**

**எழுத்தாளர் கண்ணன்-** தனது படைப்புகளின் மூலம் கவனம் பெற்று எழுத்துலகில் தனக்கென ஒரு இடத்தைப் பிடிக்க முயலும் பலரில் ஒருவராகச் சாதித்திருக்கிறார். இவரின் ‘அதீதத்தின் பசி’ என்ற கவிதைத் தொகுப்புக்கு இந்த ஆண்டுக்கான சௌமா இலக்கிய விருது கிடைத்துள்ளது.

கண்ணனின் படைப்புகள் எனக்கு நடுகல் இணைய இதழ் மூலமாகவே முதலில் அறிமுகமானது. அவரின் எழுத்தை தொடர்ந்து வாசிக்கவும் நடுகல் உதவியாக இருந்தது. கவிஞராக தனது இலக்கியப் பயணத்தை ஆரம்பித்தவர், அந்த இடத்திலேயே நிற்காமல் சிறுகதை, நாவல் என தனது எழுத்தின் பக்கங்களை விரித்து, தனக்கென ஒரு இடம் பிடித்திருக்கிறார்.

இவர் இதுவரை கோதமலைக் குறிப்புகள், நதி தொலைந்த கதை, அதீதத்தின் பசி என்ற கவிதைத் தொகுப்புகளும், கறுப்பு வண்ணமடித்த இரும்புக் கதவுகள், நீல நிறச் சீருடை அணிந்தவர் என்ற சிறுகதைத் தொகுப்புகளும், தாழ்வரை என்ற நாவலும் எழுதியிருக்கிறார். இவரின் எழுத்துப் பயணம் இன்னும் சிறப்பாகத் தொடர விண்மீன் வாழ்த்துகிறது.

இனி,

**எழுத்தாளர் கண்ணன் விஸ்வகாந்தி பற்றிச் சொல்லுங்கள்?**

மிகவும் சோம்பேறியான ஒருவன். கிடைக்கும் நேரத்தைச் சரியாக உபயோகித்தால், இன்னும் நிறைய எழுத முடியும். எழுத ஆரம்பிப்பதுதான் கடினம். இன்னும் கொஞ்சம் டிசிப்லினாக இருக்க வேண்டும். தினமும் குறைந்தது நூறு வரிகளாவது எழுத வேண்டும்.

சிறுகதை வடிவத்தில் இன்னும் முன்னேற வேண்டும்.

பார்க்கலாம்.



**கவிஞர் எப்போது... எப்படிக் கதையாசிரியராய் மாறினார்?**

எனது முதல் கவிதைத் தொகுப்பான ‘கோதமலைக்குறிப்புகள்’ வெளியான போது, எனது நண்பர் கவிஞர் அ. கார்த்திகேயனின் ‘வேட்கை’ அமைப்பு வழியாக விமர்சனக் கூட்டம் நடந்தது. பலரின் மதிப்புரைகளும், கவிதைகளில் சிறுகதை அம்சம் உள்ளதாக இருந்தது. எழுதித் தான் பார்ப்போமே என்று, அமெரிக்க நிகழ்வு ஒன்றை ‘கம்பிகளுக்குப் பின்னால்’ என்று ஒரு சிறுகதையாக எழுதினேன். அக்கதையை எழுத்தாளர் உஷா தீபன் அவர்களிடம் முகநூலின் உள்பெட்டியில் பகிர்ந்து கொண்டேன். “சுருக்கமான கதை. சில வார்த்தைகளில் கதை சொல்லல்” எனப் பாராட்டினார். அது எனக்கு மிகப்பெரிய ஊக்கமளித்தது. லண்டனில் இருந்து வரும் ‘காற்றுவெளி’ இணைய இதழுக்கு அனுப்பி விட்டு, மறந்து விட்டேன். இரண்டு மாதங்கள் கழித்து, ஆசிரியர் முல்லை அமுதனிடமிருந்து பிடிஎப் இதழ் இமெயிலுக்கு வந்தது. எனது முதல் சிறுகதை பிரசுரமாகியிருந்தது. நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

**தங்களது பெரும்பாலான படைப்புகள் இறப்பைப் பற்றி பேசுவதாய் இருக்கின்றன, இறப்புக் குறித்து எழுதுவதில் தங்களுக்கு இயல்பாகவே விருப்பம் அதிகமா? அல்லது அதுவும் பேசப்பட வேண்டிய ஒன்றுதானே என்ற எண்ணமா?**

இப்படி ஒரு கருத்தை இப்போது தான் கேட்கிறேன். நெருங்கிய சொந்தங்களின் இறப்பு என்னை மிகவும் பாதித்தது. இப்போதும் பாதிக்கிறது. எனது பாட்டி, தாத்தா பிறகு அப்பா, அம்மா, மாமனார், மாமியார், சின்ன அத்தை ஆகியோரின் இறப்பு என்னை மிகவும் பாதித்தது. அதுவும் எனது அப்பா, அம்மா மற்றும் எனது மனைவியின் அப்பா, அம்மா ஆகியோர் வரிசையாக இறந்த போது, "எனக்கு மட்டும் யாருமே இல்லையேப்பா. என்னைய மட்டும் தனியா உட்டுட்டு போயிட்டிங்களேப்பா?" என்று தான் அப்பாவைப் பார்த்து அழுதேன். சில வருடங்களுக்கு சொர்க்க ரதம் எங்கு போனாலும், முகத்தை திருப்பிக் கொள்வேன். அவ்வளவு ஒவ்வாமை. பிறகு கொஞ்சம் கொஞ்சமாக பழகிக் கொண்டேன். இப்போது உறவினர்கள் இறப்புக்கு தைரியமாச் செல்கிறேன்.

மற்றும் ஒரு முக்கியமான காரணம், நான் பலமுறை உயிர் பிழைத்து வந்தவன். நோய் மற்றும் பல விபத்துகளில் இருந்து தப்பிப் பிழைத்தவன். இதுவும் ஒரு முக்கியமான காரணம்.

**கவிஞர்கள் நாவல்கள் எழுதும் போது எழுத்தில் அதிகம் கவிதை நடை இருப்பதைப் பார்த்திருக்கிறோம். தங்களது கதைகளிலும் கவிநயம் வருமல்லவா? அது கதையோட்டத்துக்கு வலு சேர்க்கும் என நினைக்கிறீர்களா?**

கவிஞர்கள் உரைநடை எழுதும் போது, தானாகவே எழுத்தில் கவித்துவம் மிளிரும். ஆனால் எனது நடையில் இன்னும் அதிகமாக வெளிப்படவில்லை. ஏனெனில் இப்படித்தான் நடை இருக்க வேண்டும் என்று வலிய நான் எழுதுவதில்லை.

வலு சேர்க்காமலும் போகலாம். ஆனால் வாசிப்பு அனுபவத்திற்கு நிச்சயமாக உதவும்.

**கவிஞர் சுரதாவுடனான தொடர்பால் கவிஞரானதாய் சொல்லியிருக்கிறீர்கள், அவருடனான தொடர்பு பற்றி விரிவாகச் சொல்லுங்களேன்?**

கவிஞர் சுரதாவின் தொடர்பு கடவுளின் ஆசி. இது நடந்து முப்பது வருடங்களுக்கு மேலிருக்கும். சுரதா சேலத்திற்கு வந்திருந்த போது, பழைய பேலஸ் தியேட்டருக்கு எதிரில், இப்போதைய லட்சுமி காபி பார் இருக்கும் சுப்பராயன் சாலையில் ஒரு லாட்ஜில் தங்கியிருந்தார். நான் அவரைப் பார்க்கச் சென்றிருந்தேன். பன்னிரண்டாம் வகுப்பு முடித்து விட்டு, கல்லூரி முதல் வருடம் என்று நினைக்கிறேன். "வாப்பா, போயி பக்கத்து ஓட்டல்ல ஒரு வெண்பொங்கல் வாங்கிட்டு வா" என்றார். எனக்கு சற்றே அதிர்ச்சி. என்னடா இது, முதல் முறையாக பார்க்க வந்தவனை, பொங்கல் வாங்கி வரச் சொல்கிறாரே என்று. ஆனால் மிகவும் அன்பாகப் பழகினார்.

தருமபுரியில் நடந்த கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழாவிற்கு அழைத்துச் சென்றார். அப்போது காவல்துறை ஆய்வாளராக இருந்த "குப்பைக் கவிஞர் குளச்சல் குமரேசன்" அவர்களது நூலைப் பற்றிப் பேச வேண்டும். ஏற்கனவே வெள்ளைத் தாளில் எழுதி எடுத்துச் சென்று இருந்தேன். கவிஞர் பழ. புகழேந்தி அவர்கள் வெகு இலகுவாக, அருமையான கவிதை ஒன்றை வாசித்து, கவிஞர் அய்யாவிடம் பாராட்டு பெற்றார். அடுத்ததாக எனது முறை. மைக்கைப் பிடித்துப் பேச முடியவில்லை. கைகால்கள் நடுங்குகின்றன. கால்கள் எங்கோ அதாள பாதாளத்தில் இருந்தன. வெள்ளைத் தாள்கள் கையிலிருந்து எப்போது நழுவுமோ என்று இருந்தது. எப்படியோ சமாளித்து, மைக்கையும், தாள்களையும் கெட்டியாக பிடித்துக் கொண்டு, எழுதிச் சென்ற கவிதையை வாசித்து முடித்தேன். கவிஞர் சுரதா அய்யா, என்னைப் பார்த்து, "கருத்த பையன். நல்லா கவிதை எழுதறான். பேர் என்ன சொன்ன?. கண்ணன். கவிதை கண்ணன். எதுகை மோனை நல்லா இருக்கு. அப்படியே வச்சுக்கோ" என்றார். இந்த வாழ்நாளில் பெற்ற பேறு. மோதிரக்கையால் வாங்கிய கொட்டு.

**பரவலான கவனத்தைப் பெற்ற தங்களது முதல் நாவலான 'தாழ்வரை' பேசும் களம் புனைவு கலந்த உங்களது கதை என்று சொல்லியிருக்கிறீர்கள். அதிலும் பால்ய கால வாழ்க்கைதான் அதிகம் நிரவிக் கிடக்கும். எதனால் அப்படி யோசித்தீர்கள்?**

ஆம், தாழ்வரை நாவல் புனைவு கலந்த எனது வாழ்க்கையின் கதை. எனது பால்ய கால வாழ்வு இல்லாமல், எனது கதை எப்படி முழுமையாகும்?

'தாழ்வரை' நாவல் உருவான விதத்தைப் பற்றிச் சொல்லுங்களேன்?

எழுத்தாளர் வா.மு.கோமு அவர்களுக்கு, அவரது கெடா வெட்டு நாவலுக்கு, ஈரோட்டில் பாராட்டு விழா நடந்த போது, எழுத்தாளர் மதனைச் சந்தித்தேன்.

தேநீர் இடைவெளியில் பேசிக் கொண்டு இருக்கும் போது, எனது அடுத்த படைப்பு பற்றிய பேச்சு வந்தது. நாலு நாவல்களுக்கான கரு மனதில் இருக்கிறது என்று சொன்னேன். நடுகல் இணைய இதழில் தொடராக எழுதிய பிறகு நூலாக வெளியிட முடிவு செய்து ஆரம்பித்தது தான் 'தாழ்வரை' நாவல். ஒவ்வொரு அத்தியாயமும் மதனின் வாசிப்பிற்குப் பிறகே வெளிவந்தது. அவருடைய உதவி அளப்பரிய ஒன்று. அவருக்கும், நாவலை தொடராக வெளியிட்ட எழுத்தாளர் வா.மு.கோமு அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை இந்நேர்காணல் வழியாக தெரிவித்துக் கொள்கிறேன்.

**தங்களது 'கோதைமலைக் குறிப்புகள்' கவிதைத் தொகுப்பின் தொடர்ச்சிதான் 'தாழ்வரை' நாவல் என்ற கருத்தை ஏற்கிறீர்களா? அப்படியெனில் இரண்டுக்குமான தொடர்பு என்ன என்பதைச் சொல்லுங்களேன்?**

ஆம், 'கோதமலைக் குறிப்புகள்' கவிதைத் தொகுப்பின் தொடர்ச்சி அல்லது விரிவுதான் 'தாழ்வரை' நாவல். கவிதைத் தொகுப்பில் பதினோரு கவிதைகளே, கோதமலை அடிவாரத்தில் நான் வாழ்ந்த வாழ்வு பற்றி இருந்தது. ஒவ்வொரு கவிதையிலும் ஒரு சிறுகதை இருந்தது. சிறுகதையையும் மீறி சொல்ல வேண்டிய ஒரு வாழ்க்கை இருந்தது. இதுதான் தொடர்பு.

**மென்பொருள் மேலாளர் பணியில் இருந்து கொண்டு கவிதை, சிறுகதைகள், நாவல்கள் என எழுதுவதில் நேரச் சிக்கல் ஏதும் இருக்கிறதா? அப்படி இருக்கும் பட்சத்தில் அதை எப்படிக் கையாளுகிறீர்கள்?**

நிச்சயமாக நேரம் போதவில்லை. ஆனாலும் கிடைக்கும் நேரத்தில் எழுத விடாமல் சோம்பேறித்தனமும் இருக்கிறது. பெங்களூரில் தனிமையில் இருக்கும் நாட்களில் எழுதுகிறேன். ஒரே மூச்சில் எழுதுவதில்லை. நேரம் கிடைக்கும் போதெல்லாம், சிறிது சிறிதாக எழுதிய பிறகு, சரி பார்க்கிறேன். எவ்வளவு நேரம் கிடைத்தாலும், எழுதும் மனநிலை இல்லையெனில் எழுதுவது கடினம். தினமும் கொஞ்சம் எழுதுங்கள் என்பார் சுஜாதா. ஆனால் நடைமுறையில் கடினம்.

**சௌமா இலக்கிய விருது பெற்ற போது தங்களின் மனநிலை எப்படி இருந்தது. சாதிச்சிட்டோம் என்று நினைத்தீர்களா அல்லது இனிமேல்தான் சாதிக்கணும் என நினைத்தீர்களா?**

சௌமா விருது மனசுக்கு மிகவும் மகிழ்ச்சி தந்த ஒரு விருது. அதுவும் கவிதைக்குக் கிடைத்ததில்

கூடுதல் சந்தோஷம். ஒவ்வொரு வருடமும் அனுப்பி வைப்பது போலத்தான் இந்த வருடமும் அனுப்பி வைத்தேன். திடீரென ஒரு கைபேசி அழைப்பு வந்தது. தங்களின் கவிதைத் தொகுப்பான 'அதீதத்தின் பசி' சௌமா விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார். சிறப்பான பரிசளிப்பு விழா. எனக்கு பிடித்த எழுத்தாளர் நாஞ்சில் நாடன் அவர்களின் கைகளால் விருது பெற்றது மறக்க முடியாத அனுபவம். படைப்பாளர்களை சந்திக்க ஒரு சிறப்பான வாய்ப்பாக அமைந்தது.

சௌமா விருது மேலும் சாதிக்க வேண்டும் என்ற தூண்டுதலைக் கொடுத்திருக்கிறது.

**தங்களைப் பொறுத்தவரை கவிதை, சிறுகதை, நாவல் இதில் எது இலகுவாக எழுத முடியும் என நினைக்கிறீர்கள்?**

கவிதையை இலகுவாக எழுத முடியும். கட்டமைக்கப்பட்ட கவிதைகளையோ, படிமங்களின் அடுக்குகளையோ நான் குறிப்பிடவில்லை. உள்ளொளியின் தெறிப்புகளைச் சொல்கிறேன்.



**வேலைக்கு இடையே எழுதுவதே கடினம் என நினைப்போர் மத்தியில் எழுத்துடன் 'வாசிப்போம் தமிழ் இலக்கியம் வளர்ப்போம்' போன்ற குழுக்களிலும் தீவிரச் செயல்பாடுகள் எப்படிச் சாத்தியம் ஆகிறது?**

இப்போது நான் அக்குழுவின் நெறியாளராக இல்லை. புத்தகங்களை வாசிக்கும் போது, சிறு குறிப்புகளை எழுதி வைத்துக் கொண்டு, வாசிப்பு அனுபவமாக எழுதினேன். ஆயினும் குறைந்தது இரண்டு முறையாவது வாசித்தால்தான், வாசிப்பு அனுபவத்தை எழுத இயலும். பிடித்த வேலையைச் செய்கையில் நாமே அதற்கான நேரத்தை ஒதுக்கி விடுகிறோம். எனக்கு வாய்ப்பு கொடுத்த குழுவின் நிறுவனரான மந்திர மூர்த்தி அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

**'தாழ்வரை' நடுகல்லில் தொடராக வெளிவந்து பின்னர் நாவலானது அல்லவா? நடுகல்லுக்கும் தங்களுக்குமான உறவு எப்படிப்பட்டது? தங்களின் எழுத்துக்கு எழுத்தாளர் வா.மு. கோமு அவர்கள் கொடுத்த ஊக்கம் பற்றிச் சொல்லுங்களேன்?**

ஆம், 'தாழ்வரை' நாவல் 'நடுகல்' இணைய இதழில் தொடராக வந்து, பிறகு நாவலானது. நான் கவிதையிலிருந்து சிறுகதைக்கு வருகையில், எனக்கு வாய்ப்பு கொடுத்த பிளாட்பார்ம் நடுகல் இணைய இதழ். எழுத்தாளர் வா.மு.கோமு அவர்கள் முதலில் எனது வாசிப்பு அனுபவங்களை வாங்கி வெளியிட்டார். பிறகு சிறுகதை எழுத வாய்ப்பளித்தார். நடுகல் இன்று புதிதாக எழுத வருபவர்களுக்கு ஒரு ஆலமரம் போன்றது.

இதனால் நடுகல் இணைய இதழும், நடுகல் முகநூல் பக்கமும் என் மனதிற்கு மிகவும் நெருக்கமானவை. இன்றும் நடுகல் முகநூல் பக்கத்தில் நெறியாளராகத் தொடர்கிறேன்.

எனது இரண்டு சிறுகதைத் தொகுப்புகளின் பெரும்பாலான கதைகள் நடுகல் இணைய இதழில் வெளிவந்தவை. இதில் எனக்கு மிகவும் பெருமை.
எழுத்தாளர் வா.மு.கோமு அவர்களுக்கு மீண்டும் எனது மனமார்ந்த நன்றிகள்.

**தங்களது படைப்புக்களுக்கு வரும் விமர்சனங்களை எப்படி எடுத்துக் கொள்கிறீர்கள்?**

விமர்சனங்களை நேர்மறையாகவே எடுத்துக் கொள்கிறேன். நானும் எழுத்தாளர் இத்ரீஸ் யாக்கூப் அவர்களும் நல்ல நண்பர்கள். எனது படைப்புகளை கிழித்துத் தொங்க விடுவார். அப்போதும் அவரிடம்




"தாராளமாக விமர்சனத்தை அப்படியே வெளியிடுங்கள்" என்று சொல்வேன். அவருக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

எனது முதல் கவிதைத் தொகுப்பான 'கோதமலைக் குறிப்புகள்' கவிதைத் தொகுப்புக்கு, நண்பர் கவிஞர் அ.கார்த்திகேயன் தனது 'வேட்கை' 'அமைப்பு மூலமாக விமர்சனக் கூட்டம் நடத்தினார். அதில் பேசிய கவிஞர் அகச்சேரன் பல கவிதைகளை "வார்த்தைகளின் அணிவகுப்பு" என்று விமர்சித்தார். மனசுக்கு கொஞ்சம் கஷ்டமாக இருந்தது. ஆனால் இன்று என்னால் நீண்ட கவிதைகளை எழுத இயலவில்லை. எனது கவிதை மொழி மிகவும் சுருங்கி விட்டது. அவருக்கு எனது மனமார்ந்த நன்றிகள். கார்த்திகேயன் அவர்களுக்கு எனது நன்றி.

விமர்சனங்களே எழுத்துக்கு உரம்.

**தங்களது ஆதர்ச எழுத்தாளர்கள் என யாரைச் சொல்வீர்கள்? அவர்களின் படைப்பில் தங்களைக் கவர்ந்தது எது?**

ஆதர்ச எழுத்தாளர்கள் என்று எவருமில்லை. ஏனெனில் எல்லோருடைய எழுத்துக்களையும் படித்து வளர்ந்தவன். ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு எழுத்தாளர் நம்மை வசீகரிப்பார்.
அண்மையில் அசோகமித்திரனின் ஒற்றன் வாசித்தேன். அவருடைய கரைந்த நிழல்கள் மற்றும் 18வது அட்சக்கோடு நாவல்கள் மிகவும் பிடித்தவை. அவருடைய புலிக்கலைஞன் உலக அளவில் ஒப்பிடக் கூடிய மிகச் சிறந்த சிறுகதை.




**விருதுகள்தான் ஒரு நல்ல எழுத்தாளனை அடையாளம் காட்டும் என ஒரு சிலர் சொல்வதோடு ஒத்துப் போகிறீர்களா... இல்லை எழுத்துதான் விருதை முடிவு செய்யும் என்பவர்களோடு நிற்கிறீர்களா?**

எழுத்துதான் விருதை முடிவு செய்யும் என்பதில் உறுதியாக இருக்கிறேன். எத்தனை விருதுகள் பெற்றாலும் சரக்கு இல்லையெனில் எந்த ஒரு படைப்பும் காலத்தை மீறி நிற்காது.

**தற்போதைய எழுத்தாளர்களின் படைப்புக்கள் குறித்து தங்களின் பார்வை என்ன?**

தற்போதைய எழுத்தாளர்களின் படைப்புகள் சிறப்பாக இருக்கிறது. நம்பிக்கை அளிக்கிறது.

கவிதையில் ஒரு பெரிய லிஸ்ட் இருக்கிறது. பட்டியல் இடுதல் கடினம். இணைய இதழ்களில் வரும் சிறுகதைகளை வாசிக்கிறேன். சிறப்பான சிறுகதைகள் வெளிவருகின்றன.

சமீபத்தில் எழுத்தாளர் சிவக்குமார் முத்தையா அவர்களின் ஒதம்பல் நாவல் வாசித்தேன். கீழ் வெண்மணி சம்பவத்தை அடிப்படையாகக் கொண்ட சிறப்பான நாவல்.

**வாசிப்பே நல்ல எழுத்தைக் கொடுக்கும் என்பதைத் தாங்கள் எப்படி எடுத்துக் கொள்கிறீர்கள்?**

நிச்சயமாக. தொடர் வாசிப்பு இல்லையெனில் தேங்கி விடுவோம். ஒன்று இன்றைய காலகட்டத்தில் வெளிவரும் படைப்புகள் பற்றி அறிந்து கொள்ளலாம். மற்றொன்று எழுத்தாளர் அடைப்பில் (writer's block) இருந்து வெளிவரலாம்.

**தற்போது எழுதிக் கொண்டிருக்கும் படைப்பு குறித்துச் சொல்லுங்களேன்?**

அடுத்த நாவலின் முதல் அத்தியாயம் எழுத ஆரம்பித்திருக்கிறேன். இதுவும் ஒரு தொடராக வந்த பிறகு நாவல் வடிவம் பெறும்.

**முழுக்க முழுக்க தங்களது வட்டார வழக்கில் நாவல் எழுதும் எண்ணம் இருக்கிறதா? அப்படியெனில் எப்போது எதிர்பார்க்கலாம்?**

எனக்கு வட்டார வழக்கில் எழுதத் தெரியாது. அப்படி ஒரு நாவல் எழுதும் எண்ணமில்லை.

நான் வாழும் சேலத்திற்கென்று தனியாக வட்டார வழக்கு எனக்குத் தெரிந்த அளவில் இல்லை என்றே சொல்ல வேண்டும். சேலமும் கொங்கு மண்டலத்தில் வருவதால் அதையே சேலத்தின் வட்டார வழக்காக எடுத்துக் கொள்ளலாம். வருங்காலத்தில் முயற்சி செய்யலாம்.

# சிலேடையில் சிக்கிய சோழம்



## கற்பனை வரலாற்று தொடர்கதை

## பகுதி 2: ஏகவீரியின் இருள் புன்னகை

கங்கா (காங்கேயன் பசுபதி)



**முன்கதை சுருக்கம்:**

நாகைப் பெருந்துறையில் சோழ ஒற்றன் சாத்தன் மர்மமான முறையில் கொல்லப்படுகிறான். அவனது கைவசமிருந்த ஓலை, காதல் கவிதை போலத் தெரிந்தாலும், உண்மையில் சோழரின் கடாரப் படையெடுப்புத் திட்டத்தை மறைத்துக் கூறும் சங்கேதக் குறியீடு என்பதை வீரசோழி கண்டறிகிறாள். 'கங்கா' எனும் புனைபெயரில் இயங்கும் துரோகி ஒருவன் சோழப்படையின் போர்த் திட்டத்தை எதிரிகளுக்கு விற்று வருவதை அந்தக் கவிதை உறுதிப் படுத்துவது போல் இருக்கிறது.

இனி....

சாத்தனின் உறைந்த உதிரமும், அந்தச் சிலேடைச் சுவடியும் நாகப்பட்டினத்தின் காரிருளை இன்னும் அடர்த்தியாக்கின. ஒற்றர்களின் வலை பின்னப்படும் அந்த இருளில், மறைபொருள் ஆய்வாளர் வீரசோழியின் பார்வை காரிருளையும்

பிளந்து, வீரமாறனின் முகத்தில் மறைந்திருக்கும் உண்மையைத் தேடியது. அவள் விழிகள், தீப்பந்த ஒளியிலும் சலனமற்று நின்ற வீரமாறனின் முகத்தில் எழும் நுட்பமான உணர்வு மாற்றங்களையும் கூர்ந்து நோக்கின. வீரமாறன், போர்க்களத்தின் ஆயிரம் வாள்வீச்சுகளைக் கண்டவன். உள்ளத்தின் தத்தளிப்பை முகத்தில் சற்றும் வெளிக்காட்டாமல், பெரும் பாறையைப் போலக் கலக்கமின்றி நின்றான்.

"உண்மைதான் தேவி," வீரமாறனின் குரல், காற்றைக் கிழிக்கும் கூர்வாள் எனத் துல்லியமாக ஒலித்தது. "இக்கவிதையைப் படைத்தவன் ஏதோ வெறுமொரு கவிஞனல்ல. பேரறிஞன், அதே சமயம் பெரும் பித்தன். சாத்தனின் கையில் இந்தச் சுவடி எப்படிச் சேர்ந்தது, இதைத் தந்தது யார் என்பதைக் கண்டறிந்தால், அந்த நிழல் மனிதன் கங்காவை நாம் நெருங்கிவிடலாம்."

"அப்படியானால் நம் படையிலேயே வஞ்சகன் புகுந்துவிட்டானா?" பழையனின் குரலில் நஞ்சு கலந்திருந்தது. அவனது விரல்கள் வாளுறையை இறுகப் பற்றின. அவனது கன்னத்துத் தழும்பு சினத்தில் துடித்தது. "போர் முரசறைந்து வேளைக்காரப் படையினரை அணிதிரட்டுங்கள். அந்த 'கங்கா' எவன் என்று கண்டறிந்து, அவன் தலை நாகப்பட்டினத்து வீதியில் உருளட்டும்!"

வீரசோழி ஓலையை மார்போடு அணைத்துக்கொண்டாள். "வேண்டாம் பழையா! முரசறைந்தால், எலி வளையில் ஒளிந்து கொள்ளும். அல்லது, வலையறுத்துத் தப்பிச் செல்லும். இதனைப் பொறுமையுடனும் நிதானத்துடனும் தான் சீர்தூக்க வேண்டும்."

அவர்கள் பூவணத்தின் விடுதியை நோக்கி நடந்தனர். தூரத்தில், கடாரப் படையெடுப்பிற்காக உயர்ந்து நிற்கும் நாற்பது துடுப்பாட்கள் இழுத்த நாவாய்களின் மீது, தச்சர்களின் உளி ஓசை அந்திச் செவ்வானத்தின் காற்றில் கலந்தது. அந்த ஓசையினூடே போருக்கு முந்தைய நிசப்தமும் கனத்து நின்றது.

பழையன் அந்த மரக்கலன்களையே வெறித்தான். "எல்லோருக்கும் இந்தக் கப்பல்கள் நாளைய வெற்றியின் அடையாளமாகத் தெரியலாம். எனக்கோ… இவை அறத்தின் பெயரால் நாம் கொடுக்கவிருக்கும் மாபெரும் பலியாகத் தோன்றுகின்றன. ஒவ்வொரு முறையும் நாவாய்கள் கடலில் இறங்கும்போதும், நம் சோழத்து இளைஞர்களின் குருதியைக் குடிக்கக் கடல் காத்திருக்கிறதே என என் நெஞ்சம் பதறுகிறது."

"இவற்றால்தான் நம் கடல்வழி மீளும்," வீரமாறன் அமைதியாகப் பதிலளித்தான்.

"மீண்டும் மீட்கப்பட வேண்டிய வழி என்றால்… அது நிஜமாகவே நமதா?" பழையனின் குரலில் மெய்ம்மையை விடக் கசப்பே மேலோங்கியிருந்தது.

அவனது இந்தக் கசப்பான வினாவைக் கேட்டு வீரசோழியின் புருவங்கள் சுருங்கின. அவள் வீரமாறனை ஏறிட்டு, "சாத்தன் கடைசியாக எங்கு சென்றான் என்பதை நாம் அறிய வேண்டும் தண்டநாயக்கரே," என்றாள்.

பக்கத்திலிருந்த மூத்த வீரன் கோதண்டன் சற்றே முன்வந்து, "நேற்றிரவு சாத்தன், ஏகவீரி பூவணத்தின் விடுதிக்குச் சென்றதை நான் கண்டேன்," என்று உரைத்தான்.

விசாரணை தீவிரமடைந்த அந்த வேளையில், வேளைக்காரப் படை வீரர்களின் கூட்டத்திலிருந்து நிழல் ஒன்று, எவருக்கும் தெரியாமல் இருளுக்குள் நழுவியது.

துறைமுகத்தின் இருண்ட முனையில், நங்கூரமிட்டிருந்த அயல்நாட்டுப் பெருங்கலத்தின் நிழலில் அநங்க தேவன் காத்திருந்தான். நிலவின் ஒளியில் அவனது கைக் கங்கணம் மின்ன, நெடிய நிழலொன்று நெருங்கியது. அது பழையன் அல்ல, பழையனால் அனுப்பப்பட்ட மூத்த தானைத்தலைவன். கடாரத்து வேந்தன் சங்கிராம விஜயதுங்கவர்மன் விடுத்திருந்த திருமுகத்தை அநங்க தேவன் காட்டினான். அவனது வலது கைக் கங்கணத்தில் பொறிக்கப்பட்டிருந்த கடாரத்தின் 'யாழி' அடையாளம் நிலவொளியில் மின்னியது.

அதைப் பெற்றுக்கொண்ட அந்தச் சோழத் தானைத்தலைவனின் குரல் இருளில் தாழ்ந்தது: "உங்கள் வேந்தர் என்னை நம்புகிறார். ஆனால் நான் நம்புவது வேறு. இந்தப் பேரரசு கடாரத்தை வீழ்த்தினால், அடுத்தது ஸ்ரீவிஜயமும், பல்லவமும், ஈழமும், ஒவ்வொரு நாடாக விழும். அது வீரமாறனின் கவிதை அல்ல. ராஜேந்திரரின் கடலாதிக்கப் பெருவேட்கை. நான் சோழ நாட்டை விற்கவில்லை. சோழப் பேரரசின் அடங்காப் பசியை அடக்கவே கடாரத்துடன் கைகோர்த்தேன்." அவன் சாத்தனிடமிருந்து கைப்பற்றிய திருமுகத்தை நீட்டினான். "இதன் குறிக்கோள் மாநக்கரம் (சோழர் வரலாற்றில் "மாநக்கரம்" அல்லது கல்வெட்டுகளில் மாநக்கவாரம் எனக் குறிப்பிடப்படுவது இன்றைய நிக்கோபார் தீவுகளைக் குறிப்பதாகும்). இதை உங்கள் வேந்தருக்குத் தெரிவியுங்கள். ஆனால் சோழர்களை அவர்கள் வலையிலேயே வீழ்த்த

எனக்கு இன்னும் சில பகடைக்காய்கள் தேவை. அதனால், இந்தச் சுவடி இன்னும் சில காலம் என் வசமே இருக்கட்டும்."

சோழர்களின் முந்தைய படையெடுப்பில் தன் குடும்பத்தை இழந்தவன் அநங்க தேவன். "சோழக் கூர்ப்புகள் என் ஊரின் துறைமுகத்தைக் கிழித்தபோது, என் தந்தையின் மரக்கலமும், அதனுள் அவரும் கடலுக்கடியில் புதைந்தார்கள். அந்தக் கடன், இந்தச் சோழத்தின்மேல் எனக்கு உரியது," என்று தனக்குள் முணுமுணுத்தான். வெறும் வஞ்ச நெருப்பல்ல, ஆறாத ஒரு பழைய காயமும் சேர்ந்தே அவனை இருளில் இழுத்துச் சென்றது.

துறைமுகத்திலிருந்து பூவணத்தின் விடுதிக்குத் திரும்பிய அநங்க தேவன், தன் உடைமைகளை எடுத்துக்கொண்டு புறப்பட முனைந்தான். அப்போது பூவணம் அவனது வழியை மறித்தாள். அவளது பார்வையில், அநங்க தேவனை ஊடுருவும் அந்தச் சிலந்தி வலைத் தந்திரம் தெரிந்தது.

"கடலோடி ஐயா, இவ்வேளையில் வடக்குத் துறைமுக வாயில் மூடப்பட்டிருக்கும். மாமன்னரின் சுங்கக் காவலர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள்."

அது அப்பட்டமான பொய். ஆனால் அந்தப் பொய்தான் அவளுக்குத் தேவையான கால அவகாசத்தைப் பெற்றுத் தந்தது. வீரமாறனும் வீரசோழியும் விடுதியை அடைந்து அவனது மாடி அறையைச் சோதனையிடப் போகிறார்கள் என்பதை அந்த நேரத்தில் அந்த மாயக்காரி மட்டுமே அறிந்திருந்தாள்.

அநங்க தேவனும் அந்தத் தளபதியும் இருளில் சந்திப்பதை, விடுதியின் மேல்மாடி பலகணியிலிருந்து பூவணம் கவனித்திருந்தாள். அவள் வெறும் விடுதிக்காரி அல்ல. அந்த விடுதியின் வலைகளில் பதுங்கியிருக்கும் சிலந்தி. கொற்கையின் முத்துக்குளிப்பவர்கள், துறைமுகத்தில் மீன் விற்கும் வலையர் குலத்துப் பெண்கள், வீதி வீதியாகப் பாடித் திரியும் பாணர்கள் என நாகப்பட்டினத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் அவளது கண்கள் விழித்திருந்தன. அரண்மனை அதிகாரிகளின் ஒற்றர்களை விட, எளியவர்களின் இந்த மறைவுப் பிணைப்பே ஏகவீரி பூவணத்தின் ஒற்றர் வலைப்பின்னலுக்கு ஆணிவேராக அமைந்திருந்தது. "சிலந்தி தன் வலையைத் தொட்டவுடன் பாய்ந்துவிடாது... எப்போது இரையை வீழ்த்த வேண்டும் என்று காத்திருக்கும்.

நாகப்பட்டினத்தின் ஒவ்வொரு நாடியும் எனக்குத் தெரியும். ஏனென்றால், இந்த நகரமே நான் பின்னிய வலை." என்று அவள் அடிக்கடி கூறுவதுண்டு. கீழே அந்தச் சோழத் தளபதி ஓலைச்சுவடியைக் காட்டிய அந்த நொடியில், தன் கையிலிருந்த பூமாலையின் இரண்டு மல்லிகைகளை மெல்ல முறித்தாள். அருகிலிருந்த பணிப்பெண் அதனை அமைதியாக எடுத்துச் சென்றாள்.

நாகப்பட்டினத்து ஒற்றர்களுக்கிடையே அந்த மல்லிகை முறிப்பிற்குப் பொருளுண்டு: 'சோழர் உடை அணிந்தவன் கடாரருடன் பேசினான்.

இருளில் மின்னிய யாழி அடையாளத்தையும் அவள் கணப்பொழுதில் உணர்ந்துகொண்டாள். ஆனால் அவசரத்தில் இருந்த யாருக்கும் அவளது பார்வையோ, அதன் பின்னாலிருந்த நுட்பமான அமைதியோ உறைக்கவில்லை.

விசாரணைக்காக வீரமாறனும் வீரசோழியும் விடுதியை நோக்கி நடந்தனர். அந்திச் சூரியன் செக்கச்செவேலெனத் தொடுவானத்தில் பவழக் கடலெனப் புதைந்தான்.

துறைமுகத்தை ஒட்டிய வணிக வீதி அப்போதும் களைகட்டியிருந்தது. கடாரத்திலிருந்தும் ஈழத்திலிருந்தும் வந்த வணிகர்கள் கற்பூரமும் கிராம்பும் நிறைந்த மூட்டைகளைப் பண்டகசாலைகளில் இறக்கினர். வணிகச் சாவடியின் முன்னால் சீனப் பட்டுகளுக்குச் சோழ நாட்டுப் பெண்கள் பேரம் பேசும் சத்தம், தச்சர்களின் சுத்தியல் ஓசையோடு, பரதவர்களின் ஏற்றிசையும் அந்திக் காற்றில் கலந்தது. வீதியோரப் பிள்ளையார் கோயிலின் மணியோசை ஒலிக்க, வணிகர்கள் கடற்பயணத்திற்கு முன் காசுகளைக் காணிக்கையிட்டு வழிபட்டுத் திரும்பினர். நாகப்பட்டினம் வெறுமனே துறைமுகம் அல்ல. திசையெட்டிலிருந்தும் மரக்கலங்கள் வந்து கூடும் பெருந்துறை.

அகில் மற்றும் புகையிலையின் வாசனையோடு, தீப்பந்தங்களின் செந்நிற ஒளியில் விடுதி ஒரு மாயலோகம் போலக் காட்சியளித்தது. மையத்தில் பட்டுப் பீடத்தில் அமர்ந்திருந்தாள் ஏகவீரி. இடது கன்னத்தில் சிறு வடு, உலகின் மர்மங்களை ஒளித்துவைத்த கண்கள் என அவளது மிடுக்கு அலாதியானது.

வீரமாறனும் வீரசோழியும் உள்ளே நுழைவதைக் கண்டவள், மெல்லிய புன்னகையோடு வரவேற்றாள். "சோழ நாட்டு மாவீரருக்கும், அறிவுக்

களஞ்சியமான தேவிக்கும் இந்த ஏகவீரியின் குடிலில் என்ன வேலை?" அவளது குரலில் நயமும் நக்கலும் இழையோடியது.

"சொல்லாடல் இப்போது வேண்டாம் பூவணம். நேற்றிரவு சாத்தன் இங்கு வந்தானா?" வீரமாறனின் குரலில் அதிகாரம் தெறித்தது.

பூவணம் மெல்லப் பெருமூச்சு விட்டாள். அவளது கண்கள் வாசலை நோட்டமிட்டன. "வந்தான் தண்டநாயக்கரே. ஆனால் தனியாக வரவில்லை. அவனோடு நிழல் அரவமொன்றும் வந்தது. முகம் எனக்குத் தெரியாது. ஆனால் சற்று முன் இருளில் அவன் வேறொருவனோடு நின்றபோது, அவன் கங்கணத்தில் முத்திரையொன்று மின்னியது. கடாரத்து 'யாழி' அடையாளம்."

சாதாரண விடுதிக்காரிக்கு எதிரி நாட்டு ஒற்றர்களின் முத்திரைகள் எப்படித் தெரியும்? வீரசோழியின் உள்ளத்தில் கேள்வியெழுந்தாலும், அவசரத்தில் அதனை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.



வீரமாறனின் நெற்றி சுருங்கியது. யாழி! கடாரத்து ஒற்றர்களின் அடையாளம். சாத்தனைக் கொன்றது கடாரத்து ஒற்றனாகத்தான் இருக்க வேண்டும். பேரரசின் இதயப் பகுதிக்குள் எதிரி நாட்டு நச்சுப்பாம்பு நுழைந்துவிட்ட பேராபத்து அவனுக்குப் புரிந்தது.

"அவன் எங்கு சென்றான்?" அவசரமாகக் கேட்டான் வீரமாறன். பூவணம் விடுதியின் மேல்மாடியிலிருந்த ஓர் இருண்ட அறையைச் சுட்டிக்காட்டினாள்.

வீரமாறனும் வீரசோழியும் மரப்படிகளில் வேகமாக ஏறினர். அந்தச் சிறிய அறையில் மரப்பேழை ஒன்று உடைந்து சிதறிக் கிடந்தது. சாத்தன் எதையோ தேடியிருக்கிறான், அல்லது எதிரியிடமிருந்து எதையோ காப்பாற்ற முயன்றிருக்கிறான் என்பதை அந்த அலங்கோலம் பறைசாற்றியது.

பலகணி வழியே விழுந்த நிலவொளியில் நின்று, தான் இன்னும் மார்போடு அணைத்திருந்த அந்த ஓலையை வீரசோழி மீண்டும் விரித்தாள். "செவ்வானம் கார்த்திகைமீன் சேர்ந்தவங்கம் திரும்ப..." மைதீட்டிய அவளது கண்கள் சுருங்கின. "கவிதை கங்காவினுடையதாக இருக்கலாம். ஆனால், இதில் இழையோடும் கடல் நீரோட்ட அறிவு சாதாரணப் புலவனுக்கு வாய்க்கக் கூடியதல்ல."

வீரமாறனின் நெஞ்சு படபடத்தது. வீரசோழி தொடர்ந்தாள். "கார்த்திகை விண்மீன் மறையும் வேளையில், கடல் நீரோட்டம் மாறும் துல்லியமான கணத்தைக் கவிதையில் வடித்திருக்கிறான். இத்தகைய கடலறிவு வாய்ந்தவன் மாலுமியாக இருக்கலாம், அல்லது ஒட்டுமொத்த சோழக் கடற்படையின் நகர்வுகளையும் தன் விரல் நுனியில் வைத்திருக்கும் தளபதியாகத்தான் இருக்க வேண்டும்." மெல்லத் தலை நிமிர்ந்து, தன் எதிரே நின்றிருந்த வீரமாறனை ஊடுருவிப் பார்த்தாள். அதுவரை அவள் சிந்தனையில் தனித்தனியாக நின்ற போர்வீரனும் கவிஞனும், இப்போது ஒன்றோடொன்று கலந்து புதியதோர் உருவம் பெறத் தொடங்கின.

"தேவி..." வீரமாறனின் குரல் தழுதழுத்தது.

வேறு எதுவும் சொல்வதற்குள், வாசலில் மெல்லிய காலடி அரவம் கேட்டது.

வீரமாறன் மின்னலெனத் திரும்பினான். அங்கே இருளில் கருஞ்சிறுத்தையைப் போல ஓர் உருவம் பதுங்கியிருந்தது. அதன் கையில் மின்னிய, கடாரத்து ஒற்றர்கள் மட்டுமே பயன்படுத்தும் அலைவடிவ நச்சுக்குறுவாளில், சாத்தனின் உதிரம் இன்னும் காய்ந்திருக்கவில்லை. தப்பிக்க வழியின்றி, அந்த உருவம் இருளில் அவர்கள் மீது பாய்வதற்குத் தயாராக நின்றது!

(தொடரும்...)

# நம்பிக்கை

பாலமுருகன்.லோ



“ஏம்பா சக்திவேலு, எங்கப்பா? வேலாயுதம், குமாரு, வடிவேலு எல்லாரும் எங்க? நாளு கிழமை கெடா வெட்டுன்னு வந்துட்டா போதும், இவுனுங்களை காண முடியமாட்டேங்குது.”

“மாமா, எங்க போயிருக்கப் போறானுங்க? இங்கதான் எதாவது பக்கத்துல போயிருப்பானுங்க. வந்துருவானுங்க, விடுங்க. நம்ம கோவில் கெடா வெட்டப் பார்ப்போம்.”

“இப்படி இருக்கப்பத்தான் ஜோசியன் ஒருவன், ‘சொன்னதைக் கேட்டு குலதெய்வத்துக்கு ஒரு கெடா வெட்டுனா எல்லாம் சரியாயிடும். குமாருக்கும் நல்ல பொண்ணு அமையும்னு’ சொன்னதால, எல்லாருமா சேர்ந்து கெடா வெட்டலாமுன்னு வந்துருக்கிறாங்க.”

நேரம் ஆக ஆக, சக்திவேலுவின் மனைவி வசந்திக்கு சாமி வந்திருச்சு. நாக்கைத் துருத்திக்கிட்டு, பல்லை நரநரன்னு கடித்தபடி, சாமியப் பார்த்தபடியே குறி சொல்ல ஆரம்பிச்சுட்டா. “ஏன்டா, நீங்க எதுக்கு வந்திருக்கீங்கன்னு தெரியும். கெடா வெட்டுன்னா எல்லாம் சரியாயிடுமாடா? நீங்க எல்லாரும் ஒண்ணு நினைச்சுட்டு வந்திருக்கீங்க. ஆனா நடக்கப்போறது ஒண்ணு” என்று கூறியதும், உடனே அனைவரின் முகத்திலும் பீதி குடிகொண்டது.

சக்திவேல் தன் மனதில் நினைத்தான், “இவளுக்கு சாமி வந்து இப்படி இடக்குமொடக்கா சொல்லீடுச்சே? இப்ப என்ன பண்ணலாம்! குமாருக்கு ஒரு நல்ல பொண்ணு அமையணும்னு வேண்டிக்கிட்டுத்தான் கெடா வெட்டலாமுன்னு வந்தோம். சாமி இப்படி சொல்லீடுச்சே. இவனுங்க என்ன கிருத்துவம் பண்ணி வைக்கப் போறானுங்களோ தெரியலையே.”

சாமி ஏன் இப்படிச் சொன்னது?

வீட்டுல நடந்ததெல்லாம் ஒண்ணோன்னா அவன் கண்முன்னாடி ஓட ஆரம்பிச்சது...

சக்திவேலு, வேலாயுதம், குமாரு, வடிவேலு எல்லாரும் ராமசாமிக்கும் பாப்பாத்திக்கும் பிறந்தவங்க. ராமசாமி வயக்காட்டு வெள்ளாமையின்னு... காடு, ஆடு, மாடு, தோட்டம், சம்சாரம் எல்லாத்தோடையும் வாழ்ந்துட்டிருந்தவர். மூத்தவன் சக்திவேலு; அதுக்கப்புறம் வேலாயுதம்; அவனுக்கப்புறம் குமாரு; கடைக்குட்டிதான் வடிவேலு.

ராமசாமியும் பெரிசா படிக்கல. இவுங்க நாலு பேரும் ஸ்கூல் பக்கமே தலை வைக்காம, காடு, களனி, தோட்டம், தொறவு எல்லாத்தையும் பார்த்துக்கிட்டு இருந்தாங்க.

சக்திவேலு இரவு உணவகம் வைச்சு நடத்திட்டு வர்றவன். வேலாயுதம் பனியன் கம்பெனியில வேலை பார்த்திட்டு வர்றவன். குமாரு டைலர். கடைக்குட்டி வடிவேலு மட்டும் பன்னிரண்டாம் வகுப்பு முடிச்சிட்டு, மூணு வருஷமா ராமசாமிக்கு ஒத்தாசையா சுத்திக்கிட்டு இருக்கிறான்.

சக்திவேலைத் தவிர, மத்த மூணு பேருக்கும் ஒரு ஒற்றுமை உண்டு. நல்லா சரக்கு அடிக்கிற பழக்கம். சொல்லப்போனா, மாசம் முதல் தேதி வந்தா போதும், வேலாயுதத்தோட மனைவி கஸ்தூரியோட குரல் வீடெங்கும் ஒலிக்கும்.

“யோவ், எங்கய்யா சம்பளப் பணம்? எங்க குடு, பார்ப்போம்?”ன்னு அவள் கேப்பா.

அதுக்கு வேலாயுதத்திடமிருந்து பதிலே வராது. கேட்டுக் கேட்டுப் பார்த்து, கோபம் தலைக்கேறின பிறகு, “இனி உன்கிட்ட இப்படி கேட்டா ஒண்ணும் தேறாது. கேட்க வேண்டிய முறையில கேக்கணும். இரு... வெளக்கமாத்த எடுத்து வர்றேன்” என்பாள்.

“யோவ், நானும் தினம் தினம் உன்னோட போராடிட்டு இருக்கேன்.... இந்தப் பாழாப்போன குடிய விட்டொழின்னு, ஆனா நீ கேட்கிறதே இல்ல. குடிக்கிறதோட இந்தக் குடும்பத்தையும் சேர்த்து சீரழிச்சுக்கிட்டு இருக்கியே. இது நியாயமா?”

அவனோ கண்கள் ரெண்டும் சொறுகின நிலையில், வேட்டியைக்கூட சரியா கட்ட முடியாத நிலையில் நின்றிருந்தான். அவ ஏதோ சொல்லுறான்னு மட்டும் புரியுது; ஆனா என்ன சொல்லுறான்னுதான் தெரியல. அந்த அளவுக்கு தொண்டைக் குழி வரைக்கும் சரக்கு ஏறியிருந்தது.

இவன்தான் இப்படின்னா, இவனோட தம்பி குமாரு சரக்கோட, சூது ஆடுற பழக்கமும் வைத்திருந்தான். வேலாயுதத்தைவிட மோசமான பழக்கம். அவனாவது சரக்கு அடிச்சாலும் சம்பளத்துல ஏதாவது வீட்டுக்குக் கொண்டுவந்து குடுப்பான். ஆனா இவனோ சம்பாதிச்ச பணத்தை முழுசா தொலைச்சுட்டு வருவான்.

“இவுங்க ரெண்டு பேரும்தான் சம்பாதிக்கிறாங்க; கெட்டுச் சீரழியறாங்க. இவன் வடிவேலு வேலைக்குப் போகாமலே இருக்கிறான், தோளுக்கு மேல வளர்ந்தவனுங்கள அடிச்சா திருத்த முடியும் இல்லேல? அதான் ராமசாமியும் இவன்களோட போராடிப் பார்த்து, மல்லுக்கட்ட முடியாம ஓஞ்சுப்போயிட்டாரு.”

சுவரோரம் தன் தலையைச் சாய்த்தபடி, எல்லாத்தையும் ஒண்ணொன்னா நினைச்சுட்டு இருந்த சக்திவேலைப் பார்த்த அவனது மாமா, “ஏம்பா, யோசனை பலமா இருக்கு. எதைப்பத்தி யோசிக்கிற? உன் பொண்டாட்டி மேல சாமி வந்ததே, அதைப் பத்தியா?” என்றார்.

“ஆமாம் மாமா, அத நினைச்சுத்தான் இங்க அமைதியா உட்கார்ந்திருந்தேன்.”

“சரி, விடுப்பா. யோசிக்கறத விட்டுட்டு, ஆக வேண்டிய விஷயத்தைப் பாரு”

“ஏன் மாமா, அவுனுங்க மூணு பேரும் வந்துட்டானுங்களா? நேரம் வேற ஆகிக்கிட்டே இருக்கு. கெடா வெட்டு சரியான நேரத்துக்கு ஆரம்பிக்கணும்.”

“ஏம்பா, நீ வேணுமுன்னா ஒரு போன் போட்டுப் பாரேன். அவுனுங்க எல்லாரும் எங்க இருக்கானுங்கன்னு கேளேன். போன எடுத்தானுங்கன்னா, நானும் அவுங்க அப்பாரும் அவுனுங்களை வரச்சொன்னோம்னு சொல்லுப்பா.”

“சரிங்க மாமா, அப்படியே ஆகட்டும்.”

தன் சட்டைப் பாக்கெட்டிலிருந்து போனை எடுத்து வேலாயுதத்திற்குப் போன் செய்தான் சக்திவேல்.

“டேய், எங்கடா இருக்கீங்க? கொஞ்சம் சீக்கிரம் வாங்கடா. மாமாவும் நம்ம அப்பாரும் உடனே உங்களைக் கூப்பிட்டாங்க. நேரம் வேற ஆகுதுடா. நாளு கிழமையா இப்படிப் பண்ணுனீங்கன்னா எப்படிடா?”

“அண்ணே, இதோ வந்துட்டோம்ண்ணே. ஒரு பத்து நிமிஷம் பொறுத்துக்கோங்கோ. வந்தர்றோம்” என்று போனை வைத்தான் வேலாயுதம்.

பத்து நிமிஷம் கழிச்சு வேகவேகமா வந்தனர் மூவரும்.

விண்மீன் மின்னிதழ்

“வாங்கடா! இப்பவாவது சாமி கும்புட வரணும்னு தோணுச்சே. உங்க காலு கையெல்லாம் அலம்பிட்டு வாங்க. கெடா வெட்ட நேரமாச்சே” என்றனர் அவுங்க அப்பாரும் மாமாவும்.

“என்ன பூசாரி, கெடா வெட்டிடலாமா? எல்லாம் ரெடியா இருக்கா? இல்ல, ஏதாவது வேணுமா?”

“ஏணுங்க, எல்லாமே சரியா தயாரா இருக்குங்க. பூஜையை ஆரம்பிச்சுடலாம்” என்றவர் “எப்பா கருப்பா, இவுகளுக்கு ஒரு நல்ல வழியைக் காட்டப்பா. எல்லாம் உங்க புள்ளைங்கதானே. ஏதோ தப்பு, தவறு பண்ணியிருந்தாங்கன்னா, அத மன்னிச்சு நல்ல வழிய அருளுப்பா கருப்பா. அய்யா, உத்தரவு உடனே கொடுப்பா” என்று சொல்லிவிட்டு, “ராமசாமிண்ணே, கெடாவ அழச்சுட்டு வாங்க. உத்தரவு கேட்கணும். நானும் கருப்பன் கிட்ட வேண்டியிருக்கேன். தப்பு, தவறு ஏதாவது இவுங்க பண்ணியிருந்தா மன்னிச்சுடுவான்... பார்ப்போம். கருப்பன் உடனே உத்தரவு கொடுக்கிறானா, இல்ல தாமதம் பண்ணுறானான்னு பார்ப்போம்” என்றார் பூசாரி.

கெடாவ அழச்சுட்டு வந்தாங்க. கருப்பன வேண்டிக்கிட்டு, பூசாரி சொம்புல இருந்த மஞ்சத் தண்ணிய கெடா மேல தெளிச்சாரு. கெடா தன் தலையை அசைக்காம அப்படியே நின்னுச்சு.

கூட்டத்துல இருந்த சொந்தக்காரர் ஒருவர், “என்னப்பா இது? கருப்பன் உத்தரவு தரமாட்டேங்கிறானே!” என்றார்.

“என்ன சக்திவேலு, ஏதோ பெரிய தப்பு நடந்திருக்குப்போல” என்றார் ஒருவர்.

சக்திவேலுவின் ஆழ்மனம் கலங்கிப் போச்சு. ‘நாம என்ன தப்பு பண்ணுனோம்? இல்ல, நம்ம தம்பிங்கதான் ஏதாவது தப்பு பண்ணியிருப்பாங்களா? ஒண்ணுமே விளங்கலையே கருப்பா. நீயே ஒரு நல்ல வழியக் காண்பிப்பா. நாங்க அந்த வழியப் பிடிச்சுக்கிட்டு போயிடுறோம்’ என்று மனதார வேண்டினான்.

நேரம் ஆக ஆக மறுபடியும் வசந்திக்கு சாமி வந்துடுச்சு.

“அடேய், ஏதோ நடந்திருக்கு. இப்ப சொல்லப் போறீங்களா இல்லையா? டேய், தப்பான மனசோட இந்த கெடா வெட்ட நான் உத்தரவு தரமாட்டேன்” என்று வசந்தி மூலம் கருப்பன் தன் தீர்ப்பைச் சொல்லி முடித்தான்.

ஆளுக்கு ஆளு என்னன்னு யோசித்துக்கொண்டிருக்க, சக்திவேலு தன் அப்பாவையும் மாமாவையும் பார்த்து, “ஏணுங்க ஐயா, மாமா… போன மாசம் நம்ம வீட்டுல ஒரு பெரிய சண்டை நடந்ததே, ஞாபகம் இருக்கா?” என்றான்.

ராமசாமியும் சக்திவேலுவின் மாமாவும், “ஆமாம்பா, தகராறு நடந்தது. அது குமாரு கல்யாண விஷயமாதானே! அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்?” என்று சொல்லிவிட்டு யோசனையில் ஆழ்ந்தனர்.

இவர்கள் யோசித்துக் கொண்டிருக்கையில் மீண்டும் வசந்தி மூலம் கருப்பன் வந்தான்.

“டேய், நீங்களெல்லாம் யாருடா? சொல்லுங்கடா… நீங்க யாரு?”.

“கருப்பா, நாங்க எல்லாம் உங்க புள்ளைங்க… மனுஷங்க.”

“அப்ப குமாரு காதலிக்கிறானே, அவ மட்டும் என் புள்ளை இல்லையாடா? நீங்க மனுஷங்கன்னா, அவ என்ன மிருகமா? அவளும் மனுஷிதானேடா”

சக்திவேலுவும் கூட இருந்தவங்களும், “கருப்பா, அவனுக்கு இருக்கிற கெட்ட பழக்கத்துக்கு சொந்தத்திலிருந்து பொண்ணு குடுக்குறதே பெரிசு. இதுல வேற நாம ஏன் மறுப்பு தெரிவிக்கணும்? அவளோட சேர்ந்து நாமும் இவன நல்ல வழிக்குக் கொண்டு வந்திடலாம்னு நினைச்சாலும் நாம பொழங்காத இடத்துல இருந்து வர்றவள எப்படி…”

“அடேய், அதெல்லாம் அவளே பார்த்துப்பாடா. அவனையே நம்பித்தானே வர்றா. இதைக்கூட பார்த்துக்க மாட்டாளா? கண்டிப்பா அவன ஒரு நல்ல வழிக்குக் கொண்டு வந்துருவாடா.”

“ஏன்டா இந்த ஜாதி, ஜாதின்னு கட்டிக்கிட்டு அழுவுறீங்க? எங்க சொல்லுடா பார்ப்போம்… சாமிக்கு ஜாதி இருக்காடா? சாமியப் பிரிச்சு வச்சதே உங்கள மாதிரி இருக்கிற மனுஷ ஜாதிதான்டா. இது எப்படா உங்களுக்குப் புரியப்போகுது?”

“கருப்பா, என்னத்தான் இருந்தாலும் நம்ம…”

“டேய், போக்கத்த பயலுகளா! மனுஷன மனுஷனா மதிக்கக் கத்துக்கங்கடா முதல்ல. இந்த உலகத்துல ஜனிச்ச பிறகு மொத்தமே ரெண்டு ஜாதிதான்டா. என்ன தெரியுமடா உங்களுக்கு? சொல்லுங்க, பார்ப்போம்!” என்றான் கருப்பன்.

விண்மீன் மின்னிதழ்

ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். ஊரு உலகமெங்கும் ஜாதி பரவிக்கிடக்குது. இப்ப போயி கருப்பன், ‘உலகத்துல ரெண்டே ஜாதிதான் இருக்குன்னு’ சொல்லுறானே… எப்படி சாத்தியம்?

கருப்பனே முன்வந்து, “அட மடப்பய மகனுகளா! இது கூட தெரியாமலா இத்தனை நாளா இருந்திருக்கீங்க? ஒண்ணு ஆண் ஜாதி… இன்னொண்ணு பெண் ஜாதிதான்டா!” என்று கருப்பன் கூறி முடித்தான்.

எல்லோரும் கருப்பனை மனமுருகிப் பார்த்தனர். ஆனால் குமார் மட்டும் தன் அண்ணி வசந்தியைப் பார்த்து கையெடுத்து கும்பிட்டான்.

வசந்தி உருவில் இருந்த கருப்பன், அவனைப் பார்த்து புன்முறுவல் ஒன்றை உதிர்த்தான். அந்த ஒற்றைப் புன்முறுவல் ஆயிரம் அர்த்தங்களை மறைத்திருந்தது என்ற உண்மை குமாருக்கு மட்டும் விளங்கியது.

மீண்டும் ஒரு குரல் ஒலித்தது.

“என்னடா… யோசிச்சீங்களா? இப்ப உத்தரவு வேணுமா, இல்ல வேண்டாமா?”

# இந்தியர் வீதி

## அத்தியாயம் – 1

### கண்ணன் விஸ்வகாந்தி

எனக்கு அது பகலா இரவா என்று சற்றே குழப்பமாக இருந்தது. லூப்தான்சா விமானத்தில் நெதர்லாந்து நோக்கி, முப்பதாயிரம் அடி உயரத்தில் பயணம் செய்து கொண்டிருந்தேன். தலை சற்றே வலித்தது. மீண்டும் காபி கேட்டால் கொடுப்பார்களா என்று தயக்கம். இதுதான் எனது முதல் விமானப் பயணம்.

சற்று நேரத்திற்கு முன்பு தான், சாப்பாடு என்ற பெயரில் ஏதோ கொடுத்தார்கள். டிக்கெட் புக் செய்யும் போதே, சைவம் என்று சொன்னதால் தப்பித்தேன். முன் சீட்டில் இருந்து டிரேவை விரித்து விட்டு, சிறிய பொட்டலத்தை சின்னக் கரண்டியால் சாப்பிடுவது, ஏறக்குறைய யோகா செய்வதற்குச் சமம். பக்கத்தில் இருப்பவரை இடிக்காமலும், கீழே சிந்தாமலும் சாப்பிடுவதை, ஒரு சர்க்கஸ் விளையாட்டுக்கு ஒப்பிடலாம். ஆரம்பத்தில் ஜூஸையும் குடித்து விட்டு, முடிக்கையில் காபியும் குடித்ததால் வயிறு வேறு ஒரு மாதிரி இருந்தது.

இன்னும் நான்கைந்து மணி நேரத்தில், நெதர்லாந்ததலுள்ள ஆம்ஸ்டர்டம் விமான நிலையத்தில் இறங்கி, ஹூஸ்டன் செல்லும் விமானத்தைப் பிடிக்க வேண்டும். அது வேறு சற்று பயத்தைக் கொடுத்தது.

இதற்கெல்லாம் என்னுடன் வேலை செய்த குமார் தான் காரணம். நானும் குமாரும் சென்னை மவுண்ட் ரோடிலிருந்த ஒரு கணினி மென்பொருள் டிரெயினிங் சென்ட்டரில், பயிற்றுநர்களாக வேலை செய்து வந்தோம். இரண்டாயிரமாவது ஆண்டில் கணினித் துறையில், ஒய்டூகே என்னும் பிரச்சினை விஸ்வரூபம் எடுத்திருந்தது. அதனால் புதிய வேலை வாய்ப்புகள் அதிகமாக இருந்தது.

“கண்ணா, அப்ளை பண்றோம். ரெண்டு பேரும் யுஎஸ் போறம்” என்றான். எனக்கு ஏனோ அந்தளவுக்கு நம்பிக்கை இல்லை. ஆனால் வெளிநாடு செல்ல வேண்டும் என்ற ஆசையும், கனவும் இருந்தது அவனுடன் சேர்ந்து, புரபைல் அப்டேட் செய்து எல்லா வாய்ப்புகளுக்கும் விண்ணப்பிக்க ஆரம்பித்தோம்.

திடீரென ஒரு நாள், அமெரிக்கா செல்வதற்கு நேர்காணலுக்கு வருமாறு, அழைப்புக் கடிதங்கள் வந்திருந்தன. அது ஒரு அமெரிக்கக் கம்பெனி. பெயர் அமெரிஒன். சென்னை தேனாம்பேட்டையில் அதற்கு நேரடியான கிளை அலுவலகம் இருந்தது.
சென்னையில் விற்பனைப் பிரதிநிதியாக வேலை செய்த போது, பல முறை, சென்னை விமான நிலையம் வழியாக சென்றிருக்கிறேன். அப்போதெல்லாம் எனக்குள்ளேயே சொல்லிக் கொள்வேன்: “நிச்சயமாக ஒரு நாள், இங்கிருந்து விமானத்தில் பயணம் செய்வேன்”. அந்த சமயத்தில், சுய முன்னேற்ற நூல்களை நிறைய வாசிப்பேன். ஈர்ப்பு விதி பற்றியும், நேர்மறை எண்ணங்கள் பற்றியும் நிறைய வாசித்ததில், என் கனவு என்றாவது ஒரு நாள் நிச்சயமாக நிறைவேற்றும் என்று உறுதியாக நம்பினேன்.

அது ஒரு சனிக்கிழமை. நானும் குமாரும், நேர்காணலுக்குத் தயாரானோம். இருந்ததிலேயே நல்ல உடையும், டையும் அணிந்து கொண்டு, ஆட்டோவில பயணம் செய்து, தேனாம்பேட்டையில் இறங்கினோம். குமாருக்கு அந்த ஏரியா ஓரளவுக்குப் பரிச்சயமான ஒன்றாக இருந்தது. “இங்க பக்கத்தில தான்டா, நடிகர் ராதாரவியின் வீடு இருக்கிறது” என்றான். பேசியபடியே நேர்காணல் நடக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தோம். வரவேற்பறையில் பல இளைஞர்கள் அமர்ந்திருந்தனர். அங்கிருந்த இளம்பெண் ஒவ்வொருவரையாக அழைத்துக் கொண்டு இருந்தாள்.

நாங்களும் எங்கள் பெயரைப் பதிவு செய்து விட்டு அமர்ந்தோம். முதலில் குமாரை உள்ளே அழைத்தார்கள். “குமார், நல்லா பண்ணுங்க. ஆல் தி பெஸ்ட்” என்றேன். எனக்கு நன்றி சொல்லி விட்டு,

உள்ளே சென்றான். இருபது நிமிடங்களுக்கு மேல் ஆயிற்று. வெளியே வரவில்லை. எனக்கு சற்றே பயமாக இருந்தது. அரை மணிநேரம் கழித்து, வெளியே வந்தான். “நேர்காணல் எப்படிடா இருந்தது? இவ்வளவு நேரம்? ரொம்ப கடினமோ?” என்று வரிசையாக கேள்விகளை அடுக்கினேன். “ஈஸிதான். நம்ம புரபைலிலிருந்து தான் கேள்விகள்” என்றான்.

அடுத்து எனது முறை. எனது பெயரை அழைத்ததும், தயங்கியபடியே உள்ளே சென்றேன். மூவர் கொண்ட குழு. இருவருக்கு எங்களை விட சற்று வயது அதிகமிருக்கும். மூன்றாவது நபருக்கு ஐம்பது வயதிருக்கும்.

இருவரும் பெரும்பாலும் எனது புரபைலில் இருந்த புராஜக்ட்களைப் பற்றியே கேட்டதால், பதில் சொல்வது எளிதாக இருந்தது. விஷுவல் பேசிக்கில் சற்றே தடுமாறினாலும், ஆரக்கிள் பற்றிய கேள்விகளில் சிறப்பாக பதிலளித்தேன். ஏற்கனவே பலமுறை மாணவர்களுக்கு சொல்லிக் கொடுத்தது என்பதால், தயக்கமின்றி, நம்பிக்கையுடன், நேர்மறையாக பதிலளித்தேன்.

இருபது நிமிடங்கள் போனதே தெரியவில்லை. கடைசியில் மேலாளர் போன்று தோற்றமளித்தவர் கேள்விகளை ஆரம்பித்தார். பெரும்பாலும் நான் டெக்னிகலாகவே இருந்தது. சற்று நேரம் கழித்து, ”தங்களின் நேரத்திற்கு நன்றி. வெளியே அமருங்கள். அரை மணிநேரத்தில் ரிசல்ட் சொல்லி விடுகிறோம்” என்றார். நன்றி சொல்லி விட்டு வெளியே வந்தேன்.

“எப்படிடா இருந்தது?” என்றான் குமார். “விஷுவல் பேசிக்கில் ஒன்றிரண்டு தவிர, அனைத்து கேள்விகளுக்கும் சரியாக பதிலளித்தேன். அரைமணி நேரம் காத்திருக்கச் சொன்னார்கள்” என்றேன்.

‘சரி வா, பக்கத்தில டீ சாப்பிட்டுட்டு வரலாம்” என்று அழைத்தான். ஐந்து நிமிட நடையில், ஒரு டீக்கடை தென்பட்டது. “கெடச்சிட்டா நல்லா இருக்கும். வீட்டுக்கு உதவியாக இருக்கும்” என்றேன். “ஆமாடா. அப்பா, அம்மா ரொம்ப சந்தோஷப் படுவாங்க” என்றான்.

டீ சாப்பிட்டு விட்டு, மீண்டும் கம்பெனிக்குச் சென்று, வரவேற்பறையில் அமர்ந்தோம். சிறிது நேரத்தில், மேலாளர் வெளியே வந்தார். என்னையும் சேர்த்து மூவரை உள்ளே அழைத்தார்கள். இப்போது வேறு இருவர், மேலாளருடன் அமர்ந்திருந்தனர். “கங்கிராட்ஸ். மூவரும் அமெரிக்க வேலைக்கு தேர்வு செய்யப்பட்டு உள்ளீர்கள். சற்று நேரம் காத்திருந்து, தங்களின் அப்பாயிண்ட்மெண்ட் கடிதத்தைப் பெற்றுக் கொள்ளலாம். அடுத்து அமெரிக்க எம்பஸியில் விசா. பிறகு டிக்கெட் வழங்கப்படும்” என்று அருமையான ஆங்கில உச்சரிப்புடன் தெரிவித்தார். எனக்கு கனவா, நனவா என்று புரியவில்லை. அமர்ந்திருந்த மூவருக்கும் நன்றி சொல்லி விட்டு, வெளியே வந்தேன்.

அப்போது தான், குமார் தேர்வு செய்யப்படவில்லை என்பது உறைத்தது. குமாரே ஆரம்பித்தான்: “என்னடா சொன்னாங்க?” என்றான். “நானும் மற்ற இருவரும் செலக்ட். அடுத்து விசா. அப்புறம் பிளைட்” என்று பதிலளித்தபின், “சாரிடா. எங்கள் மூவரையும் விட, நீ தான்டா மிகவும் தகுதியானவன். ஏன் செலக்ட் ஆகவில்லை என்று தெரியவில்லை. மே பி, டிகிரி கூட ஒரு காரணமாக இருக்கலாம்” என்றேன். “ஆமாடா. நீங்க எல்லாம் என்ஜினியரிங். நான் எம்சிஏ. அது கூடக் காரணமாக இருக்கலாம். பரவாயில்லை”.

“நீ பாரு. ரெண்டே வாரத்தில், ஒனக்கு வேற ஆஃபர் கெடச்சிடும். ஒண்ணும் கவலப்படாத“ என்றேன்.

விண்மீன் மின்னிதழ்

இரண்டே வாரங்களில் அவனுக்கு லண்டன் கம்பெனியிலிருந்து ஆஃபர் கிடைத்து விட்டது.

இதன் பிறகு, இருவருமே மிகவும் பிஸியாகி விட்டோம். ஆன்லைனில் அப்ளை செய்து, விசா இன்டர்வியூக்கு தேதி கிடைத்தது. கம்பெனியிலிருந்து எல்லா டாக்குமெண்ட்களும் கொடுத்தார்கள். அந்த நாளும் வந்தது. பதினோரு மணிக்கு எனக்கு நேரம் ஒதுக்கி இருந்தார்கள். அண்ணாசாலையில் இருக்கும் புகழ்பெற்ற அமெரிக்க எம்பஸி வாசலில், ஒரு நீண்ட வரிசையில் நானும் நின்று கொண்டு இருந்தேன். மிகவும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது. ஆட்டோமேட்டிக் துப்பாக்கிகளுடன் எப்போதும் பாதுகாப்புக்கு ஆட்கள் இருந்தனர்.

சிலர் அதிகாலையில் இருந்தே வரிசையில் நிற்க ஆரம்பித்தனர். வரிசையில் நிற்க, சிலர் பணம் வாங்கிக் கொண்டு பிறருக்காக இடம் பிடித்தனர் என்றெல்லாம் வதந்திகள்.

மெதுவாக வரிசை நகர ஆரம்பித்தது. பலத்த செக்யூரிட்டி சோதனைகளுக்குப் பிறகு, உள்ளே செல்ல அனுமதி கிடைத்தது. நிறைய கவுண்டர்கள் இருந்தன. ஒவ்வொன்றிலும் ஒரு இமிக்ரேஷன் ஆபிஸர் இருந்தார்.

என்னுடைய முறை வந்தது. வாழ்நாளில்

முதன்முறையாக ஒரு அமெரிக்கருடன் பேச வாய்ப்பு கிடைத்தது. அவருடைய ஆங்கில உச்சரிப்பு புரிந்து கொள்ள சற்று சிரமமாக இருந்தது. சில அடிப்படை கேள்விகளைக் கேட்டார். எதற்காக அமெரிக்கா செல்கிறீர்கள்? அங்கு என்ன வேலை? எவ்வளவு நாட்கள் தங்கி இருப்பீர்கள்? எங்கு தங்குவீர்கள்? மிகவும் நேர்மையாக பதிலளித்தேன். நீண்ட நாட்கள் தங்கி இருக்கும் எண்ணமேதும் இல்லை. விசா முடிந்தவுடன், இந்தியாவுக்கே திரும்பி விடுவேன் என்றேன். பிறகு சில டெக்னிக்கல் கேள்விகள் இருந்தன. எல்லாக் கேள்விகளுக்கும் சரியாக பதிலளித்தேன். அவருடைய முகத்தில் திருப்தியின் அறிகுறிகளை உணர்ந்தேன். பாஸ்போர்ட்டை வாங்கி வைத்துக் கொண்டு, “you will receive your passport with the VISA stamped within couple of weeks” என்றார். நன்றி சொல்லி விட்டு வெளியே வந்தேன். பறக்க வேண்டும் போலிருந்தது. சந்தோஷத்தின் உச்சத்தில் இருந்தேன்.

செலவுகளுக்கு அப்பா எப்படியோ கடன் வாங்கிக் கொடுத்தார். சென்னையில் அறை நண்பர்களுடன் பர்ச்சேஸ் செய்ததில், பட்ஜெட்டை விட, ஐம்பதாயிரம் ரூபாய் அதிகம் செலவாகியிருந்தது.

இரண்டு வாரங்களில் பாஸ்போர்ட் வீட்டுக்கு கொரியரில் வந்து சேர்ந்தது. கம்பெனியைத் தொடர்பு கொண்டு, விஷயத்தைத் தெரிவித்தேன். மேலாளரே போனை எடுத்தார். வாழ்த்து சொல்லி விட்டு, ஏர் டிக்கெட் அனுப்பி வைக்கிறேன் என்று சொன்னார். மூன்று நாட்களில் ஏர் டிக்கெட் கிடைத்தது. சென்னையில் இருந்து நெதர்லாந்து. பிறகு அங்கிருந்து ஹூஸ்டன். இரண்டாம் வகுப்பு டிக்கெட். சென்னையில் இருந்து விமானம். அப்பா, அம்மா, அண்ணன், தம்பி ஆகியோர் விமான நிலையம் வந்திருந்தனர்.

“கண்ணா, குடும்பமே ஒன்னயத் தான் நம்பியிருக்குது. உடம்ப கவனிச்சிக்கோ. போய் சேர்ந்ததும், போன் பண்ணு” என்றார் அப்பா. நான் மிகுந்த உணர்ச்சி வசப்பட்ட மனநிலையில் இருந்தேன். குடும்பத்தைப் பிரிந்து இவ்வளவு தூரம் செல்வது இதுவே முதல் முறை. அதுவே ஒரு பயத்தை ஏற்படுத்தியது. அப்பா சொன்ன எல்லாவற்றுக்கும் சரி, சரி என்று தலையாட்டினேன். விசிட்டர் ஏரியாவைத் தாண்டி, உள்ளே செல்ல ஆரம்பித்தேன். எனக்கு அழுகையாக வந்தது. அப்பா, அம்மா எல்லோரும் கையாட்டியதைப் பார்த்தபடியே உள்ளே நுழைந்தேன். குடியுரிமைச் சோதனைக்கு பெரிய வரிசை இருந்தது. இரும்புக் குச்சிகளை நட்டு, அவற்றில் நீல நிறப் பட்டைகள் கட்டப் பட்டிருந்தன. முடிவே இல்லாமல் வளைந்து வளைந்து சென்று கொண்டேயிருந்தது.

சக்கரம் வைத்த சிறிய மற்றும் பெரிய சூட்கேஸ்களைத் தள்ளியபடியே கவுண்டரை நெருங்கினேன். இடுப்பில் பையுடன் கூடிய ஒரு பெல்ட் இருந்தது. அந்தப் பையில் பாஸ்போர்ட், டிக்கெட், கம்பெனி வழங்கிய ஆஃபர் கடிதம் எல்லாம் இருந்தது. பல கவுண்டர்களில், ஒரு கவுண்டரைத் தேர்ந்தெடுத்து நின்றேன். எனது முறை வந்தவுடன், பாஸ்போர்ட்டை எடுத்து நீட்டினேன். மீண்டும் ஒரு அந்நிய முகம். அதே அடிப்படைக் கேள்விகள். விசாவிலிருந்த எனது போட்டோவுடன் எனது முகத்தை சரிபார்த்து, டக்கென்று பாஸ்போர்ட்டில் முத்திரை குத்தி, “ஆல் த பெஸ்ட். ஹேவ் ய நைஸ் டிரிப்” என்று பாஸ்போர்ட்டைத் திருப்பி கொடுத்தார். நன்றி சொல்லி விட்டு, லூப்தான்சா விமான கவுண்டருக்குச் சென்றேன். கவுண்டர் பெண்மணி பாஸ்போர்ட்டை வாங்கிப் பார்த்து விட்டு, லக்கேஜ்களை அருகில் இருந்த கன்வேயரில் வைக்கச் சொன்னார். எடை சரியான அளவில் இருந்ததால் தப்பித்தேன். டிக்கெட்டை வாங்கிக் கொண்டு, இரண்டு விமானங்களுக்குமான போர்டிங் பாஸ்களைக் கொடுத்து விட்டு, ‘you can collect your luggages at your destination. Have a nice trip” என்றார். நன்றி சொல்லி விட்டு, சரியான டெர்மினலுக்குச் சென்று, காத்திருந்தேன். சற்று நேரத்தில் போர்டிங் தொடங்கியது.

வாழ்நாளில் முதன்முறையாக ஒரு விமானத்தில் நுழைகிறேன். பயணிகள் அனைவரும் ஏறியதும், விமான ஓட்டி யின் குரலில், விமானம் மேலேறும் அறிவிப்பு. விமான பணிப்பெண்களின் பாதுகாப்பு குறித்த அறிவிப்பு முடிந்ததும், பெல்ட் அணிந்து கொண்டேன். விமானம் ரன் வேயில் வேகமாக ஓடி, ஒரு கணத்தில் ஜிவ்வென்று விண்வெளிக்குத் தாவியது. சிறிது சிறிதாக மேலேற ஆரம்பிக்க, வயிற்றில் பட்டாம்பூச்சி. சற்று பயமாகவும் இருந்தது. சிறிது நேரத்தில் ஆசுவாசம். பிறகு உணவு பரிமாறியதும் சற்று நேரம் உறங்கி விட்டு, நெதர்லாந்தில் இறங்குவதற்கு காத்திருந்தேன். இயங்குவதற்கான அறிவிப்பு வந்ததும் சீட் பெல்ட் அணிந்து, தயாரானேன். விமானத்தில் இறங்கும் நேரம், ரங்க ராட்டினம். வயிற்றை இழுத்து பிடிப்பது போலிருந்தது. ஒரு கழுகைப் போல, வட்டமிட்டு சிக்னல் கிடைத்ததும், ஓடு பாதையில் இறங்கி, சற்று தூரம் ஓடி, தனது கேட் அருகே நின்றது.

அடுத்த விமானம் ஏற, இரண்டு மணி நேர இடைவெளி இருந்தும், ஏர்போர்ட்டில் இருந்து வெளியே செல்ல அனுமதி இல்லை.

இங்கு மற்றும் ஒரு குடியுரிமை சோதனை. இந்த சோதனைகள் எப்போதும் எனக்கு ஒவ்வாமையைக் கொடுத்தன.

குளிர் தாங்கும் அளவுக்கு இருந்தது. ஏராளமான டியூட்டி ஃப்ரீ கடைகள் கண் சிமிட்டின. தலைக்கு மேலிருந்த சைன் போர்டுகளைப் பார்த்தபடியே, நடந்தும், வாக்வேயில் நின்றும் கடந்து, ஹூஸ்டன் செல்லும் விமான டெர்மினலை அடைந்தேன்.

இன்னும் முக்கால் மணி நேரமிருந்தது. போரடித்தது. எல்லோரும் நடந்து கொண்டே இருந்தனர். கடைகளிலும் நிறைய கூட்டமிருந்தது. கண்ணில் பட்ட புத்தகக் கடையில் நேரம் செலவழித்தேன். நிறைய சுய முன்னேற்ற நூல்கள் இருந்தன.

நெதர்லாந்து பற்றிய நிறைய புத்தகங்கள், மேப்கள், பார்க்க வேண்டிய இடங்கள் பற்றிய தகவல்கள் கொட்டிக் கிடந்தது. மனசு ஒவ்வொரு புத்தக விலையையும் ரூபாயில் மாற்றி யோசித்து எதையும் வாங்க விடாமல் செய்தது. மிதமான வெப்ப நிலை கொண்ட, யூரோ நாணயம் புழங்கும், ஒரு ஐரோப்பிய நாடு நெதர்லாந்து என்ற அளவில் எனது ஞானம் இருந்தது.

விமானம் புறப்படும் கேட் விவரங்கள் சைன் போர்டுகளில் பளிச்சிட்டது. வேகமாக நடந்து கேட்டை அடைந்து, விமானம் புறப்படுவதற்காகக் காத்திருந்தேன். அறிவிப்பு வந்ததும், வரிசையில் நின்று, போர்டிங் பாஸ் சரி பார்க்கப் பட்டு, ஒரு கூண்டு போன்ற அமைப்பில் நுழைந்து, விமான வாயிலை அடைந்து, பணிப்பெண் வழிகாட்டலில், எனது இருக்கையை அடைந்தேன். விமானம் டேக் ஆஃப் ஆன சிறிது நேரத்தில், பணிப்பெண் என்னிடம் வந்து, தூய ஆங்கிலத்தில், "Can you please change your seat with that Lady?" என்றார். குழந்தையுடன் போட வேண்டிய சீட்டைத் தனியாக போட்டு விட்டார்கள். "Sure, I can" என்று சொல்லி விட்டு, அவர் சொன்ன விண்டோ சீட்டுக்கு இடம் பெயர்ந்தேன். சிறிது நேரத்தில் அந்த அதிசயம் நடந்தது. பணிப்பெண் என்னருகில் வந்து, "Just a small compliment. Thanks for your kind help" என்றார். நன்றி சொல்லி விட்டு, சீட்டில் அமர்ந்தேன். மகிழ்ச்சியின் உச்சத்தில் இருந்தேன். வாழ்நாளில் மறக்க முடியாத பரிசு. மீண்டும் ஒரு நீண்ட விமானப் பயணம். ஏறக்குறைய பத்து மணி நேரம்.

தூக்கமும் விழிப்புமாக அவஸ்தையான நிலைமை. முன் சீட்டில் இருந்த குட்டி டிவியில் நிறைய படங்கள் லிஸ்ட் ஆகியிருந்தது. பிரௌஸ் செய்த படியே இருந்தேன். ஜாக்கி சான் நடித்த ஏதோ ஒரு படம் பார்த்து விட்டு, தூங்கி விட்டேன். சில மணி நேரங்களில், எழுப்பி விட்டு, உணவு கொடுத்தார்கள். மீண்டும் சர்க்கஸ். முதலில் வெல்கம் டிரிங்க் போல ஆரஞ்சு ஜூஸ். அடுத்து ஒரு



பிரெட் துண்டு, அதற்கு வெண்ணெய். அலுமினியம் பாயிலில் சுற்றப்பட்ட கிச்சடி, அதிலேயே சிறிது சட்னி. சில பழத் துண்டுகள். முடித்தவுடன் காபி அல்லது டீ. ஹாட் டிரிங்க்ஸ் குடிப்பவர்களுக்கு. சாப்பிட்டு முடித்ததும் மீண்டும் தூக்கம்.

சில மணி நேரங்களில், கீழே இறங்கப் போகிறோம் என்ற அறிவிப்புடன் விழித்துக் கொண்டேன். பைலட்டின் சிறிய உரை முடிந்ததும், பெல்ட் அணிந்து, இறங்குவதற்கு தயாரானேன்.

எனது குடும்பத்தில் முதல் எஞ்ஜினியர் நான் தான். செல்லியம்மன் நகர் என்னும் சிறிய கிராமத்தில் இருந்து இன்று ஹூஸ்டன் பயணம். பிரமிப்பாகவும் பயமாகவும் இருந்தது.

அப்பா சொன்ன வார்த்தைகள் காதில் ஒலித்துக் கொண்டே இருந்தது: "கண்ணா, இந்த குடும்பமே ஒன்னயத் தான் நம்பியிருக்குது".

அமெரிக்க நண்பன் அண்ணாமலை, "இந்த நாட்டுல தேனும் பாலும் ஓடுது. நாம் தான் உபயோகித்துக் கொள்ள வேண்டும் ".

விமானம் சிறிது சிறிதாக இறங்க ஆரம்பித்து, ஓடு பாதையில் ஓட ஆரம்பித்து, என்னைப் போன்ற எத்தனையோ பேரின் கனவுகளைச் சுமந்து வந்து இறக்கிவிட்ட திருப்தியில், தனது டெர்மினலில் நின்றது.

(தொடரும்)

# கண் காட்டும் நுதலானும் கனல் காட்டும் கையானும்

## க. இரமேஷ்பாபு

“எங்க நம்ம கண்ணன் கிட்ட பேசிட்டேன். நீங்க போயி பாருங்க”

“எதுக்கு... என்ன பேசுன..?”

“அவன் பாரயணத்துக்கு எல்லாரையும் அழைச்சுட்டு போறான் இல்ல”

“ஆமாம்”

“இனிமே உங்களையும் அழைச்சிட்டு போவான்”

“எனக்கு என்ன தெரியும் என்னை அழைச்சிட்டு போயி என்ன பண்ணுவான்”

“அத அவன் பாத்துப்பான். நீங்க இப்படியே உக்காந்து இருந்தா எப்படி. இன்னும் மூணு மாசத்துல பேரன் பர்த்டே வருது. ஏதாவது செய்ய வேண்டமா. அதுக்கு எங்க போறது”

“நீ சொல்றது சரிதான்.ஆனா எனக்கு ஒன்னும் தெரியதே”

“தெரியாது... தெரியாதுன்னு சொல்றத நிறுத்திட்டு முயற்சி பண்ணுங்க போனாதான தெரியும்”

“இந்த வயசுல..... சரி போறேன்”

*

கண்ணன் வீட்டின் முன்னால் தயங்கி நின்று அழைக்க, முப்பது வயதுள்ள இளைஞன் அழுக்கு வெள்ளை வேட்டியும் குடுமியுமாக வந்தான். பார்த்ததும் “வாங்க மாமா, ஜலம் சாப்பிடுங்க. சாப்பிட்டிங்களா... டிபன் எடுத்து வரச்சொல்லவா” இடைவிடமால் பேசினான்.
“நான்...”
“தெரியும் மாமா, மாமி நேத்தே சொன்னா. உங்களுக்கு சூக்தாதி ஏதாவது தெரியுமா..?”

கனத்த மௌனத்தை வெளிப்படுத்த, “சரி ருத்ரம் சமகம் இல்ல ஏதாவது மந்திரம் தெரியுமா..?”

தலை அசைக்க, “மாமா தெரியுமா தெரியதான்னு நீங்க சொன்னதான் எனக்கு உங்கள எங்க அனுப்பறதுன்னு முடிவு பண்ணமுடியும்”

“இல்லடாப்பா நேக்கு ஒன்னும் தெரியாது. நான் ஆபிஸ் வாழ்க்கை வாழ்ந்துட்டேன். தயிர் சாதம் தயிர் சாதம் எனப் புலம்பி, காலையில குளிச்சுட்டு பிள்ளையார் குட்டின்டு நெத்தில விபூதி இட்டுன்டு ஓடுனா ராத்திரி வர செக்கு மாட்டு வாழ்க்கை. அதனால இப்ப அவஸ்தைப்படறேன். இப்ப தான் சந்தி புக்க பாத்து பண்ண ஆரம்பிச்சிருக்கேன். அவகிட்ட சொன்னேன் கேக்கல... உன்ன பாரு அவன் பாத்துப்பான் சொன்னான் அதான் வந்தேன். தப்புதான் சரி கிளம்பறன்”

“மாமா ஒன்னும் பயப்படாதீங்க நான் பாத்துக்கறன். இல்ல எல்லாம் பகவான் பாத்தப்பாரு. நாளைக்கு ஒசூர் போறோம். முந்நூறு பிராமணா வர வைச்சு ஹோமம் பண்றா. உங்க நம்பர் கொடுங்க. உங்களுக்கு மேசேஜ் அனுப்பறேன். காலை ஐந்து மணிக்கு அசோக் பில்லர் கேஎப்சி கிட்ட வந்துடுங்க”
“எனக்கு ஒன்னும் தெரியாதுப்பா”

“அதையே சொல்லாதீங்க சந்தி பன்ற ஒரு குவாலிப்பிகேஷன் போதும் இன்னைக்கு எத்தனை பேரு சந்தி பண்றா, ஏன் நானே டெய்லி பன்றது இல்ல. ஆனா எல்லாரையும் சந்தி பண்ண சொல்லி கட்டாயம் பண்ணுவேன். மஹா பெரியவா சொல்லியிருக்கா. பாவம் கரைக்கற ஒரே வழி சந்தின்னு சொல்லுவேன். தெரிஞ்சும் தெரியமா எவ்வளவோ பாவம் பண்றோம். நீங்க சந்தி விடமா பண்ணுங்க பகவான் பாத்துப்பார். அவருக்கு யாருக்கு என்ன பண்ணணும் தெரியும்”
தலையாட்டினேன்.

“நாளைக்கு காலைல 5 மணிக்கு வந்துடுங்க உங்களுக்கு டிடேயில் அனுப்பறேன்”

*

“போயி பாத்திங்களா”

“பாத்தேன்.பயப்படாதீங்க பகவான் பாத்துப்பான் சொன்னான். நாளைக்கு அசோக் பில்லர்கிட்ட காலைல ஐந்து மணிக்கு வரச்சொல்லியிருக்கான். ஒசூர் போணும்”

“சரி போங்க”

“என்ன நீ டக்குன்னு போன்னு சொல்லிட்டே. எனக்கு படபடப்பா இருக்கு. பயத்துல ஒன்னும் புரியல”

“பயம் சத்துருன்னு நீங்க தானே அடிக்கடி சொல்லுவீங்க. தைரியமா போயிட்டு வாங்க எல்லாம் பழகிடும். ஸ்வாமி காரியம் அதான் பாக்கறேன். நம்ம நிலைமா தெரிஞ்சி பகவான் வழிகாட்டிருக்கு. இவ்வளவு வருஷமா இங்க தானே இருக்கோம். இதப்பத்தி நினைச்சமா தைரியமா போங்க”

*

இருள் பிரியாத விடியலின் பரம சுகத்தை உடல் மனம் இரண்டும் அனுப்பவிக்கமால் நடுக்கத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது. போரூர் பேருந்து நிறுத்தத்தில் சிலர் காத்திருக்க பேருந்து வர காணோம். ஆட்டோ அருகில் வந்தது. 5 மணிக்கு மேல தான் பஸ் எங்க போணும் விசாரிக்க, விபரம் சொன்னதும் 300 என்றான். தயங்க ‘பெரியவரே 200 கொடுங்க காலையில யோசிக்காதீங்க’ என்றான்.

ஆட்டோ கேஎப்சி அருகே நின்றது. ஒருவரும் இல்லை சற்று பதட்டமாகி போனில் தொடர்புக் கொள்ள எண்ணிய தருணத்தில் ஆட்டோவில் கச்சம் கட்டி ஒருவர் இறங்கினார். இறங்கியதும் ‘வாங்கண்ணா’ என அறிமுகம் ஆனவர் போல் சொல்லிவிட்டு “எப்ப வந்தீங்க” என புன்னகைத்தார்.

தயங்கிப் புன்னகைக்க, “ஏன் ஒருமாதிரி இருக்கிங்க” என்றார்.

“ஒண்ணுமில்ல”

“அண்ணா எங்கிருந்து வறீங்க நான் வடபழனிலிருந்து வரேன். உங்க நாமதேயம்”

“கோவூரிலிருந்து வரேன்”

“உங்க பேரு கேட்டேன்”

“என் பேரு மூர்த்தி… உங்க பேரு”

“சுப்பிரமணி”

“இன்னும் பஸ் வரல சொன்ன நேரத்துல வரமாட்டேன் நம்ம லேட்ட வந்தா கத்துவான் சரி விடுங்க. என்ன சர்வீஸ்ல இருந்தீங்க”

தலை அசைத்து சிரித்தார். கண்ணன் சொன்னது நினைவுக்கு வந்தது. ‘இந்தத் தொழிலுக்கு அடிப்படை சிரிப்பு என்ன கேட்டாலும் சிரிச்சிடுங்க அப்புறம் பதில் சொல்லுங்க தயக்கம் கூடாது. என்னான்ன நம்மள மாதிரி தான் எல்லாரும் நீங்க சொல்லற பதில் இன்னொரு பேச்சு வளக்கும். அது வம்பா மாறும். கொஞ்ச நாள்ல தெரிஞ்சிபிங்க. அப்புறம் அவன பத்தி இவன பத்தி பேசி பேசி சுகம் ஆயிடும். தொழில் மறந்து நீங்க பேசினது மட்டும் நிக்கும். சிரிக்க கத்துக்கங்க அது போதும்’.

குளிர் வாட்டி எடுத்தது. வந்தவர்கள் சிலருக்கு சிலரை தெரிந்து இருக்கிறது. இன்னும் எவ்வளவு நேரம் காக்க வேண்டும் எதற்கும் பதில் இல்லை. அவன் வரும் வரை காத்து இருக்கவேண்டும். எல்லோரும் அறிந்தவர்கள் போல் பேசியதும் குளிரை பேசி பேசி விரட்ட முயல்வது போல் தோன்றியது. காலையில் இத்தனை பேச்சு தேவையற்றது. வீட்டில் யாருடனும் பேசமால் மௌனம் காத்தவர்கள் கட்டு அற்று பேசுகிறார்களா இடைவிடாமல் சிரிப்பும் பேச்சுமாய் அரைமணி நேரம் கடந்தது.

ஆட்டோவிலிருந்து கையில் லிஸ்ட்டுடன் கண்ணன் இறங்க அவனை சூழத் தொடங்கினர். “எல்லாரும் வந்துட்டாங்களா” எனப் பொதுவாய் கேட்டான்.

“கண்ணா நான் ஆஜர். எப்ப வண்டி வரும்” என்றார்
“இப்ப காபி வரும். சாப்பிட்டு கிளம்பிடலாம். மூணு பஸ், நமக்கு இரண்டாம் நம்பர் அசோக்பில்லர்ல கிளம்பும்… மத்தது தாம்பரம், பூந்தமல்லிருந்து கிளம்பும். போற வழியில 2 இட்லி, பொங்கல், வடை, வாட்டர்பாட்டில் 1 லிட்டர் தருவோம். வண்டி நிக்கும் போதும் சாப்பிடலாம். வேணும்னா உடனேவும் சாப்பிடலாம். உங்க இஷ்டம். ஒசூர் போறதுக்கு ஏழு மணிநேரம் ஆகும். வண்டி அவசரம்னா நிக்கும் எங்கிட்ட சொல்லுங்க”

“ரவி அண்ணா, கணேசண்ணா குருப்ல இருக்கறவங்க, குருப்பல யார் வரலன்னு பாத்து சொல்லுங்க. லிஸ்ட்ல பேரு செக் பண்ணிக்கங்க. லிஸ்ட ராஜா கிட்ட கொடுத்து இருக்கேன்”

தன் பெயர் இருக்கா என போட்டிபோட்டுக்கொண்டு சூழ்ந்தனர்.

“கண்ணா என் பேர் இன்னும் கூப்பிடல”

"பாத்தேன்.பயப்படாதீங்க பகவான் பாத்துப்பான் சொன்னான். நாளைக்கு அசோக் பில்லர்கிட்ட காலைல ஐந்து மணிக்கு வரச்சொல்லியிருக்கான். ஒசூர் போணும்"

"சரி போங்க"

"என்ன நீ டக்குன்னு போன்னு சொல்லிட்டே. எனக்கு படபடப்பா இருக்கு. பயத்துல ஒன்னும் புரியல"

"பயம் சத்துருன்னு நீங்க தானே அடிக்கடு சொல்லுவீங்க. தைரியமா போயிட்டு வாங்க எல்லாம் பழகிடும். ஸ்வாமி காரியம் அதான் பாக்கறேன். நம்ம நிலைமா தெரிஞ்சி பகவான் வழிகாட்டிருக்கு. இவ்வளவு வருஷமா இங்க தானே இருக்கோம். இதப்பத்தி நினைச்சமா தைரியமா போங்க"

*

இருள் பிரியாத விடியலின் பரம சுகத்தை உடல் மனம் இரண்டும் அனுப்பவிக்கமால் நடுக்கத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது. போரூர் பேருந்து நிறுத்தத்தில் சிலர் காத்திருக்க பேருந்து வர காணோம். ஆட்டோ அருகில் வந்தது. 5 மணிக்கு மேல தான் பஸ் எங்க போணும் விசாரிக்க, விபரம் சொன்னதும் 300 என்றான். தயங்க 'பெரியவரே 200 கொடுங்க காலையில யோசிக்காதீங்க' என்றான்.

ஆட்டோ கேஎப்சி அருகே நின்றது. ஒருவரும் இல்லை சற்று பதட்டமாகி போனில் தொடர்புக் கொள்ள எண்ணிய தருணத்தில் ஆட்டோவில் கச்சம் கட்டி ஒருவர் இறங்கினார். இறங்கியதும் 'வாங்கண்ணா' என அறிமுகம் ஆனவர் போல் சொல்லிவிட்டு "எப்ப வந்தீங்க" என புன்னகைத்தார்.

தயங்கிப் புன்னகைக்க, "ஏன் ஒருமாதிரி இருக்கிங்க" என்றார்.

"ஒண்ணுமில்ல"

"அண்ணா எங்கிருந்து வறீங்க நான் வடபழனிலிருந்து வரேன். உங்க நாமதேயம்"

"கோவூரிலிருந்து வரேன்"

"உங்க பேரு கேட்டேன்"

"என் பேரு மூர்த்தி... உங்க பேரு"

"சுப்பிரமணி"

"இன்னும் பஸ் வரல சொன்ன நேரத்துல வரமாட்டேன் நம்ம லேட்ட வந்தா கத்துவான் சரி விடுங்க. என்ன சர்வீஸ்ல இருந்தீங்க"

தலை அசைத்து சிரித்தார். கண்ணன் சொன்னது நினைவுக்கு வந்தது. 'இந்தத் தொழிலுக்கு அடிப்படை சிரிப்பு என்ன கேட்டாலும் சிரிச்சிடுங்க அப்புறம் பதில் சொல்லுங்க தயக்கம் கூடாது. என்னான்ன நம்மள மாதிரி தான் எல்லாரும் நீங்க சொல்லற பதில் இன்னொரு பேச்சு வளக்கும். அது வம்பா மாறும். கொஞ்ச நாள்ல தெரிஞ்பிங்க. அப்புறம் அவன பத்தி இவன பத்தி பேசி பேசி சுகம் ஆயிடும். தொழில் மறந்து நீங்க பேசினது மட்டும் நிக்கும். சிரிக்க கத்துக்கங்க அது போதும்'.

குளிர் வாட்டி எடுத்தது. வந்தவர்கள் சிலருக்கு சிலரை தெரிந்து இருக்கிறது. இன்னும் எவ்வளவு நேரம் காக்க வேண்டும் எதற்கும் பதில் இல்லை. அவன் வரும் வரை காத்து இருக்கவேண்டும். எல்லோரும் அறிந்தவர்கள் போல் பேசியதும் குளிரை பேசி பேசி விரட்ட முயல்வது போல் தோன்றியது. காலையில் இத்தனை பேச்சு தேவையற்றது. வீட்டில் யாருடனும் பேசமால் மௌனம் காத்தவர்கள் கட்டு அற்று பேசுகிறார்களா இடைவிடாமல் சிரிப்பும் பேச்சுமாய் அரைமணி நேரம் கடந்தது.

ஆட்டோவிலிருந்து கையில் லிஸ்ட்டுடன் கண்ணன் இறங்க அவனை சூழத் தொடங்கினர். "எல்லாரும் வந்துட்டாங்களா" எனப் பொதுவாய் கேட்டான்.

"கண்ணா நான் ஆஜர். எப்ப வண்டி வரும்" என்றார்

"இப்ப காபி வரும். சாப்பிட்டு கிளம்பிடலாம். மூணு பஸ், நமக்கு இரண்டாம் நம்பர் அசோக்பில்லர்ல கிளம்பும்... மத்தது தாம்பரம், பூந்தமல்லிருந்து கிளம்பும். போற வழியில 2 இட்லி, பொங்கல், வடை, வாட்டர்பாட்டில் 1 லிட்டர் தருவோம். வண்டி நிக்கும் போதும் சாப்பிடலாம். வேணும்னா உடனேவும் சாப்பிடலாம். உங்க இஷ்டம். ஒசூர் போறதுக்கு ஏழு மணிநேரம் ஆகும். வண்டி அவசரம்னா நிக்கும் எங்கிட்ட சொல்லுங்க"

"ரவி அண்ணா, கணேசண்ணா குருப்ல இருக்கறவங்க, குருப்பல யார் வரலன்னு பாத்து சொல்லுங்க. லிஸ்ட்ல பேரு செக் பண்ணிக்கங்க. லிஸ்ட ராஜா கிட்ட கொடுத்து இருக்கேன்"

தன் பெயர் இருக்கா என போட்டிபோட்டுக்கொண்டு சூழ்ந்தனர்.

"கண்ணா என் பேர் இன்னும் கூப்பிடல"

“நீங்க நம்ம பஸ்ல ஏறிக்கங்க” என்றான்.

மூச்சு சிரானது. பஸ் ஏறினார். ‘அப்பனே சர்வேஸ்வரா உன்ன நம்பி இந்த பயணத்த புது வாழ்க்கைய தொடங்கறேன். எனக்கு ஒன்னம் தெரியாது நீயே பாத்துக்க’ என மனசுக்குள் கசிந்தவரை தள்ளிக் கொண்டு ஜன்னல் ஒர இருக்கையில் அமர்ந்தவர் சிரித்தார். உக்கார்ந்தும் ஜெய் ஸ்ரீராம் என்றதும் சிலர் ஜெய் ஸ்ரீராம் என முழங்கினர். ‘வாங்க உக்காருங்க’ அருகில் அமரச்சொன்னார். “கோவிச்சுக்காதீங்க நான் வெத்தல போடுவேன் அதான் ஜன்னல் ஓரம் நீங்க போடுவீங்களா”

“இல்ல” அமர்ந்ததும் கண் முடினார். அருகில் இருப்பரிடம் முதன் முறையாக பேச பயம் வந்தது. அருகில் இருத்தவர், “அண்ணா குளிருதா, ஜன்னல் சாத்திடட்டுமா. அப்புறம் வேணா துறந்துக்கலாம்” எனக் கேட்டார்.

“இல்ல வேண்டாம்” சொற்களை இறைக்கமால் வாழ முடியுமா தெரியவில்லை.

காபி வந்தது.

“ஆளுக்கு ஒரு கப் மட்டும் குடிங்க”

யாரும் அவர் வார்த்தையை கேட்கவில்லை.

‘வீட்டில பெரிய டபரா செட்ல குடிச்சிட்டு இப்ப சின்ன பேப்பர் கப்ல செட் ஆகுமா. அவன் அப்படி தான் சொல்வான் குடிங்க இல்லன்ன நம்ம வயிறு தான் காயும். எப்படியும் மூணு நாலு மணிக்கு கிளம்பி இருப்பிங்க வெறும் வயித்தோட குடிங்க ஒன்னும் சொல்லமாட்டாங்க சும்மா அப்படி தான் ஏதாவது சொன்னதானே அவன் இருக்கற தெரியும், கூச்சபடாதிங்க. இந்த தொழிலுக்கு ரிடையார் ஆன பின்னாடி வரதுக்கு காரணம் பாதி பேருக்கு பேன்ஷன் வந்தாலும் வாயிக்கு ருசியா போற இடத்தல கிடைக்கறது தான். போவ போவ தெரிஞ்சிப்பிங்க’

“சார் காபி நல்லாயிருக்கா… நம்ம வைத்தி கடை நினைக்கறேன். அங்கதான் வாங்குவாங்க” என முன்சீட்டு மனிதர் சொன்னார்.

காபி வயிற்றில் கலக்கத்தை ஏற்படுத்த தொடங்கியது.

முகத்தை பார்த்து, “சூடா சாப்பிட்டதும் உடனே மலம் வந்தா 75% உடம்பு பர்பெக்ட்ன்னு சொல்லுவாங்க” என்றார்.

தலை ஆட்டிவைத்தார். உள்ளுக்குள் நடுக்கம் இருந்து கொண்டே இருந்தது. ரிடையர் ஆன பின்னாடி அப்பாடான்னு இருக்கலாம் நினைச்சா ஆண்டவன் இப்படி சிக்கலில் மாட்டிவிட்டுட்டான்.

“சார் ஐ அயம் வாசு… ரிடையர் மேனேஜர் எஸ்பிஐ. இவரு போஸ்ட் ஆபிஸ்… பலபேர் பேங்க் ஸ்டாப்தான். நீங்க..?”

“நான் பிஎஸ்என்எல் “

“ஜியோ வந்து உங்களுக்கு ஆப்பு வைச்சிட்டான். இப்ப லேண்ட் லைன் சுத்தமா போயிடுச்சு. ஜியோ, ஏர்டெல், வோடோபோன் தான் டாப். ஜியோ பரவால்ல சார். ஏர்டெல் மோசம்… பில் திட்டாறான் பாருங்க. பெரிய ஆளு பல பேர் வேற நெட் வோர்க்கு மாறிட்டாங்க. நீங்க இப்பவும் பிஎஸ்என்எல் தானா”

“ஆமா சார் அது போதும் கொஞ்ச ஸ்லோ”

“கொஞ்சம் இல்ல சார் டெட் ஸ்லோ”

பலர் ஆங்கிலத்தில் சரளமாக பேச, எங்கே பேசி விடுமோ என சொற்களை அடக்க பழகினார்.

லிஸ்ட் எடுத்தவர் முன்னிலிருந்து தலைகளை எண்ணி 48 என்றார். பின்னிலிருந்து எண்ணியவர் 50 என்றார். இரண்டு மூன்று முறைக்கு பின் அவர்கள் திருப்தி அடையும் எண்ணிக்கை வந்தது. ஓரே பெயரில் பலர் இருக்க குழப்பம் என்றனர்.

பேருந்து புறப்பட ‘மோடிக்கு ஜெ’ என ஒருவர் ஆரம்பிக்க, ‘ஹர ஹர மஹாதேவ்’, ‘அம்மா அபிராமி’, ‘மீனாம்பிகா’, ‘பவானி தாயே நீயே காப்பாத்தும்மா’ என ஆளாளுக்கு ஒரு பெயர் கூற இவர் அமைதியாய் பார்த்தார்.

*

அவர் கண்ணை முடினாலும் தூக்கம் வரவில்லை. பேருந்துக்குள் ஓயாத பேச்சாக பேருந்து இருந்தது

அருகிலிருந்தவர் “சார் ஒருமணிநேரம் பேசுவாங்க அப்புறம் பாருங்க அவனவன் குறட்டை சமாளிக்க முடியாது. எத்தனை வாட்டி பாத்து இருப்பேன். நீங்க ஏன் ஒரு மாதிரி இருக்கீங்க. உடம்பு சரியில்லையா, உங்கள இதுக்கு முன்னாடி பாத்தது இல்லையே. குளிரில இப்படி வேக்கறது” எனக் கேள்விகளை அடுக்கினார்.

என்ன சொல்வதென்று தெரியாமல் சிரித்து வைத்தார்.

அவராக பேசத் தொடங்கினார். “என்ன பண்றது இந்த வயசுல உழைக்கனும் ஆண்டவன் எழுதி வைச்சிருக்கான். எனக்கு 73 வயசாறது இரண்டு பசங்க. இரண்டு பேருக்கும் கல்யாணம் பண்ணிட்டேன். பென்ஷன் வருது… அது போதும் ஆனா சகதர்மினி என்னால டெய்லி சமைக்க முடியல… நான் மட்டுமுன்னா ஏதோ ஒன்னு பண்ணி காலத்த ஓட்டுவேன். அதனால கண்ணன் கூட பாரயாணம் போன்னு அனுப்பற, நான் இல்லன்னா கிளம்பி அவ தங்கை வீட்டுக்கு போயிடுவா எப்படியோ காலம் ஓடறது. ஒரு வருஷமா பாரயணம் வரேன். சும்மா சொல்லக்கூடாது அவன் நல்ல பையன். மத்தவன் மாதிரி பாதி கமிஷன் எடுக்க மாட்டான்”

“என்னது கமிஷனா..?”

“ஆமாண்ணா… சும்மா கூப்பிட்டு போவாங்களா அவங்களுக்கு ஒரு வருமானம் வேண்டாமா… இங்க இருக்கறவங்க எல்லாம் ரிட்டையர் ஆனவங்க… பென்ஷன் வாங்கறவங்க… சும்மா பொழுதுப்போக்கு பாதிப்பேர் வரான். சிலர் மட்டும்தான் வயித்து பொழைப்புக்கு வராங்க. என்ன பெரிசா கொடுத்துடுவான். முந்நூறு, சில இடத்துல ஐநூறு, ஆயிரம் தருவான். கனக துர்கை கோயில்ல மட்டும் ஆயிரத்து ஐநூறு கன்பார்ம். ஆனா சான்ஸ் கிடைக்காது. எல்லாத்துக்கும் குரூப் இருக்கு. எல்லாரும் ஏதோ ஒரு குருப்ல இருப்பா. இங்க இருக்கற முக்காவாசி பேர் பாடசாலயில படிக்காதவா, ஆனா அனுபவத்துல சூக்தாதி சொல்லுவா” என்றபடி தான் தண்ணீர் குடித்து விட்டு தண்ணீர் பாட்டிலை அவரிடம் நீட்ட, நாக்கு வறட்சி இருந்தாலும் தயங்கி “வேணாம்” என்றார்.

“ஹை சூமார்ட்ன்னு ஒரு குருப் இருக்கு. அதுல பாடசாலயில படிச்சவாளுக்கு மட்டும்தான் டிமாண்டு. ஆனா பாருங்க பாச்சால படிச்ச குழந்தைங்க நன்னா சம்பாதிக்கறது. பொண்ணு கிடைக்க மாட்டேங்குது. குடுமி வைச்சா இப்ப பெண் குழந்தைகளுக்கு பிடிக்கல, எல்லாம் கம்பியூட்டர் படிச்சவாளா பாக்கறா…. என்ன கலிகாலம். கிராப் வெட்டி கல்யாணம் பண்ணின்டு அப்புறம் பானதபாட்டு திரும்ப குடுமி இந்த வாழ்க்கைக்கு வரான். பாடசால மட்டுமல்ல இன்சினியர் படிச்சவன் கூட வரான்”

“போஸ்ட் மாஸ்டர் அண்ணா பேச தயங்காதீங்க. இங்க பேச்சு தான் எல்லாத்தையும் தீர்மானிக்கும். நீங்க மௌனியா இருந்தா திமிரு பிடிச்சவானா இருக்கான்னு சிரிச்சிக்கிட்டே எல்லோருக்கிட்டயும் சொல்லுவான். பேசறதுல என்ன நஷ்டம் வந்துடப்போறது. தைரியமா பேசுங்க அவனவனுக்கு ஆயிரம் பிரச்சனை பேசி பகிர்ந்துக்க மனசு லேசா ஆகும். ஏழு மணி நேரம் உம்முன்னு வர முடியுமா கொஞ்சம் பேச்சு கொஞ்சம் தூக்கம் கொஞ்சம் வம்புன்னு தான் போவணும்”

“அண்ணா இவனுங்க இப்படிதான் கண்டுக்காதீங்க. இப்ப எதுக்கும் கச்சம் அங்க போயி கட்டிகிட்ட போறாதா சும்மா பந்தா”

திரும்பி அவரைப் பார்க்க, “சொல்லிட்டு நீ ஏன் கட்டிக்கிறேன் பாக்கறீங்களா ஒன்னுமில்ல சும்மா தான். ஆனா அங்க போயி கட்டிகிட்ட போதும். சிலப்பேரு வீட்டிலருந்து வரச்சயே கட்டிட்டு வந்துடுவாங்க”

முன் சீட்டில் இருந்தவர், “இன்னிக்கு இவரா பாவம் அவரவிட்டுடு புதுசா இருக்காரு சும்மா ஏதாவது சொல்லி பயமுறுத்தாதே. மோடி எஜிகேஷன் பாலிசி பாத்தியா சும்மா நச்சுன்னு இருக்கு. நம்ம கவர்மென்ட் தான் பாலோ பண்ணல எல்லா ஸ்டேட்லேயும் பண்றான்”

அடுத்தவர் “ஆமா நல்லது நடந்தா இவனுங்களுக்கு ஆகாது. எல்லாரும் முட்டாள இருக்கணும். அவங்க சொன்னதா கேக்கணும் அவங்க ஜெயிக்கணும் சேக்கணும் இதான் பாலிசி யாரு வந்தாலும் இதான் நம்ம தலை எழுத்து மாறாது”

“அண்ணா நான் உங்கள பயம் முறுத்தேறனா நீங்களே சொல்லுங்க”

அவர் தலை அசைத்தார்.

“மோடி பாலிசி வந்துட்டா டியுசன் சென்டர் தொல்ல இருக்காது” ஆங்கிலத்தில் தான் பேசினார்.

“சுரேஷ் நீ எப்ப வந்தே”

“நான் நைட்டே கிளம்பிட்டேன். அரக்கோணத்துல இருந்து 5 மணிக்குள்ள வரமுடியுமா சென்ட்ரல் வந்து குளிச்சிட்டு வரேன்”

நெற்றில பட்டை அவர் குளித்ததாக தெரியவில்லை. “ஆஞ்சநேயர் கோயில வேல பாக்க்கறான். இரண்டு பொண்ணு. ஐடியில இருந்தான் வேல போயிடுச்சு நம்ம லைனுக்கு வந்துட்டான் ஏதோ பகவான் அவன காப்பாத்திட்டு இருக்காரு. ஆறு மாசமா தான் வரான். அவனுக்கும் ஒன்னும் தெரியாது ஏன் பல பேருக்கு ஒன்னும் தெரியாது கண்ணன் தயவுல வண்டி ஒடுது”

"ஏண்டா சுத்து கோவில் பாத்தியே இப்ப யாரு பாத்துப்பா"

"ஆளு சொல்லிட்டேன். சுத்து கோயிலக்கு மாசம் மூவாயிரம் முதல் ஐயிராம் தராங்க.ஆளு போட்ட ஒரு நாளைக்கு ஐநூறு கேக்கறான். அதான் ஒன்னும் புரியல. கோயில விட்டுடலாம்னு யோசிக்கறேன் பாரயணத்துக்கு இரண்டாயிரம் சொன்னாங்க அதான் வந்துட்டேன். இரண்டாயிரத்துல எவ்வளவு பிடிச்சுப்பாங்களோ தெரியல"

"ருத்திரபாராயணத்தில ஆயிரத்து ஐநூறு தந்தா இருநூறு பிடிச்சிட்டு மிதம் தருவாங்க. சில இடத்துல எங்க அவ்வளவு தரான். டிபன் சாப்பாடு போட்டு மூநூறு இல்ல ஐநூறு தான் தரான். சில இடத்துல பேக் ருத்திராட்ச மால தருவான்"

"ரவி அண்ணா குரூப்ல தான் நிறைய பேரு வருவா. அவரு நம்ம கிட்ட எடுக்கமாட்டாரு. ஸ்டேய்ட்டா யாரு அரேஞ் பண்றாளோ அவாகிட்ட பேசி வாங்கிப்பாரு. நம்மகிட்ட கேக்கமாட்டாரு. இன்னிக்கு மூநூறு பேர்ல என்பது பேரு அவரு தான் அரேஞ் பண்ணி இருக்காரு. நூத்தம்பது பாடசால பசங்க எல்லா பாடசாலையும் சேர்த்து ஒன்னு இரண்டு வைஷ்ணவா இருப்பா அவ்வளவுதான்"

பேருந்து எல்லார் சொற்களையும் காற்றில் பறக்கவிட்டு சென்று கொண்டிருந்தது.

காபி குடித்தால் நன்றாக இருக்கும் எனத் தோன்ற நினைத்ததும் நிறைவேறும் வாழ்க்கையா இது. கையில் டிபன் பாக்கெட் கனத்தது.

"இப்பவே சாப்படறவா சாப்படலாம். வண்டி நின்ன பின்னாடி சாப்பாடறவா சாப்பிடலாம். சாப்பிட்டு காலி கவர் சைட்ல தூக்கி அடிக்கமா இந்த அட்டபெட்டில போடுங்க"

அருகிருந்தவர் பிரித்தார்.சாம்பார் மனம் பரவியது.
"அண்ணா சாப்பிடுங்க காலையில ரெடி பண்ணது நம்ம வண்டி நின்னு சாப்பிடறதுகுள்ள ஆறி அவளா போயிடும். சாப்பிட்ட மாத்திரை போட்டு செத்த கண் அசரலாம். காலை ஒன்பது மணிக்குள்ள டிபன் சாப்பிடணும் இல்ல உடம்புக்கு டெஞ்சர். கூச்ச படமா சாப்பிடுங்க"

சாம்பார் கவர் பிரிக்க சற்று சிரமாயிற்று. எங்கே கொட்டிவிடுமோ நடுக்கத்தில் மடியில் பிரித்த இட்லி, சாம்பார், சட்டினி பிரிக்கவில்லை இந்த வயதில் எதைத்தான் கற்றுக்கொள்வது. ஓடும் பேருந்தில் சாப்பிடுவது பற்றி யோசித்தது இல்லை. பேருந்து குலுக்கலில் சாம்பார் தளும்பியது அரைகுறையா அவசரமாய் சாப்பிட பக்கத்தில் இருந்தவர் சிரித்தார்.

பேச்சு அரசியல் சினிமாவை கடந்து மருந்து குறித்து வந்தது.

"கிண்டில மோடி ஆஸ்பிட்டல்ல அறுபது வயசு ஆயிடிச்சுன்னு பத்துபைச செலவில்லாம பாத்துக்கலாம். நல்லா டிரிட்மெண்ட். போனமாசம் போயிட்டு வந்தேன். ஆனா ஆதார் கார்டு கட்டாயம். ஆதார் இருந்த தான் அட்மிஷன்"

அருகிலிருந்தவர் "தாம்பரத்துல சித்தா ஆஸ்பிட்டல் இருக்கு. பத்து ரூபா கார்டு போட்ட நன்னா பாக்கறான். முட்டிவலிக்கு ஆயில் தருவான். இன்னா பத்து நாளைக்கு தான் தருவான். காலைல எட்டு மணிக்கு போன சிக்கிரமா வந்துடலாம் சாயங்காலத்துல கிடையாது"

வண்டி நின்றது. மணி ஒன்பது.

*

விண்மீன் மின்னிதழ்

காஞ்சிபுரம் தாண்டி சாலையோரம் டீ கடை அருகே நின்றதும் அவசரமாய் இறங்கி சிலர் ஓடினர். அட்டைப்பெட்டியிலிருந்து உணவின் நெடி காற்றில் பரவ மற்றவர்கள் வண்டியில் சாப்பிடத் தொடங்கினர். .

சிலர் புலம்ப துவங்கினர். தலையெழுத்து ரோட்ல சாப்பிட வேண்டி இருக்கு.

மற்றொருவர் ஸ்வட்டர் அவுத்து காற்றை உடம்பில் பரவ விட்டு காலற சிறிது நடந்தார்.

காபி குடித்து பிஸ்கெட் பாக்கெட்டுடன் வண்டியில் அமர்ந்தார்கள்.

டிரைவர் நடந்து மறைந்தார். சுருள் வளையங்கள் வெளிவந்தன.

சிறுநீர் கழித்ததும் பெரும் பாரம் குறைந்து போலிருந்தது. டிரைவர் சுகர் பேஷண்டு போலிருக்கு அதன் நமக்கு சௌகரியம் அப்பப்ப வண்டி நிறுத்துவான். முதன் முறையாக அவராக பேசினார்.

"அண்ணா பிரியா ஆயிட்டிங்களா, அவ்வளவுதான் பயணம் எல்லாத்தையும் மாத்தும்ன்னு சும்மாவா சொன்னான். டெய்லி ருத்திரம் சமகம் பத்துவாட்டி கேட்ட தானா மனப்பாடம் ஆயிடும். நமக்கு இது

த்தில ஊறி இருக்க நாம தான் முயற்சி பண்ணமா கதை சொல்லிட்டு அலையறோம். வேல காசு பணம் பதவின்னு ஓடி ஆடி இப்ப பிக்கல் பிடுங்கல் வரப்ப பகவான கூப்பிட்டா அவன் லேட்டா தான் வருவான். ஆனா வரமா போகமாட்டான். நம்ம தருமத்தை நாமளே மீறிட்டு இப்ப அழுது என்ன புண்ணியம். அவனவன் தர்மத்தை அவனவன் பாலோ பண்ணணும்"

அருகில் வந்த போஸ்ட் மாஸ்டர் "சரியா சொன்னீங்க. நம்ம வேல்யுஸ் நமாளே மதிக்கமா மத்தவன குறை சொல்லி என்ன பிரயோஜனம். வேலைக்கு போறச்ச ஏதோ தலையில குட்டிண்டு போயிட்டு ஆபிஸ்ல என்ன கெத்து காட்டுவோம். அவங்களும் சாமி சாமின்னு மரியாதை கொடுத்தாங்க. அத காப்பாத்திக்க நமக்கு துப்பில்ல சாரி கொஞ்சம் ஓவரா பேசிட்டேன். இந்த வயசுலயும் பகவான் நமக்கு படி அளக்குறான். மத்தவங்கள நினைச்சு பாருங்க. சரிவிடுங்க பேசி ஒன்னும் ஆகப்போறதில்ல"

கண்ணன் குரல் கொடுத்தான். "எல்லாரும் சிக்கிரமா ஏறின போயி கொஞ்ச ரெஸ்ட் எடுக்காலம். இப்ப தான் போன் பண்ணா. போனதும் போஜனம் முடிச்சிட்டு மூணு மணி வரை ரெஸ்ட். மூணுல இருந்து ஐந்து மணி வரைக்கும் மந்திர பாராயணம். ஐந்து மணிக்கு காபி ஸ்நேக்ஸ். ஆறு மணிக்கும் ஹோமம் ஆரம்பிச்சா ஒன்பது ஆயிடும். அப்புறம் டிபன் முடிச்சுட்டு கிளம்ப இராத்திரி 11 ஆயிடும்"

"கண்ணா ருத்ர பாரயணமா, வேத பாரயணமா, நாம ஜபமா"

"குருநாதரோ இல்ல அங்க இருக்க யாராவது மந்த்ரம் சொல்வா அத நாம தொடர்ந்து சொல்லணும் அவ்வளவுதான்"

மீண்டும் வியர்க்க தொடங்கியது. சகஜமாகுபோதெல்லாம் ஏதோ ஒன்று துரத்துகிறது. விதியா அல்லது சோதனையா புரியவில்லை. கண்மூட முடியாமல் வெளியே பார்க்க தொடங்கியது. உள்ளுக்குள் பார்க்கும் பாக்கியம் கடைசி வரை கிடைக்கதோ என எங்கினார்.

"கண்ணா அடுத்த ப்ரோக்ராம் எப்ப" எஸ்பிஜ கேட்க-

"அதி ருத்ரபாரயணம் தான். ஆனா பதினொருநாளு அங்கேயே தங்கணும். எல்லா வசதியும் இருக்கு. பெரிய சத்திரம் ஏற்பாடு பண்ணியிருக்கா சொல்லறேன் வந்திடுங்க"

சுத்துகோயில் "நான் வரேன் அண்ணா" என்றார்.

"பாத்திங்களா அவன, இப்பதான் பீல்டுக்கு வந்தான் காதுல கடுக்கன் உச்சி குடுமி எப்படி தொழிலுக்கு தாயாராயிட்டான் பாருங்க. ருத்ரம் அவனுக்கு தெரியாது ஆனா முன்னாடி பேரு கொடுக்கறான். இதான் கலிகாலம் அவன் பொண்ணு பி.பார்ம் பண்ணுது இவன் ஐடில வேல பாத்தான் வேல போயிடுத்து இங்க வந்துட்டான். நான் அம்பத்தூர்ல இங்க காலைல வரதுக்குள்ள மூச்சுவாங்கிடுச்சி. எல்லாம் பூர்வ ஜென்ம கர்மா யாரை குறை சொல்லறது" என போஸ்ட் ஆபீஸ் சொல்ல சிலர் சிரித்தனர்.

"பசி வந்தா பத்தும் பறந்துடும் சொல்லுவா இவனுக்கு பசி உனக்கு அப்படியா. தேவை தான் வாழ்க்கையை தீர்மானிக்கும் புரிஞ்சுக்கோ"

"பேருந்தின் மொழி வேகம் மட்டுமல்ல, விளக்கு வெளிச்சம் சாலையில வர எதிர்த்த வண்டிக்கு அது புரியும். எப்பேற்பட்ட பிரச்சனை இருந்தாலும் கொஞ்ச நேரம் கண் சுழட்டி தூங்க வைக்கும் அம்மா மாதிரி தான் பேருந்து"

"இது நல்ல இருக்கே"

விண்மீன் மின்னிதழ்

வண்டி ஹாரன் அடித்து விரைந்து கொண்டிருந்தது. "இன்னும் சிறிது நேரத்தில் வண்டி ரீச் ஆயிடும் ரெடியாயிடுங்க" கண்ணனுடன் வந்த அருண் குரல் கொடுத்தார்.

பேருந்து தார்ச் சாலையிலிருந்து விலகி மூன்று கிலோமீட்டர் தொலைவிற்கு இருபுறமும் மரங்கள் மட்டுமே இருந்த குண்டும் குழியுமான மண் சாலையில் சென்றது... சென்றது... சென்று கொண்டே இருந்தது

"இன்னடா கண்ணா காட்ல யாகமா சொல்லவே இல்ல"

"சும்மா இருங்க மாமா இப்ப போயி விளையாடிட்டு"

மண் சாலை மறைந்து பிரமாண்டம் புலப்பட ஆரம்பித்தது. நூற்றுகணக்கான வண்டிகள் அணிவகுத்து நின்றன.

காட்ல இப்படி ஒரு கோயிலா பிரமிப்பு அடங்கவில்லை

செக்யூரிட்டி வந்து விசாரித்து பின்பக்கம் வண்டிய விட சொன்னார்.

“எல்லாம் இங்கேய இறங்கி நேர போயி ரைட்ல திரும்புன்ன ஹால் வரும் அங்க பேக் வச்சுட்டு சாப்பிடுங்க” என்றார்.

பேருந்தில் இருந்து இறங்கி சிலர் பஞ்சபாத்திர உத்தரிணியுடன் மாத்தியானிகம் செய்ய ஓடினர்கள். அருகே இருந்தவர் “இவனுக வீட்ல ஒன்னும் செய்யமாட்டாங்க இங்க வந்து கண்ணன் எதிர்க்க சீன் போடுவாங்க. இப்ப டைம் என்ன, நீங்க வாங்க சாப்பிட போகலாம்”

ஹால் முழுதும் துர்கையின் சுதை சிற்பமாக ரம்மியமா இருந்தது. ஆயிரம் பேருக்கு மேல் அமரும் வசதி. வண்ண விளக்குள் கீழே குல்ட் விரிக்கப்பட்டு இருந்தது. சென்னை தவிர பிற ஊர்களிலுமிருந்து நிறைய பேர் வந்திருத்தனர்.

இடம் முழுவதும் பிரம்மாண்டம். போட்டோ எடுக்க நினைத்தால் யாராவது ஏதாவது சொல்வார்களோ என நினைத்தவர் கண்ணில் முன்னரே வந்தவர்கள் சுயமி எடுத்து கொண்டிருந்தனர்.

அன்னதாகூடம் ஐநூறு பேர் அமரும் வசதி இருந்தது.

எல்லோரையும் சேட் மிகுந்த மரியாதையுடன் ஸ்வாமிஜி என வரவேற்றார்.

உணவே பிரம்மம். உணவை வீணாக்காதீர்கள். எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிடுங்கள் மைக்கில் அறிவிப்பு வந்தது. அன்னதானகூடத்தை இரண்டாக பிரித்து மக்களுக்கும் ஒருபுறமும், வேத பிரமாணர்களுக்கு மறுபுறம் என தடுத்து இருந்தனர். சுத்தகரிகப்பட்ட குடிநீர் அங்காங்கே இருந்தது தினசரி ஐநூறு முதல் ஆயிரம் பேர் உணவருத்துவதாக கூறினார்.

சாப்பிட்டதும் சிறுநீர் கழிக்க நகர்ந்தார். அலுவலகத்தில் ஏற்பட்ட பழக்கம் அதை மாற்ற முடியல.

“சரி சீக்கிரம் வாங்க செத்த உடம்ப சாய்ப்போம். பஸ் பயணம் டயர்ட இருக்கு அப்புறம் ஜெபத்து எழுப்பிடுவான். சில பேர் குளிப்பாங்க உங்க இஷ்டம் போல பண்ணுங்க” என்றார்.

கண் சொருகும் நேரத்தில் “எல்லாம் ரெடி ஆயிடுங்க” என கண்ணன் கத்த தொடங்கினான். மணி மூன்று.

“மூணு மணிக்கு எழுப்பினா தான் நாலு மணிக்கு ரெடியாகுங்க அதான் எழுப்பறான். நான் குளிச்சிட்டு வரேன். வண்டியில வந்த டையர்டு உடம்புல தண்ணிபட்டா சூப்பரா இருக்கும்”

ஓட்டமும் நடைமுமாய் சிறுநீர் கழித்து முகம் அலம்பி பஞ்சகச்சம் கட்ட தடுமாற. எஸ்.பி.ஐ, “பதட்ட படாதீங்க எல்லோரும் அசெம்பிள் ஆகி ஆரம்பிக்க இன்னும் அரைமணி நேரம் மேல ஆகும். பொறுமையா வாங்க”

ஓலையின் பின்னப்பட்ட பெரிய குடில். விளக்கு வெளிச்சம் சுற்றி மின்விசிறி என ஆயிரத்து ஐநூறு பேர் அமரும் வசதியுடன் இருந்தது. குருவின் உருவ படங்கள் ஆங்காங்கே பெரிதாக இருந்தது. துர்கையின் படம் இருந்தது. கலை நயத்துடன் ஓலையில் அமைக்கப்பட்ட குடில் சினிமாவில் காட்டில் ரிஷிகள் தங்கும் ஆஸ்ரமம் போலிருந்தது. வாழ்வில் அத்தனை பிரமாணர்களையும் வேதம் படிக்கும் குழந்தைகளை பார்க்க மனதை என்னவோ செய்தது.

“பாத்திங்களா எப்படி இருக்கு. அங்க பாருங்க துர்கை எவ்வளவு பெரிசு என்னா அலங்காரம் எதிர்க்க மேடையில எத்தனை கலசம். அம்பாள எதிரில பாருங்க எவ்வளவு பெரிய குண்டம் .குரு அங்க தான் பூஜை பண்ணுவாரு போல சரி வாங்க நம்ம போயி உக்காரலாம்”

ஒன்பது விதமான குண்டங்கள் அருகே ஹோம திரவியங்கள் பல தட்டுகளில் இருந்தது. இதெல்லாம் செட் பண்ணவே டைம் ஆயிருக்கும். எத்தனை பேரெ வேல செய்யறாங்களோ.

மஞ்சள் உடை அணிந்த நபர் எல்லோரையும் அமர சொன்னார். “சாப்பிட்டிங்களா, சந்தோஷம் எல்லோருக்கும் நமஸ்காரம். முதல்ல நாம ஜெபம் அப்புறம் ஹோமமம். கூன் போடமா உக்காந்து நான் சொல்லற மந்திரத்தை சொன்னாப் போதும்”
ஹரஹர மஹாதேவா
.......

மைக்கில் கணபதி, சிவ, விஷ்ணு, துர்கா மந்திரம் சொல்ல எல்லாரும் சொல்லத் தொடங்கினர்.

மந்திர ஒலி மனதை ஏதோ செய்தது.சில சொற்களை சொல்ல முடியமால் நாக்கு தடுமாறி கண் மூடி மெல்ல மந்திரத்தை உள்ளுக்கு சொல்ல சொல்ல அழுகை வந்தது. சிலரின் சிரிப்பு ஒலியும் கேட்டது. சிறிது நேரத்தில் நிசப்தம் ஆட்கொண்டது. எதுவும் காதில் விழவில்லை கண்ணை திறக்க முடியமால் தடுமாற கண்டா மணி ஒலியில் கண் திறந்தார். மனம் லேசானது போலிருந்தது.

விண்மீன் பதிப்பகம்

"என்ன அண்ணா ரொம்ப லயிச்சி போயிட்டப்போல சிலசமயம் யாருக்காவது பிராப்தம் இருந்தா நடக்கும். உங்களுக்கு நடந்திருக்கு கெட்டியா பிடிச்சுக்கோங்க. நீங்க பயத்துல சொன்னீங்களோ, உண்மையா சொன்னீங்களோ தேவதை டக்குன்னு உங்ககிட்ட வந்துட்டா. நான் சொன்னா சிரிப்பா இருக்கும். எங்க குருநாதர் சொல்வார் நாங்க சிரிப்போம் இப்ப தான் உங்கள பாத்து தெரிஞ்சிக்கறேன்"

சிரித்தார்.

"பாத்திங்களா சிரிக்கிறிங்க"

"இல்ல" கண்ணிர் கசிந்தது.

"ஆஸ்ரமத்துல லோக ஷேமத்துக்காக பண்றான். நாம காசுக்கு சொல்றோம். ஆனா அதுலயும் ஒரு ஹானஸ்டி இருக்க வேணாமா. பாருங்க மந்த்ரம் சொல்லமா வாய அசைக்கறது பக்கத்துல பேசறது கிண்டல பண்றது விளையாட்டா இருக்கா என்ன பொறுத்த வரைக்கும் நாம வாங்கற காசு நமக்கு பயன்படனும். டாக்டர்கிட்ட கொடுக்க கூடாது. வேற தண்ட செலவு ஆகக்கூடாது மத்தபடி எனக்கும் ஒன்னும் தெரியாது. ஏதோ சொல்லணும் தோணித்து சொன்னேன். அவன் அதிகமா தரான் இவன் கூப்படறான் இத விக்க ஆரம்பிச்ச இந்த அனுபவம் கிடைக்காது பாத்துக்கங்கோ. எப்ப உங்க கண்ணுல ஜலம் வந்துதோ அப்பவே பகவான் உங்கள கவனிக்கறான் அர்த்தம். வாங்க போயி காபி சாப்பிட்டு வரலாம்"

*

ஹோம குண்டங்கள் மூன்று பிரிவுகளாக இருந்தது. வட்ட சதுர குண்டங்களா மூநூறு மேல் இருந்தது. குரு இருந்த மேடை அருகே நவ குண்டங்கள் பெரிதாக இருந்தது.

மீண்டும் அச்சம்

கண்ணன் அருகே வந்து "நம்ம ஆளுங்க ஒரே லைன்னா உக்காருங்க. அப்பதான் ஈசியா இருக்கும். எஸ்.பி.ஜ அண்ணா இவர பாத்துக்கங்க புதுசு"

"நீ போ கண்ணா நான் பாத்துக்கறேன். அவர ஸ்வாமி பாத்திட்டு இருக்கார்"

"என்னது"

"ஒன்னுமில்ல நீ போ"

"அண்ணா ஏன் கிண்டல் பண்றீங்க. கல்யாணத்துல ஹோம குண்டத்துல உக்காந்தது. இப்ப தான் இவ்வளவு குண்டத்தையே பாக்கறேன்"

"கவலபடாதீங்க. இந்திகாரன் குடும்பத்தோட வருவான். குண்டம் முன்னாடி உக்காந்ததும் விபூதி இட்டு விடுங்க .சில பேர் முடிஞ்சதும் நூறோ இருநூறோ தருவான் உங்களுக்கு லக் இருந்த கிடைக்கும். பெரிய அமௌண்ட் கட்டி தான் ஹோமத்துக்கு வருவான். சிலபேர் தரமாட்டான். புதுவருஷம், நவராத்திரி, குருபெயர்ச்சி முக்கியமான நாட்களா இங்க ஹோமம் நடக்கும் எல்லாம் அதர் ஸ்டேட்காரன்தான்"

"எங்க உக்காரணும்"

"நீங்க அப்படி உக்காருங்க"

"ஒரு வேலையை நெருங்கற வரைக்கும் இருக்கற பயத்துக்கும் நெருங்கிட்ட லர பயதும் வேறயாமாறி போயிடும். மைக்ல மந்திரம் சொல்லறப்போ ஹோம திரவியத்தை போடுங்க அதுவரைக்கும் கண்மூடி ஜெபம் பண்ணுங்க. அவ்வளவுதான். இவ்வளவுபேர்ல சில பேர் சின்சியார பண்றதுல தான் எல்லாருக்கும் நல்லது நடக்குது. கண்ணன் மட்டுமல்ல நம்மள கேமரா கவனிக்குது. இதுதவிர நீங்க நம்பினா ஸ்வாமியும் கவனிப்பாரு"

நீ முன்னாடி நான் முன்னாடி புகை தாங்க முடியாது என சிலர் பறந்து ஓரமாய் அமர்ந்தனர்.

சதுர குண்டங்கள் இருபது என பத்துவரிசை இருந்தது.

'யாராவது ஏகம்(சிறுநீர்) போனானும் போயிட்டு வந்துடுங்க. குண்டத்துல உக்காந்த நடுவுல எழுந்துக்கு முடியாது. இரண்டு மணிநேரமாகும்'

அறிவிப்புக்கு பின் உடனடியாக போகத் தோன்றியது. எழுந்திருக்க தயங்க, பலர் எழுந்து நடக்கத் தொடங்கினர். குண்டத்தின் அருகே துண்டை இட்டு இடத்தை உறுதிப்படுத்திக் கொண்டு நடந்தனர்.

குண்டங்கள் அருகே வடக்கர்கள் குடும்பமாய் வந்து அமர்ந்தனர்.

குண்டத்தில் முன்னால் மடக்கில் நெய், ஹோம திரவியம், பழங்கள், தீப்பெட்டி கற்பூரம் என இருந்தது. இத மெயிண்டயின் பண்றதே பெரிசு.

குண்டத்தின் அருகில் வந்த கணவன் மனைவி குழந்தைகள் கால் தொட்டு வணங்க, 'சர்வேஸ்வரா




விண்மீன் மின்னிதழ்

எனக்கும் ஒன்னும் தெரியாது இவர்களை நீ ஆசிர்வதித்து அவங்க பிராத்தனைய நிறைவேத்து இவங்களுக்காக காயத்தரி மந்திரம் 108 ஜபிக்கறேன். நீ பாத்துக்கோ ‘

குரு வருவதற்கான முரசுகள் ஓலித்தது. மஞ்ச பட்டு உடுத்தி சீடர்கள் சூழ வந்து எல்லோரையும் ஆசிர்வதித்தார். கலசங்கள் இருந்த மேடை அருகே சென்றதும் உதிரி பூ தட்டு நீட்டினர். அவர் கண்மூடி தியானித்து வேத பண்டிதர்கள் மந்திரங்கள் முழங்க பூவால் கலசங்களை அர்ச்சித்தார். பின் சிறு புன்னகை. இந்தியில் பேசத்தொடங்கினார். (இந்தியா மாரட்டியா பெங்காலியா தெரியாது தெரிஞ்ச ஒன்னு இந்தி தான்)

சீடர்கள் தமிழ் இந்தி என மாறி மாறிப் மைக்கில் மொழிப்பெயர்த்தனர்.

மந்திரங்கள் முழங்க குண்டங்களுக்கு தேவையான பொருட்களை கொடுத்துக்கொண்டே ஆலோசனைகளை வழங்கினர். பூரண ஆஹுதி முடிந்ததும் அப்பபடா என இருந்தது.

அண்ணா சக்ஸஸ்புல்லா ஹோமத்தை முடிச்சிட்டீங்க.

பரமேஸ்வரா எனக்கு ஒன்னும் தெரியாது இவ்வளவு பெரிய ஹோமத்துல கலந்துக்க வைச்சிருக்கே தப்ப மன்னிச்சுடு மனத்தின் மொழி கண்ணில் வழிந்தது.

ஏன் இப்ப அழறீங்க. அதான் முடிஞ்சிடுச்சே. அப்படி உங்களுக்கு ஏதாவது பயமா இருந்தா வாங்கற காசுல பத்து பர்சென்டு தானம் பண்ணுங்க. இல்ல உங்களுக்கு எது நல்லதுன்னு படுதோ அதச் செய்யுங்கோ. சீக்கிரம் வாங்க பஸ்ல ஏறி உக்காரலாம். புகை கண்ணு எரிது”
பேருந்தில் காற்று தொட்டது.

# நிஸ்வாவின் நிழலில்

## பகுதி-13 சூரிய மலை!!!



**இளங்கோ ராமசாமி**



கடந்த அத்தியாயத்தில் நான் உங்களை அழைத்துச் சென்ற "மிஸ் ஃபாத்" என்ற பல நூற்றாண்டுகள் பழமையான கிராமத்தில் இருந்து வெளிவர மனமே இல்லாமல் லயித்துக் கிடப்பீர் எனத் தெரியும். அங்கிருந்து கிளப்ப அதைவிட வசீகரமான ஏதாவது ஒரு சங்கதி வேண்டுமல்லவா? அதனால் தான் இந்த அத்தியாயத்தில் "சூரிய மலை" எனப்படும் ஓமானின் மிக உயர்ந்த சிகரமான "ஜபல் ஷாம்ஸ்" ன் அருமை பெருமைகளை எடுத்துக் கூறப் போகிறேன். வாசித்து முடித்த கணம் மூட்டை முடிச்சுக்களைக் கட்டிக் கொண்டு என்னோடு நீங்களும் மலையேறத் தயாராவது திண்ணம்.

அதற்கு முன்பு உங்களில் சாகச மனம் கொண்டோருக்காக இரண்டு இடங்களைப் பற்றிச் சுருக்கமாகப் பார்த்து விடலாம் சரியா?

முதலாவது "Al Mazare". அரபி மொழியில் "அல் மஸார்" என்றால் 'தோப்பு' அல்லது 'தோட்டம்' என்று பொருள். "மிஸ்ஃபாத்" தின் ஃபலஜ்ஜிற்கு வரும் நீரூற்றைப் பின் தொடர்ந்து சென்றால் வானுக்கும் மண்ணுக்கும் உயர்ந்து கிடக்கும் ஒரு மாபெரும் கணவாய்க்குள் நுழையலாம். வளைந்து நெளிந்து படுத்திருக்கும் ராட்சத பாம்பொன்றின் வாய்க்குள் புகுந்து வால் பகுதியை நோக்கிச் செல்வது போல மூன்று மணி நேரம் நடந்தால் நமது இலக்கை அடையலாம். இதயம் பலகீனமானோர், இரண்டு மாடிகளைக் கூட லிஃப்ட் இல்லாமல் ஏற முடியாதோர் கன்னத்தில் வைத்துக் கதை கேட்டு வாயைப் பிளப்பதோடு நிறுத்திக் கொள்ள வேண்டியது தான்.

ஓமானின் மிகச் சிறந்த சாகச அனுபவங்களில் இக் கணவாய்க்குள் நுழைந்து இலக்கை அடைந்து அங்கிருக்கும் ஒரு அழகிய வற்றாத குளத்தில் ஒரு குதியலைப் போடுவதும் ஒன்று. செல்லும் வழியில் ஒரு சில இடங்களில் ஒரே ஒரு அடி தப்பினாலும் மரணம் என்னும் படியான குறுகிய பாதைகளைக் கடக்க வேண்டும். கைப்பிடியாகக் கட்டப் பட்டிருக்கும் சங்கிலியைப் பிடித்துக் கொண்டு இறங்கி ஏற வேண்டும். “இத்தனை பாடு பட்டு அங்கு சென்று வருவது வொர்த்தா?” எனக் கேட்டால் “ஆம் நூற்றுக்கு இருநூறு சதவிகிதம் வொர்த்” என அடித்துச் சொல்வேன். இது போன்ற கணவாய்களின் முழு மெய்யழகை நாம் அங்கு சென்றால் மட்டுமே முழுமையாகப் புரிந்து கொள்ள முடியும்.

இரண்டாவது கணவாய் “ஜபல் ஷாம்ஸ்” ன் அடிவாரத்தில் உள்ள "வாதி நக்ஹர்” (Wadi Nakhr). “மிஸ்ஃபாத்” தில் இருந்து கீழிறங்கி “ஹம்ரா” நகரை அடைந்தவுடன், ரவுண் அபவுட்டில் இடது புறம் பிரியும் சாலையில் மேற்கு நோக்கிச் சென்றால் இருபது நிமிட பயணத்தில் “வாதி நக்ஹர்” ஐ அடையலாம். இந்த இடத்திற்கு “வாதி குல்” என்றொரு பெயரும் உண்டு.

தார்ச்சாலையில் இருந்து கணவாய்க்குள்ளே 7 கி. மீ தொலைவு வரை 4 x 4 வாகனத்தில் செல்ல முடியும். அங்கு ஒரு அழகிய தங்கும் விடுதி உள்ளது. இரவொன்றிற்குத் தங்க 20 ரியால்கள் கட்டணம். "வேற லெவல் வைப்” வேண்டுவோர் தவற விடக் கூடாத அனுபவம். அதிகம் பிரபலமடையாத யாருக்கும் தெரியாத கூட்டம் இல்லாத இடம். இரவின் ஏகாந்தத்தை அணுவணுவாக ரசிக்கலாம். ஒளி மாசற்ற காரிருளில் இருபுறமும் உயர்ந்து நிற்கும் கணவாய்க்குள் இருந்து வானில் மின்னும் நட்சத்திரங்களை நம்மில் எத்தனை பேர் தரிசித்துள்ளோம்?



அந்த விடுதியில் இருந்து ஒரு மணி நேரம் பாறைகளைத் தாண்டியும் சிறு குன்றுகளில் ஏறியும் ஒரு சிறு சாகசப் பயணம் செய்தால் மற்றுமொரு அழகிய நீர்க் குளத்தை அடையலாம். அடர் மரகதப் பச்சை நிறத்தில் கண்ணைப் பறிக்கும் அந்தக் குளமும் ஓமானின் அடைவதற்குக் கடினமான பொக்கிஷங்களில் ஒன்று. இன்று வரை அங்கு கூட்டம் இல்லை. உங்களுக்கே உங்களுக்கான தனித்த நிழற்படங்களை எடுக்கும் சூழல் இக்கணம் வரையில் இருக்கிறது. இன்னும் எத்தனை காலம் இப்படி இருக்கும் எனக் கூறவியலாது. குதிரை லாட வடிவக் கணவாயின் கடைமடையில் இருக்கும் இந்தக் குளம் இருக்கும் பகுதியே “வாதி நக்ஹர்” என்றழைக்கப் படுகிறது. இந்தக் கணவாயின் நுழைவாயிலுக்கு "வாதி குல்” என்று பெயர்.

அந்த வாதியின் நுழைவாயிலில் வலது புறத்தில் மக்கள் வாழும் நவீன வீடுகளையும் இடது புறத்தில் பச்சைப் பசேலென்ற வயல் வெளிகளையும் காணலாம். அந்த வயல்வெளிகளுக்கு சற்று மேலே பேரீச்சை மரத் தோப்புகளும் உண்டு. அந்த தோப்புகளின் ஊடே நடந்து மேலேறினால் பழைய கிராமத்தின் சிதிலமடைந்த கல் வீடுகள் காலத்தின் சாட்சியாக அமர்ந்து தங்கள் கண் முன் உருமாறும் மக்களின் வாழ்வை அமைதியாக அமர்ந்து ரசித்துக் கொண்டிருக்கின்றன. தங்களது கூரைகளை இழந்து புதர் மண்டிக் கிடக்கும் அந்தப் பெரும் பெரும் கற்களால் கட்டப்பட்ட வீடுகளைக் கடந்து தொடர்ந்து மேலேறினால் 9000 அடி உயரம் கொண்ட சூரிய மலையின் உச்சியை அடையலாம். அதுவும் வழி நெடுக இலக்கைத் தவற விட்டுவிடாமல் இருக்க மூவர்ணக் கொடி கொண்டு அடையாளமிடப்பட்ட மலைப் பாதை. கடந்த ஆண்டு தான் அப்பாதையின் வழி இருபகல்கள் நடந்து உச்சியை அடைந்து திரும்பினேன்.

என் பெருமை பீதாம்பரத்தை விட்டுத் தள்ளிவிட்டு உங்களை மேலே அழைத்துச் செல்லும் வழியைப் பார்ப்போம். “வாதி குல்” ன் உச்சியில் வாகனங்களை நிறுத்த வாகான ஓரிடம் இருக்கிறது. அங்கிருந்து பார்த்தால் பச்சைப் பசேலென்ற வயல்வெளிகள், பழைய கல் வீடுகள், புதிய குடியிருப்புப் பகுதி அவற்றின் பின்னணியில் உயர்ந்தும் நீண்டும் கிடக்கும் “சூரிய மலை” என மொத்தத்தையும் கண் குளிரக் கண்டு களிக்கலாம்.

மேற்கு ஹஜர் மலைத் தொடரின் மிகப் புகழ் பெற்ற சிகரங்கள் முறையே “ஜபல் அக்தர்”, "ஜபல் ஷாம்ஸ்” மற்றும் “ஜபல் ஹாத்”. இவற்றில் “ஜபல் அக்தர்” மற்றும் "ஜபல் ஹாத்” என்ற இரண்டு ஊர்களையும் ஏற்கனவே நிதானமாகச் சுற்றிப் பார்த்து விட்டோம்.

“ஜபல் அக்தர்” அளவிற்குப் புகழ் பெற்ற தலமெனினும் “ஜபல் ஷாம்ஸில்” நூறு குடும்பங்களுக்கும் குறைவாகவே வாழ்கின்றனர். இங்கு ஓரிரு சாதாரண ரிசார்ட்டுகளும் தங்குமிடங்களும் மட்டுமே உள்ளன. இது வரை இங்கு பெரிய சூப்பர் மார்க்கெட்டுகளோ, பெட்ரோல் பங்கோ, விதவிதமான உணவகங்களோ, பொதுக் கழிப்பிடங்களோ, மருத்துவமனைகளோ கிடையாது. அவ்வளவு ஏன் கடைசி வரை செல்ல வசதியான தார்ச் சாலை கூடக் கிடையாது.

ஆனால் தொடர்ந்து அதிகரித்து வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையால் இப்போது ஒரு மிகப் பெரிய சுற்றுலாத் தளமும் தங்கும் விடுதியும் சூரிய மலையின் உச்சியில் கட்டப் பட்டு வருகின்றன. அங்கு வரக்கூடிய விருந்தினர்களுக்கு வசதியாக இடைப்பட்ட பகுதியில் இருக்கும் மண் சாலையைத் தார்ச் சாலையாக மாற்றும் பணியும் நிகழ்ந்து வருகிறது.

அத்தனை கூட்டம் வரக்கூடிய அளவிற்கு அங்கு அப்படி என்ன இருக்கிறது என்ற கேள்விக்கு மூன்று பதில்கள் உள்ளன.

முதலாவது – குளிர். கடும் கோடையிலும்” ஜபல் ஷம்ஸ்” சில்லென்று தான் இருக்கும். டிசம்பர், ஜனவரி மாதங்களில் தட்பவெப்பநிலை 0 டிகிரி செல்சியஸைத் தொடும். வருடத்தில் ஓரிரு நாட்கள் பனி பொழிந்து, கட்டாந்தரைகள் வெண்ணிறப் போர்வையைப் போர்த்திக்கொள்ளும் அதிசயமும் நிகழ்வதுண்டு.

இரண்டாவது – காட்சியின்பம். ஓமானின் மிக உயர்ந்த சிகரமான ஜபல் ஷம்ஸ், ஒவ்வொரு நாளும் சூரியனின் பொன்னிறக் கதிர்கள் முதன்முதலில் முத்தமிடும் நிலப்பரப்புகளில் ஒன்றாகவும், மாலையில் ஆதவன் மேற்கில் மறையச் செல்லும்போது அவனது கதிர்கள் விடைபெறும் கடைசி நிலப்பரப்புகளில் ஒன்றாகவும் காட்சியளிக்கிறது. அதனால்தானோ என்னவோ, ‘சூரிய மலை’ என்று பொருள்படும்” ஜபல் ஷம்ஸ்” என்ற பெயர் இம்மலைக்குச் சூட்டப்பட்டிருக்கிறது.

2000 மீட்டர் அதாவது 6000 அடி உயரத்தில் நின்று “அரேபியாவின் க்ராண்ட் கான்யன்” என்றழைக்கப்படும் குதிரை லாட வடிவக் கணவாயைக் காணக் கோடிக் கண்கள் இருந்தாலும் பலனில்லை. அதுவும் அந்தக் கணவாயின் விளிம்பில் கூடாரமடித்துத் தங்கி சூரிய உதயத்தைக் காண்போர் பாக்கிய சாலிகள். அதனால் தான் அந்தி மயங்கும் நேரத்தில் குடும்பங்களாக இணைந்து பெரும் பெரும்



விண்மீன் மின்னிதழ்

வாகனங்களில் இராத்தங்களுக்குத் தேவையான அத்தனை சாமான்களையும் அள்ளிப் போட்டுக் கொண்டு கும்பல் கும்பலாக உள்ளூர்ச் சனம் இவ்விடம் நாடி வருகிறது. நல்ல குளிரில் நெருப்புக் கூட்டி, சுடுவான் சுட்டுக் கொண்டும் மெல்லிய இசையுடன் நட்சத்திரங்களின் கண்சிமிட்டலை ரசித்துக் கொண்டே அந்த ஏகாந்தத்தை அனுபவிப்பதும் பரம சுகம். இவ்வெழிலை ரசிக்க வெளிநாடுகளில் இருந்து வரும் பயணிகளுக்கு விடுதிகளில் தங்கி உற்சாக பானம் அருந்துவதைத் தவிர வேறு வழியில்லை.

மூன்றாவதும் இம்மலை வாசஸ்தலத்தின் புகழுக்கு முக்கியக் காரணியும் இது அளிக்கும் சாகச அனுபவங்கள். இவை அனைவருக்குமானவையல்ல. சாகச விரும்பிகளின் மனம் கவர்ந்த மூன்று மிக முக்கிய அம்சங்கள் “ஜபல் ஷாம்ஸ்” இல் இருக்கின்றன.

முதலாவது “அல் கித்யம்” என்ற 1900 மீட்டர் உயரத்தில் இருக்கும் கிராமத்தில் இருந்து குதிரை லாட வடிவ வலது புற கணவாய்ச் சவற்றின் விளிம்பில் நடந்து அக் கணவாயின் மையத்தில் இருக்கும் ஒரு கைவிடப்பட்ட கிராமத்தை அடைவது. “ஜபல் ஷாம்ஸ்” காட்சி முனையில் இருந்து “அல் கித்யம்” என்ற அக் கிராமம் இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது.

அல் கித்யத்தில் இருந்து கீழிறங்கும் பாதை நம்மை "சப் பானி ஃகாமிஸ்" என்ற அந்த கைவிடப்பட்ட புராதான கிராமத்திற்கு அழைத்துச் செல்லும். கடல் மட்டத்தில் இருந்து சுமார் 1500 மீட்டர் உயரத்தில் அமைந்திருக்கும் அக்கிராமத்தில் மனிதர்கள் வீடுகட்டி, நீர்பாய்ச்சி, விவசாயம் செய்து வாழ்ந்து வந்ததற்கான அடையாளங்களை இன்றும் காணலாம்.

அந்தக் கிராமத்தின் குடியிருப்புப் பகுதிக்கு மேலே ஒரு பெரிய தட்டையான கூரை போன்ற பகுதி உள்ளது. அந்தக் கூரையின் மேற்புறம் ஒரு வற்றாத குளம் இருக்கிறது. அந்தக் குளத்தைச் சுற்றி வந்து பாறைகளைத் தாண்டி அதன் மேல் புறத்தை அடைந்தால் அங்கொரு அழகிய குகையிருக்கிறது.
அந்தக் கிராமத்தையும், குளத்தையும், குகையையும் கண்டடைந்து திரும்புவது வாழ் நாளில் என்றும் மறக்கவியலாத அனுபவமாக இருக்கும். இந்தத் தடத்தில் நடக்கத் துணிந்த ஒவ்வொருவரும் மீண்டும் தங்களது வாகனத்தை அடையும் போது குறைந்தது நூறு நிழற்படங்களையாவது சுட்டுத் தள்ளியிருப்பர். இந்தப் பாதைக்கு "பால்கனி வாக்" என்று பெயர். இதுதான் ஓமானின் மிகப் புகழ் பெற்ற ட்ரெக்கிங் ரூட். ஏழெட்டு வயது சிறுவர்கள் முதல் எழுபது வயது பெரியவர்கள் வரை மனத்திடம் கொண்ட இயற்கை ஆர்வலர்கள் அனைவரும் இந்தப் பாதையில் நடந்து இலக்கை அடைய முயற்சி செய்வது வழக்கம். மிக மிக மெதுவாக நடப்போருக்குப் போக வர ஏழெட்டு மணி நேரம் பிடிக்கும். தொடர்ந்து உடற்பயிற்சி செய்து ஃபிட்டாக இருப்போருக்கு 4 முதல் 5 மணி நேரம் போதும்.

கொஞ்சம் தீவிரமான “சதுரகிரி” மற்றும் “வெள்ளியங்கிரி” போன்ற மலைகளில் ஏறிப் பழக்கப் பட்டோர் கீழே “வாதி குல்” லில் இருந்து நடக்கத் துவங்கினால் 5 முதல் 7 மணி நேரத்தில் 7 கிலோ மீட்டர்களைக் கடந்து “அல் கித்யம்” கிராமத்தை அடையலாம். அங்கிருந்து சப் பானி ஃகாமிஸை அடைய மேலும் 3 மணி நேரம் பிடிக்கக் கூடும். இரவு குகையில் தங்கி இளைப்பாறிவிட்டுக் காலையில் திரும்பலாம்.

அல்லது அந்தக் குகைக்கு மேலே பாறையில் நெட்டுக் குத்தாக 250 மீட்டர் உயரத்திற்கு பாறைச் சவற்றில் படிக்கட்டுகள் போலப் பதிக்கப் பட்டுள்ள கம்பிகளில் கால் வைத்து இரும்புக் கைப்பிடியைப் பிடித்துக் கொண்டே மெதுவாக மேலேறிக் காட்சி முனையை அடையலாம். ஆனால் அதற்குத் தேவையான தலைக்கவசம், இடுப்புப் பட்டை, பாதுகாப்புச் சங்கிலி போன்ற உபகரணங்களும் வழிகாட்டியும் தேவை. குறைந்த பட்சம் ஒரு நபருக்கு 5000 ரூபாய் செலவாகும். இது இரண்டாம் நிலை சாகசம்.



இந்த இரண்டு சாகசங்களுக்கும் பெரியண்ணன் ஒருவர் இருக்கிறார். அது “ஜபல் ஷம்ஸ்” காட்சி முனைக்கு அருகில் உள்ள “சமா” ரிசார்ட்டில் இருந்து 12 கிலோ மீட்டர் நடந்து 3000 மீட்டர் உயரத்தில் உள்ள சிகரத்தை அடைந்து திரும்புவது. விடியற் காலையில் நடக்கத் துவங்கினால் இருட்டுவதற்குள் ரிசார்ட்டிற்கு வந்து விடலாம். வழியில் குடிநீர் கூடக் கிடைக்காது. ஆயிரம் மீட்டர் ஏற்றம். ஐந்தாறு லிட்டர் தண்ணீரைச் சுமந்து கொண்டு நடக்க வேண்டும். நாக்குத் தள்ளி விடும். மேலே தங்கி மறுநாள் காலை கீழிறங்க வேண்டுமெனில் தங்குவதற்குத் தேவையான கூடாரம், ஸ்லீப்பிங் பேக் மற்றும் உணவுப் பொருட்களையும் சேர்த்துச் சுமக்க வேண்டியிருக்கும்.

ஆனால் ஓமானுக்கு வரும் சாகசப் பிரியர்கள் அனைவரது பக்கெட் லிஸ்ட்டிலும் தவறாது இடம் பெறக் கூடிய ஒரு அம்சம் இந்தச் சிகரத்தின் உச்சியில் பதிக்கப் பட்டிருக்கும் வட்ட வடிவ ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் வரைபடத்தை முத்தமிட்டுத் திரும்புவதே!!!

நிஸ்வாவிற்குக் கிளம்பும் முன் இவற்றில் உங்களுக்குத் தகுந்தவை எவை என முடிவு செய்து விட்டு வரவும். நீங்கள் ரெடியெனில் உங்களை நீங்கள் விரும்பும் சாகசப் பயணத்திற்கு அழைத்துச் செல்ல நான் ரெடி.

(தொடரும்)

# மாதரசி

## இராஜாராம், முகவை

மாதரசி சிறுகதைத் தொகுப்புக்கான விமர்சனம் என்பதைவிட திறனாய்வு என்று சொல்வது சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன். இதில் மொத்தம் 12 சிறுகதைகள் உள்ளன. அண்ணன் பரிவை சே குமார் அவர்களின் எழுத்தை முதலில் ருசி பார்க்கும் சபரி நான் என்பதில் எப்பொழுதும் மகிழ்வுதான்.

'ஆதிரை' - இதைச் சுருங்கச் சொல்வதென்றால், காலச் சூழல்களால் பிரிந்த இருவர், காலக்கொடுமையால் சந்திக்கும் தருணத்தில் இறுக்கம் தளர்ந்து வெடித்து அழும் ஆதிரைதான் இக்கதையின் ஆணிவேர். எல்லா நேரங்களிலும், எல்லோரும் எடுக்கும் முடிவு சரியாக அமையும் என்பது சந்தேகம்தான். ஆனால், அந்த முடிவுகளால் யாருக்கும் எந்த பாதிப்பும் இல்லையெனில் அதற்கான தியாகத்தை செய்த நாம் மட்டும் உணர்ந்து கொண்டால் போதும், என்பதற்கு 'உங்க கண் முன்னால சந்தோசமா வாழ்றேன்'னு சொல்லி வந்த ஆதிரையின் வார்த்தை, அவள் பெருங்குரலெடுத்து அழுதபோது மனதை ஏதோ செய்தது.

'பொண்ணச்சி' - வீட்டில் வளர்க்கும் மாட்டின் பெயர்தான் 'பொண்ணச்சி', இது ஒரு வித்தியாசமான கதை. கிராமங்களில் ஆடு, மாடு வளர்ப்பவர்கள் வீடுகளில் நடக்கும் நிகழ்வுதான் என்றாலும், இதை வாசிக்கும்போது எனக்கு நினைவுக்கு வந்த விடயம் பெருநகரங்களில் மட்டுமே நாம் கண்ட கருத்தரிப்பு மையம், இப்போது சிறு நகரங்களிலும் வந்து விட்டது. இந்தக் கொடுமையை முதலில் அனுபவித்தது கால்நடைகள்தான். மாடுகள் சினை பிடிப்பதற்காக சினை ஊசிகள் போடத்துவங்கிய நிலை, இது மனிதர்களையும் பீடிக்கும் என்று யாரும் நினைத்து பார்த்திருக்க மாட்டோம். குழந்தை இல்லாதவர்களை (குறிப்பாக பெண்களை) என்னென்ன பேசுமோ அதற்கு சற்றும் குறைவில்லாமல் பொண்ணச்சியை வைத்து ஒரு சமூகப் பார்வையாகத்தான் எனக்குப் பட்டது.

'தர்ஷினி' - இது இரண்டு பெண்களின் கதை என்று சொல்லலாம். கண்ணன் அவ்வளவு உடைந்து அழுகக் காரணம் அவனுக்குச் சத்யாவும் அண்ணி மாதிரிதான். அண்ணனின் மனைவி இன்னொரு தாய்தான். என்ன... அவர்கள் வயதில் மூத்தவர்களும் இருக்கலாம், சிறியவர்களாக இருக்கலாம். இங்கே நாயகனின் அண்ணன் மனைவிதான் தர்ஷினி. அதைவிட அவள் அவனின் சொந்த அத்தை மகளும் கூட. அதனால் சிறு வயது முதலே நன்கறிந்த சுபாவம். இதில் தர்ஷினி, கண்ணனின் பிரச்சைனையை அணுகும் விதத்தையும், அதைச் சரிசெய்ய கையாளும் விதத்தையும் மிக அழகாக எழுத்தாண்டிருக்கிறார் ஆசிரியர்.

'தாரணி' - குடும்ப உறவுகளைப் பற்றிய கதைதான், இன்று நாம் பார்த்து வியக்கும், புள்காங்கிதம் அடையும் விடயங்கள் மனிதனின் இயல்பு குணங்களே, அதை மிக சொற்பமான மனிதர்களிடம் காணும்போது இப்படியெல்லாம் இருந்திருப்பார்களா என்று நாமே அதிசயமான விவாதிக்கிறோம். தன்னை வெறுக்கும் மாமனார், மாமியாரை எப்படி உள்ளன்போடு பார்த்துக் கொள்கிறாள் தாரணி என்பதுதான் கதையின் சாரம். என்னதான் மனதிற்குள் இருந்தாலும் தன் மரணத்திற்கு முதல்நாள்தான் சதாசிவம் தன் தவறை உணர்ந்து மருமகளிடம் கண்கலங்கி பேசும்போது நமக்கே கண்ணீரை வரவைத்து விடுகிறது.

'வேணி' - இந்தக்கதை நிகழும் நிலப்பரப்பையும், அதன் அழகியலையும், தற்போது அதைக் கபளீகரம் செய்துள்ள கருவேல மரங்களையும் பற்றி எழுத்தாளர் சொல்லும் விதம் அருமை. கதையின் ஆரம்பத்தில் நம்மை ஒரு கிராமச் சூழலுக்குள் கூட்டிச் செல்கிறார். இந்தக் கதைக்கு கண்மணி என்று வைத்திருந்தாலும் பொருத்தமாக இருந்திருக்கும். தகப்பன், மகங்களுக்கு நடுவில் தவிக்கும் தாய் கமலாவின் பெயருமே பொருந்தித்தான் போயிருக்கும். இந்த மூன்று கதாபாத்திரங்களுமே ஒவ்வொருவரின் வாழ்வியலைப் பிரதிபலிக்கிறது. அத்தனை சிறப்பு.

'மாதரசி' - மனதிற்கு மிக நெருக்கமான கதை, மாதரசியை ஒருபடி மேலே உயர்த்தி பிடித்தது ரெங்கையாதான், தன் அத்தாச்சியை பெத்த தாயாக நினைத்து ஊரார்முன் சொல்லும் விடயம் நம்மையும் கலங்க வைத்து விடும். தொடக்கத்தில் கேலியும், நகைச்சுவையாகவும் நகர்ந்தாலும் வாசித்து முடிக்கும்போது மனம் கனத்துதான் போகிறது.

'கனி' - சில கதைகள் நம்முடைய பால்ய கால நினைவுகளை கொண்டு வரும். அதுபோன்ற ஒரு கதைதான் கனி. காலச்சூழலில் நடக்கும் துக்கமான சம்பவங்களால் நம்மையே நாம் வெறுக்கும் அளவுக்கு இந்தச் சமூகம் நம்மீது குறிப்பாக பெண்கள் மீது வைக்கும் அவநம்பிக்கைகளை மிக அருமையாக சொல்லியிருக்கிறார். நம்மோடு நன்றாக பேசிப் பழகியவர்கள், ஒரு கட்டத்தில் நம்மை மறந்து போவதும், நம்மை வேறொரு ஆளாக பார்ப்பதும், எங்கோ சாரல் போன்ற நினைவுகளால் நம்மை நாமே மீட்டெடுப்பதெல்லாம் கொடுப்பினைதான்.

'உமையாள்' - உறவுகளையும், கூட்டுக்குடும்ப வாழ்வையும் அருமையாகச் சொல்லி, அதனூடே மெலிதாக காதலையும் காட்டி, ஒற்றை வரியில் குறட்டை இல்லாத உறக்கதோடு காளிமுத்துவின் முடிவைச் சொல்லி பெருஞ்சுமையாக முடித்திருப்பார்.

'ஜெனி' - காதல், பிரிவு, மரணம் என்று கலந்து முடியும்போது ஒரு உலுக்கு உலுக்கி விடுகிறது. தனியாக வாசிக்கும்போது இது ஒரு ஆண் எழுத்தாளரின் கதையா என நமக்கே ஒரு சந்தேகம் வரும். அவ்வளவு உணர்வுகளை அள்ளி இறைத்து இருக்கும் அருமையான கதை! எனக்கு மிகவும் பிடித்த கதைகளில் இதுவும் ஒன்று.

'புனிதா' - கரகாட்டம் ஆடுபவர்களின் நிலையையும், அதோடு மக்களின் மனநிலை எவ்வாறு உள்ளது என்பதையும் அப்பட்டமாக பதிவு செய்துள்ள கதை! தற்போதைய கரகாட்டம் எவ்வளவு மோசமாக மாறியுள்ளது என்பதையும் கொஞ்சம் விரசமாகவே நிதர்சனத்தை சொல்லியுள்ளார். குறவன், குறத்தி உரையாடல், பார்வையாளர்களின் மனநிலை என அனைத்தையும் பேசுகிறது.

'புவனா' - இந்தக் கதையை எழுத்தாளரே சொல்ல ஆரம்பிப்பது போலத்தான் எனக்கு முதலில் தோன்றியது, வாசிக்க... வாசிக்க நம்மை அந்த இரயிலில் பயணிக்க வைக்கிறது. வாழ்க்கையை அதன் போக்கில் நாம் பயணிக்கும்போது, பல பாடங்களை கற்றுத் தருகிறது. பயணங்களினூடே




நினைவுகளை கிளறிப் பார்க்கும் சிறுகதை அருமை!

'தஸ்ரீன்' - எனக்கு மிகவும் பிடித்த கதை இது. இந்த உலகில் பெண் என்பவள் பேரியற்கை, உலகிலேயே மிகப்பெரிய தலித் இனமும் பெண்தான், அதைவிட மிகப்பெரிய நாத்திகவாதிகளும் பெண்கள்தான், ஏதோ சம்பிரதாயங்களுக்காக கடவுள் நம்பிக்கை, மத நம்பிக்கை என்று இந்த சூழல் அவர்களை அடக்கி வைத்திருக்கிறது. தஸ்ரீன் மாதிரியும், அவரது தாயார் மாதிரியுமான ஆட்களை நான் நேரில் பார்த்திருக்கிறேன். அவர்களின் வேகமும், துணிச்சலும் எந்த ஆண்களுக்கும் வராது.

இந்த பனிரெண்டு கதைகள் அடங்கிய சிறுகதைத் தொகுப்பு ஜூலை மாதம் கேலக்ஸி பதிப்பகம் மூலமாக துபாயில் வெளியிடப்பட்டது. அருமையான தொகுப்பு அனைவரும் வாசிக்க வேண்டும். எப்பொழுதும் அண்ணன் எழுத்தாளர் குமார் அவர்களின் எழுத்தில் நிலமும், நில மாந்தர்களும் நம் கண்முன்னே உலாவுவார்கள் அப்படி நம்மைக் கூட்டிச் செல்லும் அவரது எழுத்தில் பதிமூன்றாவது புத்தகமாய் 'மாதரசி'.

# சின்ன சின்ன ஆசை (மலையாளம்)

**பரிவை சே. குமார்**

தமிழகத்தில் லோகேஷ் கனகராஜ் போன்ற இயக்குநர்கள் இளம் தலைமுறையினரைக் கெடுக்கும் வண்ணம் படம் எடுத்துக் கொண்டிருக்கும் போது மலையாளத்தில் இளம் தலைமுறை இயக்குநர்கள் ரத்தமும் போதையும் இல்லாமல் அழகிய சிறுகதையாய் படத்தை எடுத்து முடித்து விடுகிறார்கள். மலையாளத்தில் வந்த மார்க்கோ என்னும் வன்முறை ரத்தக் களறி படத்துக்கு வந்த எதிர்ப்பின் காரணமாக அதன் இரண்டாம் பாகம் எடுக்கப்படாமல் கைவிட்டப்பட்டு விட்டது என்று என்னுடன் வேலை செய்யும் மலையாளி சொன்னார். அது உண்மைதான், முதல் பாகத்திற்கு வந்த எதிர்ப்பைத் தொடர்ந்து நாயகன் உன்னி முகுந்தன் இரண்டாம் பாகத்தில் இருந்து விலகிவிட்டார். அரசும் இந்தப் படத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தது. தொலைக்காட்சிகளில் ஒலிபரப்பும் சாட்டிலைட் உரிமமும் கொடுக்கப்படவில்லை. ஆனால் இங்கோ நிலமை வேறு, நாம் அப்படிப்பட்ட படங்களின் நாயகர்களைத்தான் கொண்டாடுகிறோம், அவர்களின் பிறந்தாளன்று பால்கனியில் இருந்து கைகாட்டுவதைக் காண நாயாய் தெருவில் நிற்கிறோம். அரசியல் காரணங்களுக்காக அப்படிப்பட்ட படங்களுக்கு விருதுகள் கொடுக்கப்படும் அவலமும் நடக்கிறது. நான் வன்முறைப் படத்தைத்தான் எடுப்பேன் என அவர்களை பேசவும் வைக்கிறது; போதையை இறக்கி வைத்துக் கொண்டு அரசுக்கு எதிராக பேசவும் வைக்கிறது; நாளைய முதல்வர் என்ற கனவைச் சுமந்து இளைஞர்கள் மத்தியில் நஞ்சையும் விதைக்க வைக்கிறது.

இந்த 'சின்ன சின்ன ஆசை' படத்தை பாராட்டியோரை விட இதெல்லாம் ஒரு படமா என்று சொல்வோர் இங்கே அதிகம். முன்னத்தி ஏர் செல்லும் பாதையில் செல்லாமல் கோணச் சாலடிக்கும் மாட்டைப் பற்றிப் பேசுவோரே இங்கே அதிகம் என்பதால் அப்படியான விமர்சனம் வைத்தால் தன்னைப் பற்றி சிலராவது பேசுவார்கள் என்று நினைத்து எழுதியோர் மத்தியில் ஒரு சிலர் சொன்ன போதாமைகள் இதில் இருக்கத்தான் செய்கின்றது இல்லை என்று சொல்லவில்லை, அப்படியே இருந்தாலும் எந்த ஒரு வன்முறையும் இல்லாமல் நாவலைப் போல் விரியும் இந்தப் படம் என்னைப் போன்றோருக்கு மிகவும் பிடித்த படமாய் ஆனதில் வியப்பேதும் இல்லை. சுற்றுலா போன இடத்தில் கூட்டிச் சென்றவர் மத்தியில் யாரோ ஒரு முன்பின் தெரியாத மனிதன் கைபிடித்து அழைத்துப் போவதெல்லாம் அபத்தம் என்று சொன்னவர்கள் உண்டு, ஆம் அபத்தம்தான். அந்த சுற்றுலாக் குழுவில் அவளைப் பிடித்தவர்கள் எத்தனை பேர்..? தான் பழகிய அந்த சில மணி நேரங்களில் அந்த மனிதரின் அன்பு ஆத்மார்த்தமானதாய் இருக்கும் போது அவள் அவனுடன் போவதில் என்ன தவறு..? சுற்றுலா கூட்டிவந்தவர்கள் ஏன் காவல்துறையிடம் போகவில்லை..?

விண்மீன் மின்னிதழ்

மதுபாலாவின் குரல் படத்தைக் கெடுத்துவிட்டது என்றும் சொல்லியிருந்தார்கள். எனக்கு அந்தக் குரல் பிடித்திருந்தது. தன் ஆசைகள் எதுவும் நிறைவேறாத ஒரு பெண் தன் ஆசைகளைப் பகிர்ந்து கொள்ளக் கிடைத்த நட்புடன் பேசுவதற்கு அந்தக் குரல் எந்த விதத்திலும் தடையாக இல்லை, இங்கே குரல் பிரச்சினை இல்லை மதுபாலாவுக்குப் பதிலாக வேறு யாரையாவது போட்டிருக்கலாமே என்ற எண்ணம்தான் காரணம். நான் கூட இவர்கள் எல்லாம் சொல்வதை வைத்துப் பார்க்கும் போது யாரோ ஒரு மலையாளி பேசியிருக்கலாம் அதனால் கூட அந்தக் குரல் ஒட்டாமல் போயிருக்கலாம் என நினைத்தேன்; பேசியதே மதுபாலாதான். நமக்கு குரல் எல்லாம் ஒரு பிரச்சினையே இல்லை; கதை ஒட்டுகிறதா அது போதும் மீண்டும் மீண்டும் பார்ப்பதற்கு.

மதுபாலாவுக்கு நடிக்க வரவில்லை; பேச்சு சரியில்லை என்றெல்லாம் சொல்லியவர்களைவிட இந்திரன்ஸ்க்கு சுத்தமா நடிக்கத் தெரியலை என்று சொன்னவர்களைப் பார்த்துத்தான் சிரித்துக் கொண்டேன். மலையாளிகளிடம் கேட்டுப்பாருங்கள் இந்திரன்ஸ் எப்படிப்பட்ட நடிகர் என... இங்கே கத்தியை எடுத்து கொத்துக்கறி போடுபவனைத் தூக்கிக் கொண்டாடும் நாம் இந்திரன்ஸ்க்கு நடிக்கத் தெரியவில்லை என்பது எல்லாம் எப்படியான நகை முரண். அந்த மனிதர் நடித்த

பழைய படங்களை ஒருமுறை பாருங்கள். தனது வித்தியாசமான உடம்பை வைத்துக் கொண்டு அவர் எப்படி நடித்திருக்கிறார் என்பது தெரியும்.

இன்னொன்னு அவர் மகளுக்கு எடுத்த சேலையை இந்தம்மா கட்டிக்குது என்ற பஞ்சாயத்து வேறு. அவர்கள் சேலைக் கடையில் சேலை எடுக்கும் காட்சியில் ஒண்ணு எடுத்தால் ஒண்ணு இலவசம் என்று எழுதியிருப்பதை பார்க்கத் தவறிவிட்டார்கள் என்று நினைக்கிறேன். அவளுக்கு அந்தச் சேலையின் மீது விருப்பம் என்றதும் அதை எடுத்துக் கொள் என்று சொல்வார். ஒரு சேலை வாங்கும் செலவில் இரண்டு சேலைகள் எடுத்து வருவார்கள். அதைத்தான் அவள் கட்டியிருப்பார்கள். நாங்கள் எப்போதும் குறை மட்டுமே கண்டு கொண்டிருப்போம் என்போரை ஒன்றும் சொல்ல முடியாதுதான். எல்லாருக்கும் எல்லாம் பிடிக்கும் என்றும் சொல்ல முடியாதுதான்; எனக்குப் பிடிக்கும் என்பதால் உனக்கும் பிடிக்க வேண்டும் என்று கூட சொல்ல முடியாதுதான்; நான் ஆதரிக்கிறேன் என்பதால் நீயும் கண்ணை மூடி ஆதரிக்க வேண்டும், இல்லை என்றால் நீ செத்துப்போ என வீணாப்போன அரசியல்வாதிகள் பேசுவதைப் போல் பேசவும் முடியாதுதான். ஆனால் இங்கே எனக்குப் பிடித்ததை உனக்குப் பிடிக்கணும்; எனக்குப் பிடிக்காததை உனக்கும் பிடிக்கக் கூடாது என்பதுதான் பலரின் மனநிலை. சரி விடுங்க.

அந்த ஒருநாள் வாரணாசியை அத்தனை அழகாகக் காட்சிப்படுத்தியிருப்பார்கள். அதுவும் இரவுக் காட்சிகளில் வாரணாசி அத்தனை அழகு. இந்திரன்ஸ் மற்றும் மதுபாலாவுக்கான காட்சிகள் அத்தனையும் அழகு, அற்புதம். அதுவும் அந்த இரவில் கங்கையில் படகில் படுத்துக் கொண்டு பேசும் காட்சி; ஆஹா எத்தனை அழகு, அற்புதம். வசனங்கள் அத்தனை சிறப்பு.

மனைவியின் அஸ்தியைக் கரைக்கும் வரும் விஷ்ணு அகஸ்த்யா, அது தட்டிவிடப்பட்ட உடைந்த பின் கோபம் கொள்வதும் மதுபாலா ஆறுதல் சொல்லும் போது அவரின் கையைப் பிடித்துக் கொண்டு தன் கதையைச் சொல்லும் இடம் வலி. அதேபோல் மதுபாலாவுக்கு நடனத்தில் ஆர்வம் இருந்தும் அதை யாரும் கண்டு கொள்ளாத நிலையில் கங்கைக் கரையில் நள்ளிரவில் இந்திரன்ஸ் மூலமாக நடனமாடக் கிடைக்கும் வாய்ப்பும் அவரின் நடனமும் கவிதை.

படத்தின் முடிவு வருத்தமே என்றாலும் இப்படித்தான் இருக்க வேண்டும் எனச் சொல்ல வைத்தது.



இந்திரன்ஸ், மதுபாலா தவிர, இந்திரன்ஸ் மகளாக நடித்த அபர்ணா, மதுபாலாவுக்கு சிறிது நேரம் உதவுபவராக வரும் ஜாபர், தம்பி ராமையா, காளிவெங்கட் உள்ளிட்ட அனைவரும் தங்களது கதாபாத்திரத்தை மிகச் சிறப்பாகச் செய்திருந்தார்கள்.

படத்தின் இசை கோவிந்த் வசந்தா, அற்புதம் என்ற ஒற்றை வார்த்தையில் முடித்துக் கொள்ளலாம். அதேபோல் ஒளிப்பதிவு ஃபைஸ் சித்திக், வாரணாசியை இத்தனை அழகாய் காட்டியிருப்பதில் நம் மனதை வென்றிருக்கிறார்.

இந்தப் படத்தை இயக்கிய இருப்பவர் வர்ஷா வாசுதேவ், இது இவருக்கு முதல் படம். ஒரு அழகான கதையையும் அற்புதமான காட்சியமைப்புக்களையும் கொடுத்ததற்காக அவருக்கு வாழ்த்துகள். இந்த இளம் இயக்குநர் இன்னும் சாதிக்கட்டும்; ஒரு பெண் எடுத்த படத்தை நல்ல படமெனச் சொல்வதா என ஆண் ஆதிக்க எண்ணம் கொண்ட பலரின் பதிவுகளைப் பார்க்க நேர்ந்தது வருத்தமே. இவரைப் போன்ற இன்னும் பல பெண்கள் படங்களை இயக்க வேண்டும். அதுவும் சிறப்பான படங்களை இயக்க வேண்டும்.

படத்தின் கதை இதுதான் என்று சொல்வதைவிட, கதையைத் தெரிந்து கொள்ளாமல், படத்துக்கு வந்த நேர், எதிர் விமர்சனங்களை வாசிக்காமல் படத்தைப் பாருங்கள். அதுவும் எந்தவித இடையூறும் இல்லாமல் தனிமையில் பாருங்கள் ஒரு அழகிய நாவலை வாசித்த அனுபவத்தைப் பெறுவீர்கள்.

வாரணாசியும், மாதவன் மாஸூம் லீலாவும் அத்தனை அழகு.

சின்ன சின்ன ஆசை - அற்புதம்.

# கலை

முத்தாலம்மன் சிலை...
பட்டாளம்மன் சிலை....
கன்னிமார் சிலை....
கருப்பசாமிசிலை...
அய்யனார் சிலை...
குதிரை வாகனம்...
சிங்க வாகனம்...
எல்லாம் செய்த கைகள்
இன்று
புரோட்டா ஸ்டாலில்
மாவு பிசைகின்றன..!

விண்மீன் மின்னிதழ்

இரா.தங்கப்பாண்டியன்

GALAXY BOOK
SELLERS & PUBLISHERS

WE BRING BOOKS TO HOME

WWW.GALAXYBS.COM



Whatsapp 9994434432

